ஆலய வழிபாடு

நாச்சம்மை சிவராமன்



பாவை நிலையம்

கற்றதனாலாய பயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழார் எனின் —திருக்குறள்

ஆலய வழிபாடு

நாச்சம்மை சிவராமன்

பாவை நிலையம்
காரைக்குடி

பாவை—3
முதற்பதிப்பு—டிசம்பர் 1990.

Title	:	Aalaya Vazhipadu
Editor	:	Nachammai Sivaraman.
Language	:	Tamil
Subject	:	Temple Worship.
Book Size	:	Crown 8 Vo
Pages	:	168
Edition	:	First Edition December 1990
Publisher	:	PAAVAI NILAYAM KARAIKUDI-623001
Price	:	Rs. 18/-
Printers	:	Sri Gomathi Achagam, Madras-5
Cover Design	:	Valli

உ

ஆலய வழிபாடு

உடலுக்கு உணவு அவசியம். அதேபோல் உயிருக்கு உள்ளத்து நெகிழ்ந்த வழிபாடு இன்றி யமையாததாகும்.

உலகத்தில் உள்ள உயர்திணை, அஃறிணைப் பொருள்கள் யாவற்றையும் சூரிய சந்திர இயக்கத்தையும் ஆக்கிப் படைக்கும் பொருள் ஒன்று இருத்தல் வேண்டுமல்லவா? அவ்வுயரிய பொருளே பரம்பொருள்-கடவுள்என்று அறிவுடைய யாவரும் ஏற்பதாகும்.

மழை நீர் மலையிலிருந்து பாய்ந்து செல்கிறது. பாய்ந்து செல்லும் இடந்தோறும் அந்த மழை நீர் வெவ்வேறு பெயர் பெறுகிறது. பரம்பொருளும் அந்தந்த மக்கள் போற்றுகிறபடி சிவனென்றும், திருமால் என்றும், பரம பிதா என்றும், அல்லா, என்றும் அழைக்கப்படுகிறதை நன்றாக உணரலாம். பல்வேறு இடங்களில் பாய்ந்து

செல்லும் ஆறுகள் அனைத்தும் கடைசியில் கடலைச் சென்று அடைகிறதை நாம் பார்க்கிறோம். அதைப் போல பல்வேறு சமயத்தினருக்கும் கடவுளையே அடைய வேண்டுமென்பது தான் முடிவான கொள்கையாகும்.

இறைவனையடைய எல்லாச் சமயத்தினரும் வழிபாட்டு முறையை ஒரு சிறந்த சாதனமாக, குறிக்கோளாகக் கொண்டுள்ளனர் என்பது ஐயப்பாடில்லாத உண்மையாகும்.

உடலை வளர்க்க சத்தான உணவு ,தேவை. அதைப் போல உயிரை வளர்க்க, புலன்களின் அழுக்கை அகற்றி தூய்மையாகப் பக்குவப்படுத்திக் கொள்ளவேண்டும். கோபம், பொறாமை, வஞ்சனை,பேராசை முதலிய மாசுகளை - அழுக்குகளை அகற்றிவிட வேண்டும். எண்ணுதல், சொல்லுதல், செயல்படுதல் ஆகிய மூன்றும் தூய்மையாக இருக்க வேண்டும்.

> புறந் தூய்மை நீரான் அமையும் அகம் தூய்மை
> வாய்மையால் காணப்படும்.

என்ற வள்ளுவர் வாக்கான திருக்குறள் தெளிவுறுத்துகிறது.

பாசிகள் நிறைந்தது குளத்தில் ஒரு கல்லைப் போட்டால் கல் விழுந்த இடத்தைச் சுற்றிலும் பாசி அகன்று நீர் தெளிவு பெறும். அதைப் போல வழிபாடு செய்யும் மனம் மாசு அகன்று தெளிவடையும். ஒரு கல் விழுந்ததால் விலகிய பாசி மீண்டும் வந்து நீரை மூடிக்கொள்ளும். அதனால் ஒரு பொழுதுசெய்கிற வழிபாட்டினால் சிறிது தெளிந்த மனம் மீண்டும் மாசு பற்றும் நிலை எய்திவிடும். அதனால் முழுமையாக மாசு அற வாழ் நாள்

முழுதும் இடைவெளியின்றி வழிபாடு செய்து மனத்தையும் உயிரையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்.

**அழுக்காறு,அவா,வெகுளி,இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.**

என்பது திருக்குறள். ஆகவே மனம் மாசுபடாமல் இறையருளைப் பெறுவதற்கு இறைவழிபாடு மிக இன்றியமையாததாகும்.

மனிதனாகப் பிறந்த யாவரும் தவறு செய்பவர்களே, ஆனால் குற்றம் செய்வதே வாழ்நாள் முழுவதும் ஒரு வழக்கமாக ஆகிவிடக் கூடாதல்லவா? நாள்தோறும் சிந்திக்க வேண்டும். அறிந்து செய்த பிழைகள், அறியாமல் செய்த பிழைகள் இவற்றைக் கருத்தில் கொண்டு இனி இம்மாதிரியான குற்றங்களுக்கு ஆளாகாமல் திருந்திவிட வேண்டுமென்று ஒருமுறைக்கு இருமுறை சிந்தித்து சீர்தூக்கிப்பார்த்துச் செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் மனிதப் பிறவியின் பயன் பெற முடியும். இந்தச் சிந்தனை வளர்வதற்கு வழிபாடு வகை செய்யும்.

வழிபாட்டில் தனக்காகவும் - ஒருபடி மேலாகப் பிறர் நலனுக்காகவும் வேண்டுதல் தான் முறையாகும். புத்தர், இயேசு, நபிகள் நாயகம், மகாத்மா காந்தியடிகள் போன்ற அருட் செல்வர்கள் பிறர் நலங்கருதித் தான் வழிபாடுகள் செய்து சிறப்புப்பெற்றார்கள் என்று நாம் அறிகிறோம். அவர்களுடைய நாள்தோரும் அமைந்த வாழ்க்கைகளும் நமக்கு வழிகாட்டியாக ஒளிபரப்புகின்றன.

வழிபாடு செய்வதற்கு ஏற்ற இடங்கள் பல. முதலில் நம் வீடே நமக்குக் கோயில். தலைவன், தலைவி, பிள்ளைகள் யாவரும் ஒருங்கிணைந்து

வழிபாட்டில் ஈடுபடுதல்தான் சிறந்த முதல்படி. "அறத்தால் வருவதே இன்பம்" என்ற குறிக்கோளுடன் செயல் முறைகள் நம் வாழ்வில் தொடங்கப்படவேண்டும். உள்ளப் பெருங்கோயில் நிறைவு பெற, ஆலயங்களுக்குச் சென்று வழிபடுதல் பிறர் நலம் காணும் பண்பு வளரப் பயிற்சி தரும்.

ஆலயங்கள் அமைக்கப்பெற்றது நாடு நலம் பெறவே ஆகும். நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் கோயில்களில் எழுந்தருளிக் காட்சி தருகிறான். அகக் கண்களாலும் புறக்கண்களாலும் கண்டு பேரானந்தம் அடையக் கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்து வரவேண்டும். கோயில்கள் இறையருள் பாவிக்கும் இடமாகமட்டுமன்றிபாடசாலையாகவும் கலைவளர்கூடமாகவும், நீதி நெறி, ஊராட்சி ஆகியவற்றின் மன்றமாகவும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற பேதமற்ற ஒருமைப்பாடு உள்ள திருவிடமாகவும் இருந்து வருவதை நாம் உணர்தல் வேண்டும். அவற்றை நல்ல மனத்தினராயிருந்து பரிபாலிக்க வேண்டும்.

ஆலயங்களிலிருந்துதான் ஆட்சி முறையே அமையப்பெறும் நல்லாட்சி நிலவும். ஆகவே மக்கள் கோடானுகோடி ஆலயங்களை நாடி வந்து வழிபாடு செய்வது நாடு நலம் பெற, எல்லோரும் வாழ்வாங்கு வாழ்வு பெற வேண்டுமென்ற குறிக்கோளால் தான். ஆலய வழிபாட்டால் தூய வாழ்வும் மன அமைதியும் பெற்று வாழமுடியும்.

திருக்கோயில் இல்லாத திருவிலூரும்
திருவெண்ணிறணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடா வூரும்
பாங்கினொடு பலதளிகள் இல்லா வூரும்

விருப்பொடு வெண்சங்கம் ஊதா வூரும்
விதானமும் வெண்கொடியும் இல்லா வூரும்
அருப்பொடு மலர்பறித்திட் டுண்ணா வூரும்
அவையெல்லமே ஊரல்ல அடவி காடே!

என்று திருநாவுக்கரசர் அன்றாட வாழ்வு நெறிமுறைக்கு இன்றியமையாத திருக்கோயில் முக்கியத்துவத்தை எடுத்து ஓதுகிறார்.

தென்னாடுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவருக்கும் இறைவா போற்றி!

உள்ளே...

ஆலயம்

ஆ+லயம்=ஆன்மா இறைவனடிகளில் லயிக்கும்' இடம். கோ+இல்=தலைவன்—கடவுள் உறையும் வீடு.

ஆலயத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்: திருக்கோயில், தேவக் கிருகம், தேவாகரம், தேவாய தனம், தேவாலயம், தேவமந்திர், தேவஸ்தானம், அர்ச்சாக்ரஹம், கோட்டம் என்பனவாகும்.

கோயில்களின் அமைப்பு ஏழுவகைப்படும்: 1. கரக்கோயில், 2. ஞாழக்கோயில், 3. கொகுடிக்கோயில், 4. இளங்கோயில், 5. மணிக்கோயில் 6. ஆலக்கோயில், 7. தூங்கானை மாடம்.

ஆலய நிர்மாண வகை

1. ஆவர்த்தம்—புதிதாக ஆலயத்தைக் கட்டி விக்ரகப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்தல்.
2. அநாவர்த்தம்—ஆற்றுவெள்ளம், அதிக மழை, பூமி அதிர்வு, மணல் மூடுதல் முதலியவற்றால் அழிவு பெற்ற ஆலயத்தை மீண்டும் புதுப்பித்துக் கட்டி விக்ரகங்களை ஒழுங்கு செய்து நிர்மாணித்துக் கும்பாபிஷேகம் செய்தல்.
3. புநராவர்த்தம் — காலப்போக்கில் ஆலயத்திற்குத் தேவைப்படும் திருப்பணிகளைச் செய்து அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் செய்தல்.
4. அந்ததைம்—திருடுதல், கொள்ளை முதலியவை நிகழ்ந்து ஆலயத்தின் தூய்மை கெட்டால் அதைச் சரிசெய்யும் பொருட்டு சம்ப்ரோக்ஷணம் செய்தல்.

கருவறை : கருப்பக் கிரகம்

ஆலயத்தின் மையப் பகுதி கருவறை. நம் இதயத்தில் இறைவன் இருப்பதற்குரிய அடையாளமாக இது கருதப் படுகிறது,

ஆலய விமானங்கள் : மூன்று வகைப்படும்.

1. நாகரம் : பீடம் முதல் அனைத்தும் சதுரமாக உள்ள விமானம். (வட இந்தியாவில் உள்ளவை)

2. திராவிடம் : கண்ட முதல் எண் கோளமாக உள்ள விமானம் (தென் இந்தியாவில்)

3. வேசரம் : கண்ட முதல் வட்டமாக உள்ள விமானம் (மத்திய இந்தியா)

நாகரத்தை ஆணாகவும், திராவிடத்தைப் பெண்ணாகவும், வேசத்தை அலிவிமானமாகவும் கூறுவர். விமானத்தில் கீழ்ப் புறம் முருகனையும் தென்புறம் தெட்சிண மூர்த்தியையும், மேல்புறம் விஷ் வையும், வடபுறம் பிரம்மனையும் சுதையால் அமைப்பர். விமானத்தின் மேல்பாகத்தில் இடபத்தையாவது, பூதத்தையாவது அமைப்பது மரபு.

பலிபீடம் : திருக்கோயில் பலிபீடம் என்பது பாசத்தைக் குறிக்கிறது. இதை ஸ்ரீபலிநாதர் என்பர். ஆலயத்து எட்டு மூலைகளில் எட்டு பலி பீடங்கள் அமைந்திருக்கும். இவை எட்டுதிக்கு பாலர்களை உணர்த்துகிறது. இவைகளுக்கெல்லாம்தலைமைப் பீடமாக உள்ளது நந்திதேவரின் பின்னால்உள்ள பலிபீடமாகும்.

ராஜகோபுரம் : கோயில்லுள்ள கோபுரங்களைவிட இது உயர்ந்ததாக இருக்கும். ஆலயத்தின் முகப்பில் உள்ள இக்கோபுரம் ''ஸ்தூல லிங்கம்'' எனப்பெறும். வெகு தூரத்தில், தொலைவில் உள்ளோரும் கண்டு கை கூப்பி வணங்கத் தக்கதாக அமைந்துள்ள இக்கோபுரத்தின் அமைப்பு 3, 5, 7, 9, 11 என்ற எண்ணிக்கையில் அமைந்த வாயில்களை உடையதாக இருக்கும். பல வகை வடிவங்களும் சிற்பங்களும் இடம் பெறும். பிரபஞ்சத்தின் பிரதிபலிப்பாகத் திகழ்வதால்—ஆகமத்தின் அடிப்படையில் அமைவதால் எல்லா வகையான நிலையுடைய சிற்பங்

களும் இக்கோபுரத்தில் இடம் பெறுகின்றன. இது ராஜகோபுரம் என்று விளங்கும்.

தல விருட்சம் : ஆதிகாலத்தில், இடத்தின் விசேஷம், தீர்த்த மகிமை,இறையருளால் ஏதேனும் ஒரு அற்புதம் நிகழ்ந்த இடம்,யாரேனும் இறையருள்—சித்திபெற்றஇடம், இறைவன் எவருக்கேனும் காட்சி தந்த இடம், தேவர், முனிவர்; மகரிஷி, சித்தர்கள் போன்றோர் தவம் செய்த இடம் முதலிய சிறப்பு வாய்ந்த இடங்களில்தான் கோயில்களைக் கட்டினர்கள்கள். வெற்று நிலத்தில் தற்பொழுது கட்டுவது போல் கட்டபட்டவையல்ல.

அந்தக் காலத்தில் மகரிஷிகள் முதலியோர் மரங்களின் அடியில்தான் தவம், தியானம் செய்தனர். எந்தெந்தந்த மரங்களின் அடியிலிருந்து எந்ததெந்த மந்திரங்களை உச்சரித்தால், தியானித்தால் எந்தெந்த அளவு பலன் சித்திக்கும் என்று நூல்களில் சொல்லப்பட்டுள்ளன. அதன்படி எந்தெந்தத் தலத்தில் யார் எந்தெந்த மரங்களின் கீழிருந்து தவம் செய்து சித்தி பெற்றார்களோ அந்தந்தத் தலத்திலுள்ள அந்தந்த மரங்களைத் தலமரங்களாகப் போற்றி வழிபட்டு வருகிறோம். தலத்திற்கு உரியமரம் தலமரம்—தலவிருட்சம் என்று பெயர் பெற்றது.

ஆலய அமைப்பும் ஆறு ஆதாரங்களும்

ஆலயத்தின்

1.	கர்ப்பக் கிரகம்	—	மூலாதாரம்
2.	அர்த்த மண்டபம்	—	சுவாதிஷ்டானம்
3.	மகாமண்டபம்	—	மணிபூரகம்
4.	ஸ்நானமண்டபம்	—	அனாகரம்
5.	அலங்கார மண்டபம்	—	விசுத்தி
6.	சபா மண்டம்	—	ஆக்ஞை

என்பவற்றை உணர்த்துகின்றன.

கொடிமரம்: அசுரர்களை அகற்றவும், சிவகணங்களையும் தேவர்களையும் அழைக்கவும், பக்தர்களைப் பாதுகாக்கவும் கொடிமரம் நிவப்படுகிறது.

சந்தனம், தேவதாரு, செண்பகம், வில்வம், மகிழம் முதலிய மரங்கள் கொடி மரத்திற்கு ஏற்றவை. மிக உத்தமம் பலா, மா முதலியவை. மத்திமம் கமுகு, தென்னை, பனை, முதலியவை அதமம். மூல லிங்கத்திற்குச் செய்யும் அபிஷேகம், அலங்காரம் முதலியன யாவும் கொடி மரத்திற்கும் செய்யவேண்டும் கொடிமரத்தில் 33 கணுக்கள் இருப்பது நல்லது. நீளம் ஆலயத்திற்கு ஏற்றபடி இருக்கும்.

சிவன் கோயில் கொடி மரத்தின் மேல் நந்தியையும், பெருமாள் கோயிலில் கருடனையும், சக்தி கோயில்களில் சிங்கத்தையும் விநாயகர் கோயிலில் மூஷிகத்தையும், முருகன் கோயிலில் மயிலையும் அமைப்பர்.

கொடிக்கம்பத்தின் ஐந்தில் ஒருபாகம் பூமியிலிருக்கும்படி நடுவர். அடியிலிருந்து உச்சி வரை ஏழு பாகமாக்கி சதுர, கோண, விருத்த வடிவங்களில் அமைப்பர்.

சதுர பாகம் பிரம்ம பாகம். அதன் மேல் விஷ்ணு பாகம் எண்கோண வடிவம். அதன்மேல் உள்ளது ருத்ர பாகம். இதன் பீடம் பத்ர பீடம் எனப்படும். இறைவனிடம் பாசக்கட்டு அறுமாறு மனத்தைப் பலியிட வேண்டும் என்பதற்காக ஆன்மாவைப் பாசக்கயிறு சுற்றியுள்ளதை நினைப்பூட்டும் வகையில் துவஜ ஸ்தம்பத்தில் கயிறு சுற்றியிருக்கும்.

கொடியேற்று விழா : கொடியேற்றுவது (துவஜாரோகணம்) ஆகம விதிப்படி நடைபெறுவதாகும்.

கொடி மரம்	—	சிவபெருமான்
கொடிக் கயிறு	—	திருவருட் சக்தி
கொடித் துணி	—	ஆன்மா
தர்ப்பைக் கயிறு	—	பாசம்

மும்மலம் வயப்படும் ஆன்மா, திருவருட் சக்தியினாலே பாசம் அற்று, சிவஞான வடிவமாகிய பதியின் திருவடியை

அடைதல் என்னும் முறையை இச்சம்பவம் விளக்குகிறது. த்வஜம்—கொடி ஆரோகணம்—ஏறுதல்.

கும்பாபிஷேகம்

கும்பாபிஷேகத்தில் விக்ரகப் பிரதிஷ்டையில் மேற் கொள்ளப்படும் அவசியமான முறைகள்.

1. அனுக்ஞை : செயல்களைச் செய்யும் ஆற்றல் மிகு ஓர் ஆசிரியனைத் தேர்ந்தெடுத்து, இச்செயலைச் செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்தல்.
2. கணபதி பூசை : செயல் இனிது நிறைவு பெறக் கணபதியை வழிபடுதல்.
3. வாஸ்து சாந்தி : தேவர்களை வழிபட்டுக் கும்பாபிஷேகம் எவ்வித இடையூறுமின்றி இனிது நிறைவேற செயலுக்கும், செய்பவருக்கும் இடையூறு வாராதபடி காக்கச் செய்யும் செயல்.
4. மண் எடுத்தல் : அட்டதிக்குப் பாலகர்களிடம் அனுமதி பெற்றுச் சுத்தமான இடத்திலிருந்து மண் எடுத்து அப் பள்ளத்தில் அபிஷேகம் செய்தல்.
5. முளையிடுதல் : மண் பாலிகைகளில் விதைகளையிட்டு முளைவரச் செய்தல்.
6. காப்புக் கட்டுதல் : கிரியைகளைச் செய்யும் ஆசாரியனுக்கு இடையூறுகள் வாராதபடி காத்தற்பொருட்டு அவன் கையில் மந்திர பூர்வமாகக் காப்புக் (கயிறு) கட்டுதல்.
7. கும்பஸ்தானம் : கும்பங்களை, கலசங்களைஸ்தாபனம் செய்தல்.
8. கலா கர்ஷணம் : எந்த மூர்த்தியை, எந்தக் குடத்தில் ஆவாஹனம் பண்ணுகிறோமோ, அம்மூர்த்தி அந்தக் குடத்தில் இருப்பதாகக் கருதி அதனைப் பூசித்து வழிபடுதல்.
9. யாகசாலை : யாகசாலை விதிப்படி அமைத்தல்.

10. பிம்ப சுத்தி : விக்ரகங்களை அழுக்கு நீக்கிச் சுத்தம் செய்து அபிஷேகம் செய்தல்.

11. ஸ்பர்ஸாருதி : யாகசாலை இடத்திற்கும் மூலத்திரு மேனிக்கும் தர்ப்பைக் கயிறு, தங்கக் கம்பி, வெள்ளிக் கம்பி இவற்றால் இணைப்பு ஏற்படுத்தல்.

12. அஷ்ட பந்தனம் : 1. கொம்பரக்கு, 2. சுக்கான் தூள், 3. குங்கிலியம், 4. கற்காவி, 5. செம்பஞ்சு, 6. சாதி லிங்கம், 7. தேன் மெழுகு, 8. எருமை வெண்ணெய் ஆகிய எட்டுப் பொருள்களாலான மருந்தினால் மூர்த்தியையும் பீடத்தையும் ஒன்று சேர்த்தல், பந்தித்தல். இதனால் அந்த மூர்த்தி அந்த விக்ரகத்தில் எழுந்தருளுகிறார்.

13. குடமுழுக்கு : யாகசாலையில் மூர்த்திகளுக்குரியதாக வைத்துப் பூசிக்கப்பட்ட குடத்து நீரை அந்தந்த மூர்த்தி களுக்கு மூலஸ்தானத்திலும் ஸ்தூபியிலும் கும்பத்தி லிருந்து பிம்பத்திலும், ஸ்தூபியிலும், கூர்ச்சங்களைச் சேர்த்து அக்கும்ப தீர்த்தங்களை அபிஷேகம் செய்வது மஹா கும்பாபிஷேகம்.

14. மகாபிஷேகம் : கும்பாபிஷேகம் முடிந்த பிறகு மூல விக்ரஹங்களுக்கு முறைப்படி அபிஷேகம் செய்து அலங்காரம் செய்தல்.

விபூதி இயல்

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய்உமை பங்கன் திருஆல வாயான்திரு நீறே!

சிவனை வழிபடுபவர் சைவ சமயத்தினர்.

பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாவது திரு நீறு.

வெள்ளை நிறத் திருநீறு தரிக்கத் தக்கது.

திருநீறைப் பட்டுப் பையிலேனும் சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும்

வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்து கொண்டு ஐந்தெழுத்து மந்திரத்தைச் செபித்துக் கொண்டு திருநீறைத் தரிக்க வேண்டும்.

நிலத்தில் சிந்தா வண்ணம் அண்ணாந்து "சிவ சிவ" என்று சொல்லி வலக்கையின் நடுவிரல் மூன்றிலும் நெற்றியிலே கடைப்புருவ எல்லை வரையும் தரித்தல் வேண்டும்.

நித்திரை செய்யப்புகும் போதும், நித்திரையை விட்டு எழுந்த உடனும், பல்துலக்கிய உடனும், சூரியன் உதிக்கும் போதும், அத்தமிக்கும் போதும் குளித்த உடனும், சாப்பிடும் முன்னும் சாப்பிட்ட பின்னும், திருநீறு அவசியம் தரித்தல் வேண்டும்.

விபூதி தாரணம் இரண்டு வகைப்படும். 1. உத்தூளனம் 2. திரிபுண்டரம் (திரிபுண்டரம் மூன்று வரி) மூன்று குறிகளின் இடைவெளி ஓர் அங்குலம் அளவுடையதாக இருக்க வேண்டும்,

திரிபுண்டரம் தரிக்கத்தக்க தானங்கள்: சிரம், நெற்றி. மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து எனப் பதினாறு.

இவைகளுள் விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையும் கொள்வதுண்டு.

சிவமூல மந்திர இயல்

சிவமூல மந்திரம்: சிவாய நம எனும் ஐந்தெழுத்தாகும் சிவமூல மந்திரத்தைச் செபஞ் செய்பவர் புண்ணியங்களுக்குரிய நெறிமுறைகளுடன் சிவதீட்சை பெற்றவராக இருத்தல் வேண்டும்.

சிவமூல மந்திரத்தை நூற்றியெட்டு உருவாயினும் பத்து உருவாயினும் நியமமாகச் செபித்தல் வேண்டும். கிழக்கு முகமாகவேனும், வடக்கு முகமாகவேனும் இருந்து செபித்தல் வேண்டும்.

முழந்தாள் இரண்டையும் மடக்கி, பத்மாசனத்தில் அமர்ந்து இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த, செபித்தல் வேண்டும். இதுவே யோக நிலை, தியானமாகும். சட்டை இட்டுக் கொண்டும், தலையிலே வேட்டி கட்டிக் கொண்டும், போர்த்துக் கொண்டும், (குடுமியை) தலையை விரித்துக் கொண்டும் கௌபீனந் தரியாமலும், வேட்டி தரியாமலும், பேசிக் கொண்டும் இருளில் இருந்து கொண்டும் செபிக்கலாகாது.

வழிபாட்டு முறைகள்

திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவனை வழிபடும் முறைகளாக ஆறினை வகுத்துள்ளனர். அவை அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை, நைவேத்யம், ஆராதனை, உற்சவம் என்பவையாகும்.

அபிஷேகம் : நீர், பால், தயிர், தேன், பழம், பஞ்சாமிர்தம், பன்னீர், சந்தனம், இளநீர், விபூதி முதலியவற்றால் முழுக்காட்டல்

அலங்காரம் : மலர்களாலும், ஆடை அணிகளாலும் அழகு செய்தல்

அர்ச்சனை : பூக்களாலும், பாக்களாலும் அர்ச்சித்தல். குங்குமம், வில்வம் முதலியவற்றாலும் அர்ச்சித்தலுண்டு.

நைவேத்யம் : பலவகைச் சித்ரான்னங்கள், பழங்கள், தேங்காய், வெற்றிலை, பாக்கு முதலியவற்றைப் படைத்தல்

ஆராதனை : தீப தூபங்காட்டல். சாம்பிராணி தூபமும் கற்பூர தீபமும் காட்டுதலாகும்.

உற்சவம் : கோவிலுக்கு வெளியே அலங்கரித்த உற்சவ மூர்த்தியை மேளதாளங்களுடன் ஊர் உலாவரும்படி எழுந்தருளச் செய்தல்

சிவாலய வழிபாடு இயல்

சிவபெருமானை வழிபடுவதற்குரிய இடம் திருக்கோயில். நீராடி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து, திருநீறு இட்டுக் கொண்டு திருக்கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

திருக்கோயில் நெருங்கியவுடன், தூல லிங்கமாகிய திருக் கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் தலைமேல் குவித்து "சிவ" நாமத்தை உச்சரித்துக் கொண்டே கோயிலுள்ளே செல்ல வேண்டும்.

கொடிமரம், பலிபீடத்திற்கு இப்பால் நிலத்தில் விழுந்து வணங்க வேண்டும்.

தெற்கு நோக்கிய சந்நிதானத்திலும், வடக்கு நோக்கிய சந்நிதானத்திலும் கிழக்கே தலைவைத்து வணங்க வேண்டும

கிழக்கிலும், வடக்கிலும் கால் நீட்டி வணங்குதல் கூடாது. ஆண்கள் அஷ்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்து வணங்க வேண்டும்

இம்மாதிரி வணங்குதல் மூன்று, ஐந்து, ஏழு,ஒன்பது என்ற எண்ணிக்கையில் செய்தல் வேண்டும்.

நமஸ்காரம் செய்த பின் வலம் வருதல் வேண்டும். இரண்டு கைகளையும் தலை மேல் வைத்து,அல்லது மார்பில் குவித்து சிவநாமங்களை உச்சரித்த வண்ணம் கால்களை மெல்ல வைத்து வலம் வருதல் வேண்டும்.

மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது ஆகிய எண்ணிக்கைகளில் வலம் வருதல் வேண்டும்.

முதலில் விநாயகப் பெருமானை வணங்கி, பின் சிவலிங்கப் பெருமானையும், உமா தேவியாரையும் வணங்கித் திருநீறு வாங்கித் தரித்துக் கொண்டு, அதன்பின் நடன சபாபதி,

தட்சிணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திர சேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளை வணங்குதல் வேண்டும்.

விநாயகப் பெருமானை வணங்கும் பொழுது, முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி வலக் காதை இடக் கையாலும் இடக் காதை வலக் கையாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்து எழல் (உக்கி போடுதல்) வேண்டும்.

எல்லா மூர்த்திகளின் சந்நிதானங்களிலும் இரண்டு கைகளையும் தலைமேல் அல்லது மார்பில் குவித்துக் கொண்டு மனங்கசிந்துருகத் தோத்திரம் செய்து வணங்க வேண்டும். அபிஷேக காலத்தில் உட்பிராகாரத்தில் வலம் வந்து நமஸ்காரம் செய்தலாகாது.

எல்லா மூர்த்திகளின் தரிசனமும் முடிந்தவுடன் சண்டேசுவரர் சந்நிதியை அடைந்து, கும்பிட்டு, மூன்று முறை கைகொட்டி சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டு பிரார்த்தித்தல் வேண்டும்.

பிறகு சிவ சந்நிதானத்தை அடைந்து நமஸ்காரம் செய்து, ஐந்தெழுத்து மந்திரத்தை இயன்றவரை உருச் செய்து செபித்துக் கொண்டு எழுந்து வீட்டிற்குச் செல்ல வேண்டும்.

வழிபாடு

அபிடேகம், அலங்காரம், அர்ச்சனை, நைவேத்தியம், ஆராதனை, உற்சவம் எனும் ஆறு முறைகளில் இறைவனை வழிபட வகுத்துள்ளனர்.

வணங்குதல் ஐந்து வகைப்படும்.

அவை: ஏகாங்கம், துவியாங்கம், திரயாங்கம், பஞ்சாங்கம், அஷ்டாங்கம்.

தலையை மட்டும் தாழ்த்தி வணங்குதல் ஏகாங்கம்.

வலக்கையை மட்டும் தலைமேல் குவித்து வணங்குதல் துவியாங்கம்.

தலைமேல் இரண்டு கைகளையும் குவித்து வணங்குதல் திரயாங்கம்

தலை, கையிரண்டும், முழங்காலிரண்டும் ஆக ஐந்து உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குதல் பஞ்சாங்கம். இம்மாதிரி பெண்கள் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது அல்லது பனிரண்டு தரம் செய்தல் முறையாகும். ஒரு தரம், இருதரம் செய்வது குற்றமாகும்.

தலை, கையிரண்டு, செவியிரண்டு, முகவாய், தோள்களிரண்டு, ஆக எட்டு உறுப்புக்களும் நிலத்தில் பொருந்தும்படி வணங்குதல் அஷ்டாங்கம். இதனை ஆடவர் செய்தல் வேண்டும். அப்படிச் செய்யும் பொழுது முன்னர் தலைவைத்து மார்பு நிலத்தில் படும்படி வலக்கையை முதலிலும், இடக்கையை அடுத்துமாகத் தலைக்கு மேல் நேரே நீட்டிப் பின்னர் அதுமாதிரி திரும்பக் கைகளை இடுப்பை நோக்கி நீட்டி வலத்தோளும் இடத்தோளும் நிலத்தில் பொருந்த வேண்டும். உடன் வலது காதை முன்னும் இடது காதை அடுத்தும் நிலத்தில் தோயும்படிச் செய்து வணங்க வேண்டும். அஷ்டாங்கமும் பஞ்சாங்கம் போன்று குறிப்பிட்ட எண்ணிக்கைகளில் செய்தல் வேண்டும்.

ஆண்கள் அஷ்டாங்கமும், பெண்கள் பஞ்சாங்கமும் செய்தல் மரபு; ஏனையவை இருபாலருக்கும் பொதுவாகும்.

வணங்கும் பொழுது வடக்கு, கிழக்கு நோக்கித் தலை வைத்து வணங்கி, தெற்கு, மேற்கு நோக்கிக் கால்களை நீட்டலாம்.

சந்நிதியில் கொடிக் கம்பத்தின் வெளிப்புறத்தில்தான் நிலத்தில் விழுந்து வணங்குதல் வேண்டும்.

பிள்ளையாரை ஒரு முறையும், முருகனை மூன்று முறையும் சிவபெருமானை 3 அல்லது 5, 7, 9, 15, 21 முறைகளும், உமாதேவியையும், திருமாலையும் நான்கு முறையும், சூரியனை இரண்டு முறையும் மற்ற

கடவுளரை மூன்று முறையும் சக்திகளை நான்கு முறையும் வலம் வருதல் வேண்டும்.

ப்ரதோஷ காலத்தில் அத்துணை தேவர்களும் சிவ சந்நிதியில் ஐக்கியமாகி இருப்பதால் அப்பொழுது செய்யும் பிரார்த்தனையால் அனைவருடைய அருளையும், ஒருங்கே பெறும் நற்பேறுகளனைத்தையும் பெறலாம்.

மலர் வழிபாடு

நம் மனதில் உள்ள கெட்ட எண்ணங்கள் முதலானவற்றை நீக்கி, கல்மனதை மென்மையாக்கி, பக்தி எனும் வாசனையை ஊட்டி இறைவனுக்கு அர்ப்பணம் செய்வதே மலர் வழிபாடாகும்.

மனத்தை அருணகிரிநாதர் மனமலர் என்றழைக்கிறார். இறைவனது திருவடிகள் வாடாத மலர்களாகும். அந்தத் திருவடிகளில், நாம் இளமையிலிருந்தே வழிபாடு செய்து நம் உடலை மூப்பு வந்து வாட்டுவதற்கு முன் இறைவன் திருவடிகளில் சமர்ப்பிக்க வேண்டும்.

சிவபெருமான் தீவண்ணர். அவருக்குக் குளிர்ச்சிமிக்க வில்வத்தை அர்ச்சிக்கிறோம். சோமவாரம், சதுர்த்தி, அஷ்டமி, நவமி, பௌர்ணமி, அமாவாசை நாட்களில் வில்வத்தைக் கொய்யக் கூடாது.

திருமால் நீர் மேலேயே பாம்பின் மீது படுத்திருப்பவர். அவருக்கு மிக வெப்பமான துளசியைப் பூசை செய்ய உபயோகிப்பர்.

துளசி, வில்வம், ஊமத்தம்பூ, நீலோற்பலம் முதலானவை இயற்கையாக உண்டான போதிலும் பொன் போன்றவை. ஆதலின் ஒரு தடவை பூசை செய்து, பிறகு அவற்றைக் கழுவி எடுத்து மீண்டும் பூசிக்கலாம். இவற்றிற்கு நிர்மால்ய தோஷம் கிடையாது, என்பது பெரியவர்கள் கருத்தாகும்.

துளசியைச் செவ்வாய், வெள்ளிக் கிழமைகளிலும், அஷ்டமி துவாதசி, சதுர்தசி, பௌர்ணமி, அமாவாசை திதிகளிலும்

திருவோண நட்சத்திரத்தன்றும், மாதப் பிறப்பன்றும் சூரிய உதயம், அஸ்தமனம், பிற்பகல், இரவு ஆகிய வேளைகளிலும் எடுக்கக்கூடாது. அப்படி எடுப்பது திருமாலின் தலையைக் கொய்த பாவத்தற்கு ஆளாக நேரிடும். காலை வேளை, முற்பகல்களில் மாத்திரம் கொய்து எடுக்கலாம்.

உரிய நாளில் கொய்து எடுத்த வில்வம் ஆறு மாதங்களுக்கும், வெள்ளைத் துளசி ஓராண்டிற்கும் வைத்துப் பூசை செய்யலாம் என்பது புஷ்ப விதி.

பிள்ளையாருக்கு	அருகம் புல்,
சிவபெருமானுக்கு	வில்வம், கொன்றை,
முருகனுக்கு	வெட்சிப் பூ, கடம்பு,
திருமாலுக்கு	துளசி,
அம்மைக்கு	நீலோற்பலம்,
சூரியனுக்கு	தாமரை,
திருமகளுக்கு	ஆம்பல்,
கலைமகளுக்கு	வெண்தாமரை,

ஆகியவை விருப்பமான வையாகும்.

பூசை முறைகள்

ஆறுகால பூசைகள்: 1. உஷத்காலம் 2. காலசந்தி 3. உச்சிக்காலம் 4. சாயரட்சை 5. பிரதோஷம் 6. அர்த்த சாமம்.

பூசைகளின் வகைகள் இரு வகைப்படும்.

1. ஆத்மார்த்த பூசை: தீட்சை பெற்றோர் வீட்டில் செய்வது.

2. பாரார்த்த பூசை: அரசன், நாடு, மக்கள், உயிர்கள் இவர்களுக்கு நலன்கள் விளைய, ஆலயத்தில் செய்யப் படும் பூசை.

நித்ய பூசை: 1. நித்யம் 2. ஆகந்துக நித்யம் என இரு வகைப்படும். நாள்தோறும் செய்யப் பெறும் பூசை நித்ய

பூசை. மாதாந்திர விசேட பூசை, ஆகந்துக நித்யம் எனப்படும்.

பாரார்த்த பூசை: 1. நித்யம் 2. நைமித்யம் 3. காமியம் எனப்படும்.

பூசை முறைகளில் சொல்லப் பெறும் ஐவகை சுத்திகள் (பஞ்ச சுத்திகள்)

1. ஆத்ம சுத்தி : பூசை செய்பவர் தன் உடம்பைத் திருக்கோயிலின் உள் இருக்கும் திருமேனி போலச் சுத்தமாக வைத்துக் கொள்ளல்.
2. ஸ்தான சுத்தி : பூசிக்கும் இடத்தை சுத்தப்படுத்தல்
3. திரவிய சுத்தி : பூசைக்குரிய பாத்திரங்களை நன்கு கழுவி, பூசைக்குரிய பொருள்களில் அர்க்கிய நீரைத் தெளித்துச் சுத்தமாக்கி வைத்தல்
4. மந்திர சுத்தி: மூல மந்திரத்தை முறைப்படி ஜபித்தல்.
5. இலிங்க சுத்தி : அபிஷேகப் பாத்திரத்தில் நீர் நிரப்பி அதில் தீர்த்தங்களை ஆவாஹனம் செய்து இலிங்கத்தை அபிஷேகம் செய்து சுத்தமான ஆடை அணிவிக்க வேண்டும்.

தேவாரப் பாடல் பெற்ற தலங்களும் பதிகங்களும்

		தலம்	பதிகம்
1.	சோழநாடு	190	556
2.	ஈழ நாடு	2	3
3.	பாண்டிய நாடு	14	34
4.	மலை நாடு	1	1
5.	கொங்கு நாடு	7	9
6.	நடுநாடு	22	62
7.	தொண்டை நாடு	32	68
8.	துளுவ நாடு	1	2
9.	வடநாடு	5	14
	பொதுப் பணிகள்		48
	மொத்தம்	274	797

பன்னிரு திருமுறைகள்

திருஞானசம்பந்தர் தேவாரம்— 1, 2, 3—ஆம் திருமுறைகள்

திருநாவுக்கரசர் தேவாரம்— 4, 5, 6—ஆம் திருமுறைகள்

சுந்தரமூர்த்தி தேவாரம்— 7—ஆம் திருமுறை

மாணிக்க வாசகரின்
திருவாசகமும் திருக்கோவையாரும்— 8—ஆம் திருமுறை

ஒன்பது ஆசிரியர்கள் அருளிய திருவிசைப்பாவும்
சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டும்— 9—ஆம் திருமுறை

திருமூலர் அருளிய திருமந்திரம்— 10—ஆம் திருமுறை

திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார், ஐயடிகள் காடவர் கோன், சேரமான் பெருமான், நக்கீரர், கல்லாட தேவ நாயனார், கபில தேவநாயனார், பரண தேவ நாயனார், இளம்பெருமான் அடிகள், அதிரா அடிகள், திருவெண்காட்டடிகள் (பட்டினத்தார்) நம்பியாண்டார் நம்பி ஆகிய பல ஆசிரியர்கள் அருளிய பல நூல்கள்— 11— ஆம் திருமுறை.

சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம்— 12— ஆம் திருமுறை

மெய்கண்ட சாத்திரங்கள்

சைவ சித்தாந்த நெறிகளை விளக்கும் நூல்கள் பதினான்கு ஆகும்.

1. திருவியலூர் உய்யவந்த தேவநாயனர்— திருவுந்தியார்
2. திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்— திருக்களிற்றுப் பாடியவர்
3. மெய்கண்ட தேவநாயனார் – சிவஞானபோதம்
4. அருள் நந்திசிவம்— சிவஞான சித்தியார், இருபா இருபது.

5. திருவதிகை மனவாசகங்கடந்தார் — உண்மை விளக்கம்

6. உமாபதிசிவம் — சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா போற்றிப் பஃறொடை, உண்மை நெறி விளக்கம், கொடிக்கவி, நெஞ்சு விடுதூது, சங்கற்ப நிராகரணம்.

மூவர்

செவ்வேள் பரமனுடைய செங்கனிவாயால்
பிரணவ ஞான உபதேசம் பெற்றவர் மூவர்:

1. சிவபெருமான 2. அகத்தியர் 3. அருணகிரி நாதர்.

அருணகிரிநாதர்

அருணகிரிநாதர் பதினாறாயிரம் திருப்புகழ்ப் பாடல்கள் பாடி அருளினார்.

வில்லிபுத்தூராரை வாதில் வென்று கர்ணதானம் செய்தார். சம்பந்தாண்டானை வாதில் வென்று, அரசவையில் முருகப் பெருமானை மயில் மீது வந்து காட்சி தருமாறு செய்தார். திருப்புகழ், திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம் கந்தரநுபூதி, வேல் மயில் சேவல் விருத்தங்கள் என்று ஆறு வகையான நூல்களை வழங்கி அருளினார்.

அருணகிரிநாதர் ஆனி மாதம் பௌர்ணமி மூல நட்சத்திரத்தில் அவதரித்து, அதே நாளில் அத்துவித முத்தி பெற்றார்.

மனிதநேய அறநெறி

1. ஏழ்மையிலும் நேர்மை. 2. கோபத்திலும் பொறுமை. 3 தோல்வியலும் விடாமுயற்சி. 4. தரித்திரத்திலும் பரோபகாரம் 5. துன்பத்திலும் துணிவு 6. செல்வத்திலும் எளிமை 7. பதவியிலும் பணிவு 8. அடக்கத்தில் எளிமை. 9. தளராத உழைப்பு. 10. கல்வியில் ஆர்வம், 11. கடமையில் பற்று.

பிரதோஷ வரலாறு

தேவர்கள் நரை, திரை, மூப்பு, மரணம் என்ற துன்பங்களின்றி வாழ விரும்பி, திருப்பாற் கடலில் உள்ள அமிர்தத்தை உண்ண நினைத்து திருப்பாற் கடலைக் கடைய முனைந்தார்கள் வாசுகி என்ற நாகராஜனைத் தாம்புக் கயிறாக அமைத்துக் கடைந்த போது வாசுகி வருந்தந் தாங்காமல் பதை பதைத்து நஞ்சை உமிழ்ந்தது. வாசுகி கக்கிய ஆலமும், கடலில் தோன்றிய ஆலமும் ஆலாலம் ஆயிற்று.

இந்த பயங்கரமான ஆலாலம், தேவர்களை நாலாபுறமும் விரட்டித் துரத்தியது. தேவர்கள் நடு நடுங்கி திருக்கயிலாயம் சென்று சிவனிடம் அடைக்கலம் புகுந்தனர்.

கருணையே வடிவான கண்ணுதற் பெருங்கடவுள், சுந்தரரிடம் விடத்தைக் கொண்டு வரச் சொல்ல, சுந்தரர் அக்கொடிய விடத்தை நாவற்பழம் போல் திரட்டி உருட்டிக் கொணர்ந்து தந்தார்.

பிரம்மா, விஷ்ணு, இந்திராதி தேவர்கள் உய்வதற்காக அக்கொடிய விடத்தை அமுதம் போல் உண்டருளினார். அதனை உண்ணாமலும் உமிழாமலும் கண்டத்தில் தரித்தருளினார். அதனால் செம்மேனி கண்டங் கரியதாகி திருநீல கண்டரானார். இவ்வாறு தேவர்கள் பொருட்டு சிவபெருமான் ஆலால விடத்தை உண்டருளியது ஏகாதசி மாலை நேரமாகும்.

சிவபெருமான் தேவர்களை நோக்கி மீண்டும் பாற்கடலைக் கடையுமாறு பணிக்க, தேவர்களும் முன் போலவே கடைந்தார்கள். பாற்கடலிலிருந்து இலக்குமி, ஐராவதம், காமதேனு. கற்பகத்தரு, சிந்தாமணி, கௌஸ்துபமணி, சூடாமணி, உச்சைச்ரவம் முதலியன ஒவ்வொன்றாகத் தோன்றின. இலக்குமியைத் திருமாலும் ஏனைய பொருள்களை இந்திராதி தேவர்களும் அடைந்தார்கள்.

ஏகாதசியன்று இரவு முழுதும் பாற்கடலைக் கடைந்ததால் மறுநாள் துவாதசியன்று அதிகாலையில் அமிர்தம் தோன்றியது. அதனைத் தேவர்கள் பகிர்ந்து உண்டார்கள். அந்த மகிழ்ச்சியில் சிவபெருமானை வணங்காமல் ஆடியும் பாடியும் பொழுதைப் போக்கிவிட்டார்கள்.

அதற்கு மறுநாள் திரயோதசி. தங்கள் குற்றத்தை உணர்ந்து சிவபெருமானிடம் சென்று பணிந்து மன்னித்தருளுமாறு வேண்டினார்கள்.

பரம கருணாநிதியாகிய சிவபெருமான் மகிழ்ந்து தேவர்களுக்கு அருள் புரியத் திருவுள்ளம் கொண்டு, கைலையில் அன்று மாலை (4 – 30 மணி முதல் 6 மணி வரை) பிரதோஷ வேளையில் தம் முன்னால் இருந்த ரிஷப தேவரின் இரு கொம்புகளுக் கிடையில் நின்று அம்பிகை காணத் திருநடம் செய்தருளினார். தேவர்கள் அதனைத் தெரிசித்து சிவபெருமனைத் துதி செய்து வணங்கினாரகள். அது முதல் திரயேதசி திதியன்று மாலை நேரம் பிரதோஷ காலம் என்று வழங்கலாயிற்று. (பிரதோஷம்—ரஜனீ முகவேளை பாபத்தைப் போக்கும் நேரம்).

இது சிவ மூர்த்திக்கு உரிய விரதங்களில் தலையாயது. இவ்விரதமிருப்போர் துன்பங்களில் நின்றும் நீங்கி இன்பம் எய்துவர்.

விரதம்

வளர்பிறை, தேய்பிறை என்ற இரண்டு பட்சங்களிலும் வரும் திரயோதசி திதியன்று அதிகாலையில் எழுந்து நீராடி, நித்திய கடன்களை முடித்து, சிவாலயம் சென்று வழிபட வேண்டும். அன்று பகல் முழுதும் உணவின்றி உபவாசமாக இருக்க வேண்டும். திருமுறைகள் பாராயணம் செய்தல் வேண்டும். பிரதோஷ நேரம் மாலை 4=30 முதல் 6 மணிவரை அந்தப் பிரதோஷ நேரத்தில் சிவாலயம் சென்று அபிஷேக ஆராதனை செய்து தேவியுடன் கூடிய

சிவபெருமான் இடபவாகனத்தில் ஆலயத்தை மூன்று முறை வலம் வருவதை வணங்கித் துதிக்க வேண்டும். சுவாமி திருமுன் உள்ள இடப தேவருக்கு அருகம்புல் மாலையும், சிவப்பு அரிசி நிவேதனமும், நெய்விளக்கும் வைத்து வழிப்படவேண்டும்.

பிரதோஷ வேளையில் சிவலிங்க மூர்த்தத்தை இடப தேவரின் இரு கொம்புகளுக் கிடையே கண்டு தரிசித்து ஐந்தெழுத்து மந்திரத்தை (ஓம் சிவாய நம்) செபிக்க வேண்டும்

சோமசூக்தப் பிரதட்சிணம்

மற்ற நாட்களில் ஆலயத்தில் மூன்று முறை வலம் வருவதற்கு மாறாக பிரதோஷ நாளில் சோமசூக்தப் பிரதட்சிணம் செய்தல் வேண்டும்.

ஏனென்றால் ஆலகால விடத்தால் தேவர்கள் முன்னும் பின்னும், வலமும் இடமுமாகத் துரத்தப் பட்டார்கள். இந்த நிகழ்ச்சிதான் இறைவனைக்காண சோமசூக்தப் பிரதட்சிணம் எனப் பெயர் பெற்றது.

பிரதோஷ தினத்தன்று மட்டும் பிரதட்சிண முறை

முதலில் சிவலிங்கத்தையும்ரிஷப தேவரையும் வணங்கி, அப்பிரதட்சிணமாக சண்டேசுவரர் சந்நிதியடைந்து வணங்கி பிறகு திரும்பி வந்து முன்போல சிவலிங்கத்தை யும், ரிஷப தேவரையும் வணங்கிக் கொண்டு வழக்கம் போல் வலமாக ஆலயத்தைச் சுற்றி வரும் பொழுது, சுவாமி அபிஷேகத் தீர்த்தம் விழும் நிர்மாலியத் தொட்டியைக் கடக்காமல் அப்படியே திரும்பி, வந்த வழியே அப்பிரதட்சிணமாக சந்நிதிக்கு வந்து சிவலிங்கத்தையும் ரிஷப தேவரையும் வணங்க வேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்தல் வேண்டும். இப்படிச் செய்வதால்

அஸ்வமேத யாகம் செய்த பலன் கிடைக்கும் என்று நூல்கள் கூறுகின்றன.

இவ்வாறு ஆலயத்தில் பிரதோஷ வழிபாடு செய்து முடித்தபின் வீட்டிற்குச் சென்று, விரதம் முடித்து உணவு அருந்த வேண்டும்.

பிரதோஷ காலத்தில் வானவர்கள் அனைவரும் சிவாலயம் வந்து விடுவதால், திருமால் கோயில்களில் வழிபாடு செய்வதில்லை.

சனிக்கிழமை வரும் பிரதோஷம் மிகச் சிறந்ததாகும். சாதாரண பிரதோஷ வேளைகளில் சிவாலயத்தில் வழிபாடு செய்தால் ஒரு வருடம் ஆலயம் சென்று இறை வழிபாடு செய்த பலனும். சனிப்பிரதோஷத்தன்று சிவாலயத்தில் இறை வழிபாடு செய்தால் ஐந்து வருடம் ஆலய வழிபாடு செய்த பலனும் கிடைக்கும்.

ஜெபமாலை

ஜெபமாலை 108 மணிகளால் அமைக்கப்பெறும். 54, 27 மணிகளாலும் அமைக்கலாம்.

விரலினும் விரலிறை எட்டு மடங்கு அதிக பலன் புத்திரதீப மணிமாலை பத்து மடங்கு பலனதிகம். சங்குமாலை நூறு மடங்கு பலனதிகம். பவளமணி மாலை ஆயிரமடங்கு பலனதிகம் படிக மணிமாலைபத்தாயிரமடங்கு பலனதிகம். முத்துமாலை ஒரு லட்ச மடங்கு பலனதிகம். தாமரை மணிமாலை பத்து லட்ச மடங்கு பலனதிகம். பொன்மணி மாலை ஒரு கோடி மடங்கு பலனதிகம். தருப்பை பவித்திர முடிச்சு மாலை பத்துக் கோடி மடங்கு பலனதிகம் உருத்திராட்ச மணிமாலை அநந்த கோடி மடங்கு பலனதிகம். உருத்திராட்ச மணியைத் தரித்தவருக்கு இலட்ச மடங்கு பலனுண்டு. ஸ்பரிசித்தவருக்கு கோடி மடங்கு பலன் சரீரத்திலே தரித்தவருக்கு ஆயிரங்கோடி பலனுண்டு. கையிற் கொண்டு ஜபித்தவருக்கு அநநத மடங்கு பலன்.

உருத்திராட்ச மாலை கோர்க்கும் போதுமுகம் முகத்தையும் அடி அடியையும் பொருந்துமாறுகோர்க்கவேண்டும் கயிறாக இருந்தால் 27 இழையினால் உள்ளதாக இருக்க வேண்டும். உச்சியில் நாயகமணி கோர்க்கப்பட வேண்டும்.

நாயகமணியின்றி ஜபமாலை செய்து கொண்டால் பலனில்லை.

ஜபிக்கும்போது ஜபமாலை பிறர் கண்ணுக்குப் புலப் படாமல் பரிவட்டத்தால் மூடிக் கொள்ள வேண்டும்.

ஜபம் செய்யும் போது ஜபமாலை மணிகள் ஒன்றோ டொன்று ஓசைப்படாமல் மெதுவாக ஜபிக்க வேண்டும்.

ஜபம், 1. உரை, 2. மந்தம், 3. மானதம் ஆக மூன்று வகைப்படும்.

உரையென்பது பிறர் கேட்குமாறு ஜபித்தல். மந்தம் என்பது தன் செவிக்கு மட்டும் கேட்குமாறு ஜபித்தல். மானதம் என்பது நாநுனி இதழைத் தீண்டாமல் ஒருமை பொருந்திய மனத்தால் ஜபித்தல்.

வீடு, பசுக்கோட்டம், நந்தவனம், மலை, நதிக்கரை, சிவாலயம், சிவசந்நிதி ஆகிய இடங்களிலிருந்து ஜபித்தல் ஒன்றுக்கொன்று மேம்பட்டதாகும்.

ஆசனப் பலகை, விரிப்பு, கம்பளம், மான்தோல், புலித் தோல், தருப்பை ஆகியவற்றில் ஏதேனும் இயன்ற ஒரு ஆசனத்தில், பத்மாசனத்தில் அமர்ந்து இரண்டு கண்களும் மூக்கின் நுனியைப் பொருந்த இருந்து கொண்டு, ஜபிக்க வேண்டும்.

கௌபீனம் தரியாமலும், விரலிலே பவித்திரம் இல்லாம லும், சட்டையுடனும், தலையில் வேட்டி கட்டிக் கொண்டும், போர்த்திக் கொண்டும், தலைமுடியை விரித்துக் கொண்டும், பேசிக் கொண்டும் இருளில் இருந்து கொண்டும் ஜபித்தல் ஆகாது.

பிள்ளையார்—அருகம் புல் அர்ச்சனை

சிவபெருமானின் மூத்த குமாரன். தேவர்கள் விரும்பியபடி தொடர்ந்து போர் செய்தும் அனலாசுரனை வெல்ல முடியாமல் போகவே விநாயகர் அவனை அப்படியே தூக்கி விழுங்கி விட்டார். வயிற்றுள் சென்ற அனலாசுரன் பிள்ளையாரையும் தகிக்க ஆரம்பித்தான். பிள்ளையாரால் தாங்க முடியவில்லை. குடம் குடமாகக் கங்கை நீரை அபிஷேகம் செய்தார்கள். பயனில்லை. பனிக்கட்டியைத் தலையில் வைத்தார்கள். எரிச்சல் அடங்கவில்லை. சந்திரனின் நிலவைப் பொழிந்தார்கள். எரிச்சல் அதிகமானதே தவிரக் குறையவில்லை. அப்போது ஒரு ரிஷி கை நிறைய அருகம் புல்லைப் பிள்ளையார் தலை மீது வைத்தவுடன் எரிச்சல் அடங்கி, அனலாசுரன் வயிற்றில் ஜீரணமாகி விட்டான். அன்று முதல் அருகம்புல்லை அர்ச்சனை செய்கிறார்கள். பிள்ளையார் அருள் வேண்டுபவர்கள் அரும்புல்லையெடுத்துத் தலையில் சாற்ற வேண்டும்.

வினை தீர்க்கும் விநாயகர் உருவத் தத்துவம்

விநாயகருடைய திருவுருவம் யானை முகமும், மூன்று கண்களும், இருசெவிகளும், ஐந்து கரங்களும் ஒரு பெரிய வயிறும், இரு குறுகிய திருவடிகளும் கொண்டது. ஐந்து கரங்கள் பஞ்ச கிருத்யத்தையும் செய்யும் ஆற்றல் உடையவன் என்பதையும், விசாலமான இரு செவிகள் ஆன்மாக்களை மலவாதனை தாக்காமல் காத்து வினை வெப்பத்தைப் போக்கி அருளும் என்பதையும் விளக்கும். மூன்று விழிகளும் சோம, சூரிய, அக்னிகளை உணர்த்தும். பெரிய வயிறு சர்வஜீவ உற்பத்திக்கும், கர்ப்பஸ்தானமாய் எல்லா அண்டங்களையும் தன்னுள் அடக்கியிருக்கிறது என்னும் தத்துவத்தை உணர்த்தும்.

விநாயகருக்குரிய விரதங்கள் மூன்று. வாரந்தோறும் வெள்ளிக் கிழமையும், விநாயக சஷ்டியும் ஒவ்வொரு மாதத்தில் வரும் வளர்பிறை சதுர்த்தியும் ஆகும். சிறப்பாக ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியை விநாயக சதுர்த்தி என்று யாவரும் கொண்டாடுவர்.

வழிபாடு : விநாயகப் பெருமானை பிரமன், விஷ்ணு, உருத்திரர் ஆகிய மும்மூர்த்திகளும், உமாதேவி, சண்முகப்பெருமான், அகத்திய முனிவர் முதலான முனி புங்கவர்கள் ஆகிய யாவரும் பூசித்துப் பேறு பெற்றனர்.

நிவேதனம் : அப்பம், மோதகம், எள்ளுருண்டை, அவல், பொரி, கரும்பு, விளாம்பழம் முதலியவை சிறந்தனவாம்.

ஆறுமுகன்

ஆறுமுகமான பரம்பொருள்

1. ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்று
2. ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்று
3. அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்று
4. குன்றுருவவேல் வாங்கி நின்ற முகம் ஒன்று
5. மாறுபாடு சூரரை வதைத்த முகம் ஒன்று
6 வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்று

ஆறுபடை வீடுகள்

1. திருப்பரங்குன்றம் 2. திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்)
3. திருவாவினன்குடி(பழநி) 4 திரு ஏரகம் (சுவாமிமலை)
5. திருத்தணிகை. 6. பழமுதிர்சோலை.

வள்ளித்—தெய்வயானை

முருகனின் வலப்புறம் உள்ள ஆறு கரங்களில் அபயகரம் கோழிக்கொடி,வச்சிரம், அங்குசம், அம்பு,வேல் இடப்புறம் உள்ள ஆறு கரங்களில் வாதகரம் (வரமளிக்கும் கை) தாமரை, மணி, மழு, தண்டாயுதம், வில் முதலியன.

முருகன் வழிபாட்டிற்குரிய முக்கிய நாட்கள்

திதி: சஷ்டி; நட்சத்திரங்கள்: விசாகம், கார்த்திகை, கிழமைகள் : திங்கள், செவ்வாய் ஆகியவை.

வேல் வழிபாடு

முருகப் பெருமானது ஆயுதம் வேல் என்று கூறுவது தவறு. அது அவரது ஆபரணமாகும். முருகன் தனது வேலால் சூரனை சம்காரம் செய்யவில்லை. சுவீகாரம் செய்து கொண்டான். சூரன்மேல் வேலைச் செலுத்தியதும் அவன் மாமரமாகி, மரம் பிளந்து, அவன் சேவலும்மயிலுமாக ஆகி முருகனுக்குத் தொண்டனாகி விட்டான். எனவே தீமை செய்தவனுக்கு நன்மை செய்து அருள் பொழியும் அணி தான் வேல். அதனால் வேலை வழிபட்டால் முருகனையே வழிபட்டதற்கு ஒப்பாகும் என்று பெரியவர்கள் கூறியுள்ளார்கள்.

வேல் என்பது சிவன், சக்தி, சுப்பிரமணியன் ஆகிய மூவரின் அம்சமும் கொண்டது. அதனால் வேலை வழி படும்போது சிவார்ச்சனை, சக்தி அர்ச்சனை, சண்முக அர்ச்சனை மூன்றும் செய்தல் வேண்டும். விபூதியாலும் குங்குமத்தாலும், புஷ்பம் அல்லது அட்சதையாலும் வேலை அர்ச்சிப்பது சிறப்பாகும்.

செம்பு அல்லது வெள்ளியில் சிறுவேல் செய்து ஒருபுறம் ''ஓம்'' என்ற அட்சரமும், மறுபுறம் ''ஷட்கோணம்'' எனும் சுப்பிரமணிய யந்திரச் சின்னமும் பொறித்துக் கொள்ள வேண்டும். இந்த வேலை எலுமிச்சம் பழத்தில் சொருகி நேராக வைத்து பன்னீர், பால், தேன், மஞ்சள் நீர், முதலியவற்றால் அபிஷேகம் செய்து, அர்ச்சித்துப் பூசைசெய்தால் சகல சௌபாக்யங்களும் பெருகும். அறிவும் நினைவாற்றலும் வளரும்.

அறிவின் சின்னம் வேல். அகலம், கூர்மை, ஆழம் உள்ள அறிவைக்குறிக்கும். வேல் வழிபாடு அறிவுக்குச் செய்யும் வழிபாடாகும்.

இடும்பன்

இடும்பன் முருகக் கடவுளின் பக்தர்களில் ஒருவன். இவன் அகத்திய முனிவரின் மாணவன். சிவமலை, சக்திமலை ஆகிய இரு மலைகளைக் காவடியாகக் கட்டிச் சுமந்து, முருகன் அமரக் குன்றங்கள் அமைத்துக் கொடுத்தவன்.

இராமாயணத்தில் இடும்பன் பெயர் காணப்படுகிறது. இவன் சுக்ரீவனின் சேனா வீரர்களில் ஒருவன். சேதுபந்தனந்தின் போது மலைகளைப் பெயர்த்துத் தூக்கி வந்த மாவீரர்களில் அவனும் ஒருவன்.

மகாபாரதத்திலும் இடும்பன் என்ற பெயர் குறிப்பிடப் படுகிறது இவனுக்குச் சொந்தமான இடும்ப வனத்தில் இவன் பீமனோடு போர் புரிந்து மடிகிறான். இவன் சகோதரி இடும்பியை பீமன் மணக்கிறான். அவர்களது புதல்வன்தான் மாயா சக்திகள் பல பெற்ற கடோத்கஜன். மொத்தத்தில் இடும்பன் என்றால் பலம் மிக்கவன் என்ற பொருளைக் குறிக்கிறது.

திருவிளக்கு

இல்லத்தின் மங்கலப் பொருள் திருவிளக்கு. வெள்ளிக் கிழமை தோறும் திருவிளக்கை அலங்கரித்து தாம்பாளத்தில் அட்சதை வைத்து அதன் மேல் விளக்கை வைத்துச் சந்தனம், குங்குமம், புஷ்பம், பட்டாடை முதலியன சாற்றி விளக்கேற்றித் திருவிளக்குப் பூசை செய்தல் வேண்டும்.

மங்கலமான திருவிளக்கின் அடிப்பாகம் தாமரை போன்ற ஆசனம்(பாதம்) பிரம்மாவாகவும், அதன் நீண்ட தண்டு திருமாலாகவும், நெய்யேந்தும் அகல் ருத்திரனாகவும், திரிமுகைகள் மகேஸ்வரனாகவும், அனைத்திற்கும் சிகரமாவுள்ள நுனிப்பாகம் சதாசிவனாகவும், நெய்யானது நாதமாகவும் திரி பிந்துவாகவும், சுடர் திருமகளாகவும் தீப்பிழம்பு கலைமகளாகவும், சங்காரம் செய்யும் தீச்சக்தி

யாகவும், ஈற்றில் பஞ்சேந்திரியங்களை நடத்தும் பரப்பிரம்மமாகவும் விளங்குகின்றன.

இந்து சமயத் தத்துவங்கள் அனைத்தும் திருவிளக்கு ஒன்றின் மூலமாகவே உணர்த்தப்படுகின்றன.

திருவிளக்கின் ஐந்து முகங்களும், பெண்களுக்கு இருக்க வேண்டிய ஐந்து முக்கிய குணங்களான ''அன்பு, அறிவு, உறுதி, நிதானம், பொறுமை'' ஆகியவற்றை திருவிளக்கு வலியுறுத்துகிறது.

விஷ்ணு, சிவன், சக்தி ஆகிய எல்லாத் தெய்வங்களும் ஒளி ரூபத்திலேயே இருக்கின்றனர் என்பது அடியார்கள் பாடல்கள் கூறும்.

விளக்கிற்குப் பசுநெய் உத்தமம். நல்லெண்ணெயும் சிறிது நெய்யும் கலந்து விளக்கேற்றுவது நல்லது.

நல்லெண்ணெய் விளக்கு எரியும் பொழுது, நல்ல பாம்பு வீட்டிற்கு வந்தால் எவ்விதத் தீங்கும் செய்யாமல் போய் விடும்.

சிவ பெருமானுடைய குமாரர்கள் நால்வர்.
விநாயகர், வைரவர், வீரபத்திரர், முருகன் ஆக நால்வர்.

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு அருளிச் செய்த முதல் நூல்கள் : வேதம், சிவாகமம்.

வேதம்,சிவாகமங்களில் விதிக்கப் பெற்றவைபுண்ணியங்கள்.
வேதம், சிவாகமங்களில் விலக்கப்பட்டவை பாவங்கள்.

கடவுளை வழிபடுதல், தாய், தந்தை, குரு முதலிய பெரியவர்களை வணங்குதல், உயிர்களுக்கு இரங்குதல் உண்மை பேசுதல், செய்ந்நன்றி அறிதல் முதலானவை புண்ணியங்களாகும்.

கொலை, களவு, கள் குடித்தல், புலால் உண்ணல், பொய் பேசுதல், வியபசாரம், சூதாடுதல் முதலியவை பாவங்களாகும்.

□□□

பிரார்த்தனை செய்வது எப்படி?

எந்த வேளையும் இறைவனை நினைக்க வேண்டும். அது ஆரம்பத்தில் முடியாவிட்டால் மூன்று வேளைகளில் தவறாமல் நினைக்கவும்.

காலையில் விழித்தவுடன் "இறைவனே, இன்று நான் நல்ல வழியில் நிற்க அருள் புரி!" என்று தொழவும். உணவு உட்கொள்ளுமுன் "இறைவனே இந்த உணவினால் எனக்கு நல்ல அன்பும், அறிவும் உண்டாகும்படி அருள்புரி!" என்று தொழவும். இரவில் படுக்குமுன் "இறைவனே, இந்த உறக்கத்தில் உன் எண்ணமே நிற்க அருள் புரி!" என்று தொழவும்.—வாரியார் சுவாமிகள்.

பதினாறு பேறுகள்

1. புகழ் 2. கல்வி, 3. ஆற்றல் 4. வெற்றி 5. நன்மக்கள் 6. பொன் 7. நெல் 8. நல்லூழ் 9. நுகர்ச்சி 10. அறிவு 11. அழகு 12. பெருமை 13. இளமை 14. துணிவு 15. நோயின்மை 16. வாழ்நாள்.

பத்தாயுதங்கள்

1. வஜ்ஜிராயுதம் 2. சக்தி 3. தண்டம் 4. கட்கம் 5. பாசம் 6. துவசம் 7. கதை 8. திரிசூலம் 9. பதுமம் 10. சக்கரம்

எண் திசைப் பாலகர்

கிழக்கு—இந்திரன், தென்கிழக்கு—அக்கினி, தெற்கு—எமன், தென் மேற்கு—நிருதி, மேற்கு—வருணன், வடமேற்கு—வாயு, வடக்கு—குபேரன், வடகிழக்கு—ஈசானன்.

எண் வகை மங்கலங்கள்

1. கண்ணாடி, 2. நிறை குடம் 3 . கொடி, 4. சாமரம் 5. தோட்டி. . முரசம் 7. விளக்கு 8, இணைக்கயல்

எண் வகைச் செல்வம்

1. ஆட்சி 2. ஆளடிமை 3. மக்கள் 4. சுற்றம் 5. மண் 6. பெண் 7. மணி 8. வாகமை

முத்திக்குரிய தலங்கள்

திருவாரூர்—பிறக்க முத்தி தருவது. சிதம்பரம்—தரிசிக்க முத்தி தருவது. திருவண்ணாமலை—நினைக்க முத்தி தருவது. காசி—இறக்க முத்தி தருவது.

முத்தி தரும் தலங்கள் ஏழு. அவை காஞ்சி, மதுரை, மாயா (ஹரித்துவார்) அவந்திகா (உஜ்ஜயினி) அயோத்தி, துவாரகை, காசி.

□□□

இறைவனை அடைவதற்குரிய நால்வகை நெறிகள்: சைவ சமயக் குரவர் நால்வரும் மேற்கொண்டொழுகிய பக்தி நெறியினை இந்து சமயம் நால் வகையாகக் கூறுகிறது. அவை:

1. சரியை — தாசமார்க்கம்: அடிமையாயிருந்து பக்தி செய்யும் முறை. திருநாவுக்கரசர் வரலாறு எடுத்துக் காட்டு.

2. கிரியை—சர்ப்புத்திர மார்க்கம்: மகனாக இருந்து பக்தி செய்யும் மார்க்கம். திருஞான சம்பந்தர் வரலாறு சான்றாகும்.

3. யோகம்—சகமார்க்கம்: தோழனாக இருந்து பக்தி செய்யும் முறை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாறு கூறும்.

4. ஞானம்—சன்மார்க்கம்: ஞான நெறியில் நின்று பக்தி செய்தல். மாணிக்கவாசகர் வரலாறு சான்றாகும்.

□□□

தான பலன்கள்

1. அன்னதானம் தரித்திரமும் கடனும் நீங்கும்.
2. வஸ்திர தானம் ஆயுளை விருத்தி செய்யும்.
3. பூமி தானம் பிரம்ம லோகத்தையும் ஈஸ்வர தரிசனத்தையும் நல்கும்.
4. தேன் தானம் புத்திரபாக்கியத்தை உண்டாக்கும்.
5. கோதானம் ரிஷிக்கடன், தேவகடன், பிதுர்கடன் அகலும்.
6. நெல்லிக்கனி தானம் ஞானம் உண்டாகும்.
7. தீபதானம் கண்பார்வை தீர்க்கமாகும்.
8. அரிசி தானம் பாபங்களைப் போக்கும்.
9. நெய்தானம் நோய் தீர்க்கும்.
10. பால்தானம் துக்கம் நீங்கும்.
11. தயிர் தானம் இந்திரிய விருத்தி.
12. தேங்காய் தானம் நினைத்த காரியம் வெற்றியாகும்.
13. பழங்கள் தானம் புத்தியும் சித்தியும். கிட்டும்.
14. தங்கம் தானம் குடும்ப தோஷங்கள் நீங்கும்.
15. வெள்ளி தானம் மனக் கவலை நீங்கும்.

வில்வம், துளசி

திருமாலுக்குகந்தது துளசி;சிவனுக்குகந்தது வில்வம். சிவம் என்பது சூடு அல்லது அனல். விஷ்ணு என்பது குளிர்ச்சி அதாவது நீர்.

இதனால் சிவாலயத்தில் வெந்த நீறும், திருமால் கோயிலில் குளிர்ந்த நீரும் தருகிறார்கள்:

சூட்டைத் தணிப்பது வில்வம். குளிர்ச்சியைத் தவிர்ப்பது துளசி. இதனால்தான் சிவாலயத்தில் வில்வார்ச்சனையும் விஷ்ணு கோயிலில் துளசி அர்ச்சனையும் நடைபெறுகின்றன.

திருநீறும் திருமண்ணும்

தினசரி காலையில் நெற்றியில் திருநீறும் அல்லது திருமண்ணும் இட்டுக் கொள்ளும் பொழுது "இந்த உடல் ஒரு நாள் இப்படித்தான் நீறாகவோ மண்ணாகவோ போகப் போகிறது!" என்பதை உணரவேண்டும். அதனால் கெட்ட எண்ணங்கள் மனத்தில் மறையத் தொடங்கும்.

உள்ளங்கை

உள்ளங்கை அடிப்பாகத்தில் பார்வதியும், மத்தியில் சரஸ்வதியும், மேற்புறத்தில் லெட்சுமியும் அமைந்திருப்பதாகச் சொல்லப் பட்டிருப்பதால், காலையில் கண் விழித்தவுடன் அனைவரும் தத்தம் உள்ளங்கையைப் பார்த்து தரிசித்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

உணவு உண்ணும் போது சொல்ல வேண்டிய பாடல்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் ஏலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண்டின்புற
இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே"—அப்பர்

இறைவனின் ஆனந்தத் தாண்டவ நடனத்தில் ஐந்தொழில்

1. உடுக்கை ஒலி — படைத்தல்
2. வலக்கை (அபயம்) — காத்தல்
3. இடக்கை (தீ) — அழித்தல்
4. வலக்கால் (முயலதனை மிதித்தல்) — மறைத்தல்
5. இடக்கால் (தூக்கிய திருவடி) — அருளுதல்

இலிங்கத்தின் அமைப்பு

அடிப்பாகம் நாற் கோணமாயிருக்கும் - அது பிரமபாகம். நடுப்பாகம், எண் கோணமாயிருக்கும்— இது ஆவுடை

என்ற பீடத்துள் அமைந்திருக்கும். இது விஷ்ணுபாகம். மேற்பாகம் ருத்ரபாகம். எனவே மும்மூர்த்திகளின் உள் அடக்கமே இலிங்கமாகும்.

நீராடல்

நீராடும் திசை: நதியாக இருந்தால் நீர்வரும் திசைக்கு எதிர் முகமாக நின்றும், குளம் முதலான நீர் நிலைகளில் கிழக்கு அல்லது வடக்கு முகமாக நின்றும் நீராடுதல் வேண்டும்.

நீராடல் ஆறுவகைப் படும்.

1. நித்தியம் — நாள் தோறும் செய்யும் நீராடல்.
2. நைமித்தியம் — சண்டாளர், பிணப்புகை, மாதவிலக்குப் பெண்டிரைத் தொட்டு விட்டால் செய்வது.
3. காமியம் — கிருத்திகை முதலிய நாள்களில் புண்ணியச்செயல் அல்லது இச்சைபூர்த்தி செய்வது.
4. கிரியாங்கம் — பித்ரு காரியங்கள் செய்தல் பொருட்டுச் செய்வது.
5. மலாபகர்ஷணம்— எண்ணெய் தேய்த்துக் குளித்தல் முதலியன.
6. கிரியமஸ்நானம்— புண்ணிய நதிகள், தீர்த்தங்களுக்குச் சென்று நீராடல்.

ஒன்பது புனித. தீர்த்தங்கள் : 1. கங்கை, 2. யமுனை 3. கோதாவரி, 4. நர்மதை, 5. சரஸ்வதி, 6. காவிரி, 7. குமரி, 8. பாலாறு, 9. சரயு என்பன.

எண் வித பக்தி

1. பக்தர்களிடம் அன்பு செலுத்துதல்.
2. பூசை நெறிகளை ஏற்றுக் கொள்ளல்.
3. கதாகாலட் சேபங்களைக் கேட்பதில் நாட்டம்.

4. குரல், பார்வை முதலானவற்றின் வெளியீடு. குரல் தழுதழுத்தல், ஆனந்தக் கண்ணீர் பெருகுதல் முதலியன.
5. தானே பூசை செய்தல்.
6. செறுக் கற்றிருத்தல்—டம்பமின்மை.
7. சதா இறைவனை நினைத்துக் கொண்டே இருத்தல்.
8. கைம்மாறு கருதாத வழிபாடு.

பஞ்சாரண்யங்கள்

1. நைமிசாரணியம் (தருப்பை) திருவேற்கோலம்(கூவம்)
2. வடாரணியம் (ஆலங்காடு) திருவேலங்காடு
3. வீக்ஷாரணியம் (ஈக்காடு) திருவள்ளூர்
4. வம்சாரணியம் (மூங்கிற்காடு) திருப்பாசூர்
5. பதரிகாரணியம் (இலந்தைக் காடு) திருவெண்பாக்கம்

பஞ்ச பூதத் தலங்கள்

1. திருவாரூர் அல்லது காஞ்சிபுரம்	(பிருதுவி)	மண்
2. திருவண்ணாமலை	(தேயு)	தீ
3. திரு ஆனைக்கா	(அப்பு)	நீர்
4. திருக்காளத்தி	(வாயு)	காற்று
5. சிதம்பரம்	(ஆகாயம்)	வெளி

பஞ்ச சபைகள்

1. திருவாலங்காடு	இரத்தின சபை
2. சிதம்பரம்	கனக சபை (பொன்னம்பலம்)
3. மதுரை	ரஜத சபை (வெள்ளியம் பலம்)
4. திருநெல்வேலி	தாமிர சபை
5. திருகுற்றாலம்	சித்திர சபை.

பஞ்ச நாதம்

1. விஸ்வநாதம் 2. சோமநாதம் 3. ஜெகந்நாதம்
4. இராம நாதம் 5. வைத்திய நாதம்.

அட்ட வீரட்டங்கள்

1. திருக் கண்டியூர் — பிரமன் சிரம் கொய்தது.
2. திருக் கோவலூர் — அந்தகாசுரனைச் சங்கரித்தது.
3. திரு அதிகை — திரி புரத்தை எரித்தது
4. திருப் பறியலூர் — தக்கன் சிரம் கொய்தது
5. திருவிற்குடி — சலந்தாசுரனைச் சங்கரித்தது.
6. வழுவூர்(வைப்புத்தலம்)— யானையை உரித்தது
7. திருகுறுக்கை — காமனை எரித்தது.
8. திருக்கடவூர் — எமனை உதைத்தது.

காசிக்கு இணையாகக் கூறப்படும் தலங்கள்

1. திருவெண்காடு 2. திருவையாறு 3. மாயூரம்
4. திருவிடை மருதூர் 5. திருச்சாய்க்காடு
6 திருவாஞ்சியம்.

காசி கங்கை

காசியிலுள்ள கங்கை, காசி விஸ்வநாதரின் சொத்து. காசியிலிருந்து கங்கை நீரை எடுத்து வருவது. வழக்கம் இது தவறு. சிவச்சொத்து குலநாசம். காசி கங்கையை எடுத்து அங்குள்ள விஸ்வநாதர் லிங்கத்தின் மீதோ அல்லது வேறுலிங்கத்தின் மீதோ வில்வ தளம் வைத்து அபிஷேகம் செய்வது சிறப்பு. ஆகவே காசியில் கங்கா தீர்த்தத்தை எடுக்காமல் அலகாபாத்திலுள்ள ப்ரயாகை என்னும் திரிவேணி சங்கமத்திலோ, அல்லது ஹரித்துவாரிலோ கங்கையை எடுத்து செம்பில் அடைத்து வீட்டிற்கு எடுத்து வந்து பூசை செய்யலாம்.

காசிக் கயிறு

காசிக்குச் செல்பவர்கள் எல்லாம் காசிக் கயிறு என்று ஒரு கயிறு கொண்டு வருவது வழக்கம். இது கால பைரவர் பிரசாதம்.

பிரம்மனின் அஞ்ஞானத்தை அகற்ற அவருடையஐந்தாவது தலையைக் கொய்தருத்ரன்சிவாம்சத்தில் தோன்றியபைரவர் அவர் கையில் ஒட்டிக் கொண்ட பிரம்ம கபாலம் பத்ரியில், கங்கையில் விழுந்த பின்பு தன் பாபம் முழுவதும் போகக்

காசி க்ஷேத்திரத்தில் எழுந்தருளியதாக சிவபுராணம் கூறுகிறது. விஸ்வநாதர் கோயிலுக்கு வடக்கே அமைந்து கால பைரவர் கோயிலில் பாப பக்ஷேஸ்வரர் என்ற மூர்த்தியாக சிவ பெருமான் அருள் பாலிக்கிறார். பாவங்களுக்காகப் பச்சாதாபப்பட்டு, காசியில் உள்ள கங்கையில் குளித்தவர்களுக்குப் பாபம் நீங்கும். மீண்டும் பாபங்கள் செய்யாமலிருக்க பக்தர்கள் வரம் கேட்கும் ஆலயம் இது. பாப பக்ஷேஸ்வரரின் சந்நிதியில் இனி பாவம் செய்வதில்லை என்று உறுதி பூண்டு, அதற்காகக் கங்கணம் கட்டிக் கொள்ளும் கறுப்புக் கயிற்றை கால பைரவர் சந்நிதியில் கட்டிக் கொள்ள வேண்டும். இது ஒரு சத்யக் கயிறு. காசிக்குப் போய் வந்ததற்கான வெறும் அடையாளச் சின்னமன்று.

கங்கா ஸ்நானம்

கங்கையில் ஒரு முறை மூழ்கி எழுந்தால், எல்லாப் பாவங்களும் தொலைந்து மோட்சம் அடைந்து விடலாம் என்பது நம்பிக்கை. இது உண்மையானால் கங்கை நீரிலேயே சதாசர்வ காலமும் வாழ்ந்து கொண்டிருக்கும் மீன்களும் ஆமைகளும் மோட்சத்திற்கல்லவா போக வேண்டும். வெறும் கங்காஸ்நானம் பாவத்தைப் போக்கி விடாது. பாவங்களை நினைத்து வருந்தும் மனோபாவமும், மீண்டும் அந்தப் பாவங்களைச் செய்யாதிருக்கும் வைராக்கியமுமே ஒருவனைப் பவித்ரமாக்க முடியும் இந்த வைராக்கியத்தைப் பெறவே கங்காஸ்நானம்.

—ஸ்ரீராம கிருஷ்ண பரமஹம்ஸர்

அனுமனும் கண்ணனும்

1. இருவருக்கும் வெண்ணெய் மிகப் பிடித்தமானது.
2. இருவரும் மலையைத் தூக்கியவர்கள். அனுமன் சஞ்சீவி பர்வதத்தைத் தூக்கினார். கண்ணன் கோவர்த்தனத்தை விரலினால் தூக்கினார்.

3. அனுமன் ராமர் பொருட்டு தருமத்தை நிலை நாட்ட இலங்கைக்குத் தூது சென்றான். கண்ணன் திருதராஷ்ரானிடம் பாண்டவர்களுக்காகத் தூது சென்றான்.

4. இருவருடைய தூதும் யுத்தத்தில்தான் முடிந்தது.

5. இருவரும் விஸ்வரூபம் எடுத்தவர்கள். அனுமன் இலங்கைக்கு தூது சென்றபொழுது, இராவணனுடைய சபையில் விஸ்வரூபம் எடுத்தான். கண்ணன் திரௌபதியின் மானத்தைக் காக்க வஸ்திராபரணத் தின்போது உதவினான்.

6. அனுமன் பவழ மல்லிகை மர வேரில் இருப்பவன். கண்ணன் பவழ மல்லிகை மரத்தடியில் வீற்றிருப்பவன்.

பிள்ளையார் நோன்பு விளக்கம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய நம் தனவணிகப் பெருமக்கள், தொன்று தொட்டுப் பிள்ளையார் வழிபாட்டை முறைப்படி செய்து வருகிறார்கள். நம் மரபினர் அனைவரும் பொதுவாக வைத்து வணங்கும் விநாயகரை "மரகத விநாயகர்" என்று கல்வெட்டுகளும் வரலாற்று நூல்களும் குறிக்கின்றன. எடுத்த காரியங்கள் இடையூறின்றி நிறைவேறுதற் பொருட்டுச் செய்யத்தக்கவிநாயக வணக்கம், ஒவ்வொரு செயலுக்கும் முன்னிலையாக எல்லோராலும் மேற்கொள்ளப் பெறுவது போல, நகரத்தார்களாலும் மேற் கொள்ளப் பெறுமாயினும், சிறப்பாக ஆண்டுக்கொரு முறை மார்கழி மாதத்துச் சுக்கிலபக்ஷச் சஷ்டி நாளில், "பிள்ளையார் நோன்பு" என்னும் பெயரில் குடும்ப விரத மாக வழிபாட்டை நகரத்தார்கள் நிகழ்த்தி வருகிறார்கள். இவ்வழிபாடு, எந்தக் காலத்தில் இவர்களால் மேற்கொள்ளப் பெற்றது என்று குறிப்பிட முடியாத பழைய காலத்தி

லிருந்து, நிகழ்ந்து வருகிறது. இவ்வழிபாட்டால் இவர்களுக்கு இறைவன் திருவருள் சித்திப்பது ஒருபுறம் இருக்க, ஏதாவது காரணம் பற்றிக் குடும்பத்தில் பிணக்குகள் ஏற்பட்டிருந்தால், அப்பிணக்குகள் தீர்ந்து ஒற்றுமை ஆவதற்கும், இது துணையாய் இருந்து வருகிறது. பாரத நாட்டு மக்கள் அனைவருக்கும் பொங்கல் விழா எப்படி இன்றியமையாததோ, அப்படியே, நகரத்தார்களுக்குப் பொங்கலும், பிள்ளையார் நோன்பு ஆகிய இரண்டும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன.

புராணங்களில் பிள்ளையார் வழிபாட்டிற்குச் சிறந்தனவாக, ஆவணி மாதத்துப் பூர்வபக்ஷச் சதுர்த்தியும் மார்கழி மாதத்துப் பூர்வபக்ஷச் சஷ்டியும் குறிக்கப் பெறுகின்றன. முன்னையது விநாயகப் பெருமான் திரு அவதார நாள். பின்னையது, அவர் கஜமுகா சூரசம்ஹாரம் செய்து அடியார்களைக் காத்த நாள். இவ்விரண்டு நாட்களிலும் வழிபாடு செய்வது, இன்ப ஆக்கம் துன்பநீக்கம், இரண்டையும் பெறுவதற்கென்று, பெரியவர்கள் சொல்லுவார்கள்.

நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு முறை சமூகம் முழுவதிலும் ஒரே அமைப்பில் இருப்பதால் நோன்பு நாள் மாலையில், விநாயகப் பெருமானது திரு உருவத்தை வீட்டில் புனிதமான இடத்தில் எழுந்தருளுவித்து நிவேதனத்திற்காக, எள், நெல், முதலியனவற்றாலான பொரி வகைகளும், பணியாரம் என்று நகரத்தார்களால் குறிப்பிடுகிற அப்பம் வகைகளும் வெல்லப்பாகுக் கடலை உருண்டை முதலியனவும் ஆசாரத்துடன் தயாரித்து, நிவேதித்து, ஆவாரம்பூவால் செண்டு கட்டிச் சுவாமி திருமுன் வைத்து, ஆவாரம் பூவினாலேயே அருச்சித்து, வேழமுகம் ஓதித் தோத்திரம் செய்து, இருபத்தொரு நூலிழைகள் கொண்ட திரியை, வெல்லம் சேர்ந்த அரிசிமா, திரட்டுப்பால், வாழைப்பழம் ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்றில் சேர்த்து, பசு நெய் விளக்கில் ஏற்றி

உட்கொண்டு நோன்பை நிறைவு செய்வது வழக்கமாக இருக்கிறது.

விநாயகப் பெருமானுக்கு, பொரி, கடலை, அப்பம் முதலியவற்றில் அதிக விருப்பம் என்பதால் அவற்றை நிவேதித்தும், இந்த நோன்பு திருக்கார்த்திகை தொடங்கி சதய நக்ஷத்திரம் வரை உள்ள இருபத்தொரு நாளில் அமையும் சஷ்டியில் கொண்டாடப் பெறுவதால் அவ் விருபத்தொரு நாட்களை நினைவு கூரும் வகையில் அமைந்த ஏற்ற இறக்கம் இல்லாத (ஒக்கப்பிறந்தவர் இருவர், உடன் பிறந்தவர் மூவர், செக்கச்சிவந்தவர் ஐவர், செவ்வாழைப்பழம் மூன்று, நமரி வாழைப்பழம் நான்கு, பச்சைப் பாம்புக்குட்டி ஒன்று, படமெடுத்த பாம்புக்குட்டி மூன்று ஆக 21.) இருபத்தொரு இதழ்களே உடைய பொன் ஆவாரம்பூவால், அருச்சிப்பதும், துன்ப நீக்கத்தைச் செய்வ தாகிய விநாயகப் பெருமானது அங்குசத்தை, நினைவு படுத்தும் வகையில் பூச்செண்டை அவர் திருமுன் வைப்பதும், விரத நாள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு ரக்ஷை (நூல்)யாக இருபத்தொரு ரக்ஷைகளைத் திரியாக ஒன்று கூட்டித் திருவிளக்கு ஏற்றுவதும் அந்த விளக்குக்கு ஆதாரமாக இனிப்புச் சுவைப் பொருள்களைக் கூட்டித் திருவருட் பிரசாதமாக உட்கொள்ளுவதும் இந்த நோன்புச் செயல்களில் அமைந்த தத்துவங்கள்.

சமயக்குரவர் குருபூசைத் திருநாட்கள

சித்திரை மாதம் சதய நட்சத்திரம் — அப்பர்
வைகாசி மாதம் மூல நட்சத்திரம் — திருஞான சம்பந்தர்
ஆணி மாதம் மகம் நட்சத்திரம் — மாணிக்கவாசகர்
ஆடி மாதம் சுவாதி நட்சத்திரம்— சுந்தரமூர்த்தி

சமயக்குரவர் வயது

அப்பர்—81, மாணிக்கவாசகர்—32, சுந்தரர்—18, சம்பந்தர்—16.

வருணன்

மேற்குதிசைக் காவலன் வருணன். நீரின் தேவதை. வருணன் பூமியின் பரப்பில் முக்கால் பாகமாகிய நீரின் அதிதேவதை. வருணனை வழிபட்டால் பூமியில் மழை பொழிந்து, நீர் நிலைகள் நிறைந்து நிலம் செழித்துப் பயிரும் உயிரும் வாழ வழி பிறக்கும்.

எந்த ஒரு புனித காரியம் செய்யத் தொடங்கினாலும் முதலில் ஒரு கும்பத்தில் நீர் நிரப்பி அதில் மா இலை வைத்து அந்தக் குடும்பத்தில் வருணனை ஆவாகனம் செய்து, அந்தத் தீர்த்தத்தால் புனிதப் படுத்தி எந்த நற்பணியையும் தொடங்குவது மரபு. விநாயகருக்கு அடுத்த படியாகப் பூசைகளில் முதலிடம் பெறுவது வருணதேவன். மனைசாஸ்திரப்படி வருணனின் திசை மேற்கு. பல நல்ல காரியங்களுக்கு உகந்ததாகும்.

பனிரெண்டு

திருமுறைகள் 12; முருகனுடைய தோள்கள் 12; சிவஞானபோதச் சூத்திரங்கள் 12; ஆதித்தர்கள் 12; மாதங்கள் 12; இராசிகள் 12; ஆழ்வார்கள் 12; திருமாலின் மந்திர எழுத்துக்கள் 12; திருமண் இடும் இடங்கள் 12; சைவ அனுட்டானத்தில் தொடும் இடங்கள் 12; சுரஸ்தானங்கள் 12; அகத்தியருடைய மாணவர்கள் 12; ஏசுவின் சீடர்கள் 12; தமிழ் உயிர் எழுத்துக்கள் 12; கணாக்ர கண்யர் 12; திணை 12; திருக்குறளின் பெயர்கள். 12 ஆக இன்னும் ஏராளம் உள்ளன.

□

நாலாயிர திவ்யப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்கள்

1. பெரியாழ்வார் — பெரியாழ்வார் திருமொழி 473 பாசுரங்கள்

2. ஆண்டாள் — திருப்பாவை — 30 நாச்சியார் திருமொழி—143.

3. குலசேகர ஆழ்வார் — பெருமாள் திருமொழி—105

4. திருமழிசை ஆழ்வார் — திருச்சந்த விருத்தம்—120 நான் முகத்திருவந்தாதி - 99

5. தொண்டரடிப்பொடி ஆழ்வார் — திருமாலை—45. திருப்பள்ளி எழுச்சி 10

6. பொய்கை ஆழ்வார்— முதல் திருவந்தாதி—100

7. பேயாழ்வார் — இரண்டாம் திருவந்தாதி—10

8. பூதத்தாழ்வார் மூன்றாம் திருவந்தாதி—10

9. திருப்பாணாழ்வார் — அமலன் ஆதிபிரான்—10

10. மதுரகவி ஆழ்வார் — கண்ணி நுண் சிறுதாம்பு—11

11. திருமங்கை ஆழ்வார் —
பெரிய திருமொழி - 1084
திருக்குறுந்தாண்டகம்—20
திருநெடுந்தாண்டகம்—30
திருவெழு கூற்றிருக்கை—1
சிறிய திருமடல் கண்ணி —77இ
பெரிய திருமடல் கண்ணி—148இ.

12. நம்மாழ்வார்—
திருவாய்மொழி—1102
திருவிருத்தம்—100
பெரிய திருவந்தாதி - 87
திரு ஆசிரியர் – 7

1. ஆகாயத்தில் மேகங்கள் தோன்றிச் சூரியனை மறைக்குமானால் அதன் பிரகாசமும் மறைந்து போகும். அது போல மனத்தில் அகங்காரம் இருக்கும் வரையில் அதில் ஈசுவர ஜோதி பிரகாசிக்காது.

2. இரவில் வானில் பல விண்மீன்களைக் காண்கிறாய் ஆனால் சூரியன் உதித்ததும் அவை தென்படுவதில்லை.

ஆதலால் பகற்பொழுதில் ஆகாயத்தில் நட்சத்திரங்களே இல்லை என்று சொல்லலாமா? மனிதனே, உனது அஞ்ஞான காலத்தில் நீ இறைவனைக் காண முடியாததனால், இறைவனே இல்லை என்று சாதிக்காதே.

3. இறைவன் திருநாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் எவனுக்கு மயிர்க் கூச்செடுத்து கண்களில் ஆனந்தக் கண்ணீர் பெருகுமோ அவனுக்கு அதுதான் கடைசிப் பிறவி.

—பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைத் துளிகள்

'இல்லை' என்று ஒரு போதும் சொல்லாதே. 'என்னால் இயலாது' என்று ஒரு நாளும் சொல்லாதே.

மனிதனே மேலானவன், எல்லா மிருகங்களைவிடவும், எல்லாத் தேவர்களைவிடவும், மனிதன் உயர்ந்தவன். மனிதனை விட உயர்ந்தவர் யாருமே இல்லை.

முதலில் கீழ்ப்படிவதற்குக் கற்றுக் கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாக வந்து சேரும்.

—ஸ்வாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

தவம் செய்தால் மட்டும் இறையருள் கிடைத்து விடும் என்ற நியதி இல்லை. பழங்காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் தலைகீழாக நின்றும் தீயிடை நின்றும் மகரிஷிகள் தவம் செய்தனர். அப்போதும்கூட ஒரு சிலரே கடவுளின் அருள் பெற்றனர்.

கடவுளைச் சரணடைந்தவன்தான் காப்பாற்றப்படுவான்.

நூறுதரம் கேட்டாலும் கூடத் தன் கையிலுள்ளதைக் கொடுக்க மறுக்கும் குழந்தை, மற்றொருவருக்குக் கேட்ட மாத்திரத்திலேயே கொடுத்து விடலாம். அது போன்றே ஆண்டவன் அருளும் எவ்விதக் கட்டுப்பாடும் அற்றதாக உள்ளது.

காலை, மாலை, சந்தியா காலமே கடவுள் வணக்கத்திற்கு ஏற்றது. அப்போது மனம் பரிசுத்தமாக இருக்கும்.

—ஸ்ரீ சாரதா தேவியாரின் சிந்தனைத் துளிகள்

திருவள்ளுவர் அருளிய திருக்குறள்
கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா அர் எனின்

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார்.

வேண்டுதல் வேண்டாமை இலான்அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

பொறி வாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறி நின்றார் நீடுவாழ் வார்.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க் கல்லால்
பிற வாழி நீந்தல் அரிது

கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்

□ □ □

பிள்ளையார் வழிபாடு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை

நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே!

—திருமூலர்

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே!

—சம்பந்தர்

திருவாக்கும் செய் கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை

—கபிலர்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

—ஞானக் கூத்தர்

வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

—ஔவையார்

ஓதவினை அகலும் ஓங்குபுகழ் பெருகும்
காதல் பொருள் அனைத்தும் கைகூடும்—சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேல் பாரதப்போர் தீட்டும்
தனிக்கோட்டு வாரணத்தின் தாள்

—பெருந்தேவனார்

அல்லல் போம் வல்வினைபோம் அன்னைவயிற்றில் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம் நல்லபோம்—
குணமதிகமாம் அருணைக் கோபுரத்தில் மேவும்
கணபதியைக் கைதொழுதக்கால்.

—விவேக சிந்தாமணி

கைத்தலம் நிறைகனி அப்பமொடு அவல்பொறி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவர்
கற்பகம் எனவினைக் கடிதேடும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரண்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதியமுதல் வோனே!

முப்புரம் எரிசெய்த அச்சிவன் உரைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா!
அத்துயர் அது கொடு சுப்பிரமணி படும்
அப்புனம் அதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணமருள் பெருமாளே!

—அருணகிரிநாதர்

திங்களங் கொழுந்து வேய்ந்த
செஞ்சடைக் கொழுந்தே போற்றி.
மங்கை வல்லபைக்கு வாய்த்த
மகிணநின் மலர்த்தாள் போற்றி
ஐங்கர நால்வாய் முக்கண்
அருட்சிவக் களிறே போற்றி
கங்கையாய் மகிழும் செல்வக்
கணேசநின் கழல்கள் போற்றி

— இராமலிங்கர்

நீடாழி உலகத்து மறைநாலொடு ஐந்தென்று நிலைநிற்கவே
வாடாத தவவாய்மை முனிராசன் மாபார தம் சொன்ன நாள்
ஏடாக மாமேரு வெற்பாக அங்கூர் எழுத்தாணி தன்
கோடாக எழுதும் பிரானைப் பணிந்தன்பு கூர்வாமரோ!

—வில்லி புத்தூரர்

ஔவையார் அருளிய
விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக்கு அருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாகஇனி தெனக்கு அருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கும் ஒன்றிடம் என்ன
அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டிச்
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

காரியசித்திமாலை

1

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்

2

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றாம்.

3

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவுமருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றாம்.

4

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னாலும் உயிர்க்குநலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம்.

5

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்

ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன் யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றாம்.

6

வேதம் அளந்து அறிவரிய
விகிர்தன் யாவன் விமுத்தகைய
வேத முடிவில் நடம் நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றாம்.

7

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன் வழியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடை ஒன்றாம்
அண்ணல் எவன்அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றாம்

8

பாச அறிவில் பசு அறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன் யாவன்

பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக்கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றாம்.

நூற் பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம்மும்மைச்
சந்தி களில் தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுபம் பெறும் எண்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் ஏனச்செப்பினர்
மறைந்தார்.

—கச்சியப்பர், விநாயகர் புராணம்

காசிப முனிவர் அருளிய
விநாயகர் கவசம்

வளர்சிகையைப் பராபரமாய் வயங்கு விநாயகர் காக்க
வாய்த்த சென்னி
அளவுபடா வதிகசவுந் தரதேகம தோற்கடர்தாம்
அமர்ந்து காக்க

விளரற நெற்றியை யென்றும் விளங்கிய காசிபர் காக்க
புருவந் தம்மைத்
தளர்வின் மகோ தரர்காக்க தடவிழிகள் பாலச்சந்
திரனார் காக்க.

கவின்வளரும் அதரங்கச முகர்காக்க தாலங்கணக்
கிரீடர் காக்க.
நவில்சி புகம் கிரிசைசு தர்காக்க நனிவாக்கைவி
நாயகர்தாங் காக்க.
அவிர்நகை துன்முகர்காக்க அள்ளெழிற் செஞ்செவி
பாசபாணி காக்க.
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி நாசியைச்
சிந்தித்தார் காக்க.

காமரூபூ முகந்தனைக் குணேசர் நனிகாக்க களம்
கணேசர் காக்க.
வாமமுறுமிரு தோளும் வயங்குகந் தபூர்வசர் தாம்
மகிழ்ந்து காக்க.
ஏமமுறு மணிமுலை விக்கின வினாயகன் காக்க.
இதயத் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க அகட்டினைத் துலங்கே
ரம்பர் காக்க.

பக்க மிரண்டையுந் தராதரர் காக்கப் பிருட்டத்தைப்
பாவ நீக்கும்
விக்கினகரன் காக்க விளங்கி லிங்கம் வியாளபூ
டணர்தாங் காக்க.
தக்கக்குய்யந் தன்னைவக் கிரதுண்டர் காக்கசக
னத்தை யல்லல்
உக்க கணபன் காக்க ஊருவை மங்கள மூர்த்தி
யுவந்து காக்க.

தாழ் முழந்தாள் மகாபுத்தி காக்க விருபதமேக
தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசாதனர் காக்க முன்கையை
வணங்குவார் நோய்

ஆழ்தரச் செய்யா சாபூரகர் காக்க விரல்பதும
வத்தர் காக்க.
கேழ்கிளரு நகங்கள் விநாயகர் காக்க கிழக்கினிற்
புத்தீசர் காக்க.

அக்கினியிற் சித்தீசர் காக்க உமா புத்திரர்தென்
னாசை காக்க
மிக்கநிருதி யிற்கணேசுரர் காக்க விக்கினவர்த்
தனர் மேற்கென்னுந்
திக்கதனிற் காக்கவா யுவிற் கசகன் ்னன் காக்க
திகழ்உதீசி
தக்கநிதிபன் காக்க வட கிழக்கி லீசாந்
தனரே காக்க.

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்க விரவினுஞ்சந்தி
யிரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கின கிருது காக்க இராக்கதர்பூத
முறுவே தாள
மோகினி பேயிவையாதி யுயிர்த்திறத் தால்வருந்துயரு
முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்கு புபாசாங்குசர் தாம்
விரைந்து காக்க

மதிஞானம் தவம்தான மானமொளி புகழ்குலம்வண்
சரீரமுற்றும்
பதிவான தனம்தானி யங்கிரகம் மனைவிமைந்தர்
பயினட் பாதிக்
கதியாவுங் கலந்து சர்வாயுதர் காக்க காமர் பவுத்
திரர் முன்னான
விதியாருஞ் சுற்றமெலா மயூரேச ரெஞ்ஞான்றும்
விரும்பிக் காக்க.

வென்றிசீவி தங்கபிலர் காக்க கரியாதி யெலாம்
விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ திடினும்பா
லிடையூ றொன்றும்

ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள் யாரொருவ
ரோதினாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச் சிரதேக
மாகி மன்னும்.

விநாயகர் கவசம் முற்றிற்று

பிள்ளையார் நோன்பு வழிபாடு

வேழமுகம்

வேழமுகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளி ஓடும் தொடர்ந்த வினைகளே
அப்ப முப்பழம் அமுதுசெய்தருளிய
தொப்பை யப்பனைத் தொழ வினையறுமே

பிள்ளையார் சிந்தனை

சிந்தித்தவர்க்கருள் கணபதி	ஜெய ஜெய
சீரியவானைக் கன்றே	ஜெய ஜெய
அன்புடை அமரர்க்கு ஆப்தாய	ஜெய ஜெய
ஆவித்துணையே கணபதி	ஜெய ஜெய
இண்டைச் சடைமுடி இறைவா	ஜெய ஜெய
ஈசன் தந்தருள் மகனே	ஜெய ஜெய
உன்னியகருமம் முடிப்பாய்	ஜெய ஜெய
ஊர் நவசந்தி உகந்தாய்	ஜெய ஜெய
எம்பெருமானே இறைவா	ஜெய ஜெய
ஏழுலகுந்தொழ நின்றாய்	ஜெய ஜெய
ஐயாக் கணபதி நம்பியே	ஜெய ஜெய
ஒற்றை மருப்புடை வித்தகா	ஜெய ஜெய
ஓங்கிய வானைக்கன்றே	ஜெய ஜெய
ஔவியமில்லா அருளே	ஜெய ஜெய
அக்கர வஸ்து ஆனவா	ஜெய ஜெய
கணபதி என்வினை களைவாய்	ஜெய ஜொ

ஙப்போல் மழுவொன் றேந்தியே ஜெய ஜெய
சங்கரன் மகனே சதுரா ஜெய ஜெய
ஞய நம்பினர்பா லாடிய ஜெய ஜெய
இடம்பட விக்கின விநாயகா ஜெய ஜெய
இணங்கிய பிள்ளைகள் தலைவா ஜெய ஜெய
தத்துவ மறை தெரி வித்தகா ஜெய ஜெய
நன்னெறி விக்கின விநாயகா ஜெய ஜெய
பள்ளியிலுறை தரும் பிள்ளாய் ஜெய ஜெய
மன்றுள் ளாடும் மணியே ஜெய ஜெய
இயங்கிய ஞானக் குன்றே ஜெய ஜெய
அரவக் கிண்கிணி ஆர்ப்பாய் ஜெய ஜெய
இலகக் கொம்பொன் றேந்தியே ஜெய ஜெய
வஞ்சனை யாவும் தீர்ப்பாய் ஜெய ஜெய
அழகிய ஆனைக் கன்றே ஜெய ஜெய
இளமத யானை முகத்தாய் ஜெய ஜெய
இரகுபதி விக்கின விநாயக ஜெய ஜெய
அனந்த லோடாதி
அடி தொழ அருளே

சரஸ்வதி பூஜை

புத்தகத் துள்ளுறை மாதே
பூவில் அமர்ந்துறை வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப் பொருளுக் கிறைவி
முத்தின் குடைய யுடையாளே
மூவுலகுந் தொழு தேவி
செப்பு கவித்தன முலையாய்
செவ்வரி ஓடிய கண்ணாய்
முத்து நிறத்த வெண்பல்லாய்
முருக்கம்பூ மேனி நிறத்தாளே
தக்கோலம் தின்ற துவர்வாயாய்
சரஸ்வதி என்னும் திருவே

எக்காலும் உன்னைத் தொழுவோம்
எழுத்தறி புத்தி பண்ணுவிப்பாய்
ஆக்காய் எம்பெரு மாட்டி
அழகிய பூவணை மீதாய்
நோக்காய் என்மிடி தீர
நொடிக்கும் பிராமணத்தி நோக்காயே
சாலு நெல்லரிசி கொண்டு
சரஸ்வதி பூசை பண்ணி
பாலொடு பழத்தை நிரப்பி
பராவித் தொழுவோம் நங்காய்
நங்காய் நங்காய் நமோஸ்து
ஞானக் கொழுந்தே நமோஸ்து
கல்விக் கரசே நமோஸ்து
கணக்கறி தேவி நமோஸ்து
சொல்லும் பொருளே நமோஸ்து
சூக்கும் ரூபி நமோஸ்து

பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை

எள்ளுப் பொரித்த பொரியும்
இடித்தவல் தன்னிற் கலந்து
வள்ளிக் கிழங்கைத் திருத்தி
வாழைப் பழத்தை யுரித்து
உள்ளிய பாகுந் திரட்டி
உண்ணும் படியே தருவோம்
கள்ளத் திருமால் மருகா
கணபதி சப்பாணி கொட்டாயே
ஆறுதேங்காய் அவல் தூணி
அதற்குத் தகுந்த எள்ளுருண்டை
நூறு குடலை மாம்பழம்
நொடிக்கு மளவிலமுது செய்ய
வல்ல பிள்ளாய்
ஆடாய் பாடாய் சங்கீதம்

அடியேன் காண நின்றாடாயே
சண்டப் பெருச்சாளி யேறி
சடுகுடு வென்ன வுலாவி
இண்டை இளம்பிறை சாய
இணங்கிய கொம்பு இரண்டுத
அண்டத் தமரர் துதிக்க
அடைக்கலங் காத்த பிரானாரே
குண்டைக் கணபதி நம்பி
குடங்கையாற் சப்பாணி கொட்டாயே
பொழுது விடிந்தது பொழுது
போய்த் திருமலைமே லேறவேண்டும்
ஏறிமலர்ந்த பூக் கொய்ய வேண்டும்
கொய்து திருமுடிச் சாத்த வேண்டும்
சாத்திக்கை கட்டி நிற்க வேண்டும்
நின்று திருவிளக்கேற்ற வேண்டும்
ஏற்றி அரஹரா என்ன வேண்டும்
ஐயாக் கணபதி நம்பி
ஆயிர நாம முடையாய்
பொய்யில்லா மெய்யே யுரைப்பாய்
போனதெல்லாந் தருவாய்
வெள்ளித்தாலம் பூசி வைத்து
வேண்டும்படியே யிட்டுண்டு
பள்ளிக் கேற்க நடவாய்
பாக்கியஞ் செய்த பிள்ளாய்
பிள்ளாய் பிள்ளாய் பேருடையாய்
பிரம மென்னும் பேருடையீர்
பிள்ளைகள் தங்கள் பிரானாரே
இருந்தீரே பிரானாரே
எங்கள் மனது கலங்காதே
பள்ளித்தடுக்கும் கை யேடும்
படிக்குஞ் சுவடியும் பரிந்தெடுத்துத்
துள்ளித்திரியும் கால் தன்னைச்

சுகமே நிறுத்தும் பிரானாரே
ஓடாதே ஒளியாதே
இட்டாத சோறும் பெற்றதே கறியும்
உண்டு தூங்கிப் பூசை முடித்து
வெள்ளி முளைக்கப் பள்ளிக்கு வருவோம்.

அருணகிரி நாதர் அருளிய
கந்தரந்தாதி

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்த செந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன்
செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே.

திரிகை லாயிர வெல்லாழி மண்விண் டருசிரபாத்
திரிகையி லாயிர வாநந்த நாடகி சேரிமகோத்
திரிகையி லாயிர மிக்குமைந் தாசெந்தி லாயொருகால்
திரிகையி லாயிரக் கோடிசுற் றோடுத் திருத்துளமே.

சிவசிவ சங்கர வேலா யுதத்தினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய்பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே

கந்தரலங்காரம்

காப்பு

அடலரு ணைத்திருக் கோபுரத் தேய்ந்த வாயிலுக்கு
வடவருகிற் சென்று கண்டுகொண் டேன்வரு வார்தலையிற்
றடபடெனப்படு குட்டுடன் சர்க்கரை மொக்கியகைக்
கடதட் கும்பக் களிற்றுக் கிளைய களிற்றினையே.

நூல்

பேற்றைத்தவஞ் சற்றுமில்லாத வென்னை ப்ரபஞ்ச
மென்னுஞ்
சேற்றைக் கழிய வழிவிட்ட வாசெஞ்சடாடவிமேல்

ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே. 1

ஓரவொட்டாரொன்றை யுன்னவொட்டார்மல ரிட்டுனதாள்
சேரவொட்டாரைவர் செய்வதென்யான் சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட் டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே. 2

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை ஈடேற்று வாயிரு நான்கு வெற்பும்
அப்பாதி யாய்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே. 3

வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ளுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா வுடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே. 4

கோழிக் கொடியன் அடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற்பெருவலி யுண்ணவொட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே. 5

மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம் போற்
கைதா னிருப துடையான் தலைபத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே, 6

தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன் னேவந்து காத்தருளே. 7

ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள் மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்த செச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே, 8

பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையர்கண்
சேலென்ப தாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்
தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே. 9

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே. 10

பாலே யனைய மொழியார்த மின் பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்
தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே. 11

நிணங்காட்டுங் கொட்டிலை விட்டொரு வீடெய்தி
நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்திதெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்
ததுவே. 12

கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேன் முருகனைப்போற்றி
[யன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே. 13

தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றிநரம்

பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டுமேய்ந்த
அகம் பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி
வேறில்லையே. 14

நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மநோதுக்க மானது மாய்வதற்குக. 15

சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித்தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போதைக்கு நீ வழி காட்டென்று போய்க்கடல்
தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில்வாகனனே. 16

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யா ரென்செய் வார்யம
தூதருக்கே. 17

சிந்திக்கி லேனின்று சேவிக்கி லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேனொன்றும் வாழ்த்துகி லேன்மயில்
வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி லேனுண்மை
சாதிக்கிலேன்
புந்திக்கி லேசமுங் காயக்கி லேசமும் போக்குதற்கே. 18

வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன் விடுங்
கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே. 19

பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே. 20

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிருதோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ் செங் கோடன் மயூரமுமே. 21

கோடாத வேதனுக் கியான் செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழா தகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே. 22

பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேன்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்குமரா அமராவதி காவலனே, 23

மைவருங் கண்டத்தர் மைந்தகந்தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றிமற்றறியேன் கற்றகல்வியும் போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகி நிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே: 24

வணங்கித் துதிக்க அறியா மனித ருடனிணங்கிக்
குணங்கெட்ட துட்டனை யீடேற்றுவாய் கொடி யுங்கழுகும்
பிணங்கத் துணங்கையலகை கொண்டாடப்பிசிதர் தம்வாய்
நிணங்கக்க விக்ரம வேலா யுதந்தொட்ட நிர்மலனே. 25

மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியில்

சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டு
தொழு
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே. 26

கதிதனை யொன்றையுங் காண்கின்றி லேன்கந்தவேல்
முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம்பாற்பொதிந்த
பொதிதனையுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போத
விட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம்
வேகின்றதே. 27

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே. 28

திருவடி யுந்தண் டை யுஞ்சிலம் புஞ்சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே

செங்கே ழடுத்த சினவடிவேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் தெதிர்
நிற்பனே

ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே, 31

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடி முத்தந்

தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயி லேறிய மாணிக்கமே. 32

சூலம் பிடித்தெம் பாசுஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன்கடல் மீதெழுந்த
ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையுமுண்டே நமக்கொரு மெய்த்துணையே.

உ

கந்தரநுபூதி

காப்பு

நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக்கியல் சேர்
செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே
பஞ்சக் கரவானை பதம் பணிவாம்.

நூல்

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே: 1

உல்லாச நிராகுல யோக விதச்
சல்லாப விநோதனு நீயலையோ
எல்லாமற என்னை யிழந்த நலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே. 2

வானோ புனல்பார் கனல்மா ருதமோ
ஞானோ தயமோ நவில்நான் மறையோ
யானோ மனமோ எனையாண் டவிடந்
தானோ பொருளா வதுசண் முகனே 3

வளைபட் டகைம்மாதொடு மக்க ளெனுந்
தளைபட் டழியத் தகுமோ தகுமோ
கிளைபட் டெழுசூ ருரமுங் கிரியுந்
தொளைபட் டுருவத் தொடுவே லவனே. 4

மகமாயை களைந்திட வல்ல பிரான்
முகமாறு மொழிந்து மொழிந் திலனே
அகமாடை மடந்தைய ரென்றயருஞ்
சகமாயையுள் நின்று தயங்குவதே, 5

திணியா னமனோ சிலைமீ துனதாள்
அணியா ரரவிந்த மரும்புமதோ
பணியா வென வள்ளிபதம் பணியுந்
தணியா வதிமோக தயாபரனே. 6

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவே லிறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே. 7

அமரும் பதிகே ளகமா மெனுமிப்
பிமரங் கெடமெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம்பொரு தானவ நாசகனே. 8

மட்டூர்குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டுசல் படும் பரிசென் றொழிவேன்
தட்டு டறவேல் சயிலத் தெறியும்
நிட்டூர நிராகுல நிர்ப் பயனே, 9

கார்மா மிசைகா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே. 10

கூகா வெனவென் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகாசல வேலவ நாலுகவித்
தியாகா சுரலோக சிகாமணியே 11

செம்மான் மகளைத் திருடுந் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்

சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே, 12

முருகன் தனிவேல் முனிநங் குருவென்
றருள்கொண் டறியா ரறியுந் தரமோ
உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே. 13

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழி நாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லு மவாவினையே, 14

முருகன் குமரன் குகனென்று மொழிந்
துருகுஞ் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவுங்
குருபுங்கவ எண்குண பஞ்சரனே. 15

பேராசை யெனும் பிணியிற் பிணிபட்
டோரா வினையே னுழலத் தகுமோ
வீரா முதுசூர் படவே லெறியுஞ்
சூரா சுரலோக துரந்தரனே. 16

யாமோதிய கல்வியு மெம்மறிவுந்
தாமேபெற வேலவர் தந்ததனாற்
பூமேல் மயல்போ யறமெய்ப் புணர்வீர்
நாமே னடவீர் நடவீ ரினியே. 17

உதியா மரியா வுணரா மறவா
விதிமா லறியா விமலன் புதல்வா
அதிகா வநகா வபயா வமரா
பதிகா வலசூர பயங் கரனே. 18

வடிவுந் தனமும் மனமும் குணமுங்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வே லரசே
மிடியென்றொரு பாவி வெளிப் படினே 19

அரிதா கியமெய்ப் பொருளுக் கடியேன்
உரிதா வுபதேச முணர்த் தியவா
விரிதாரண விக்ரம வேளிமையோர்
புரிதாரக நாக புரந்தரனே. 20

கருதா மறவா நெறிகாண எனக்
கிருதாள் வனசந் தரஎன் றிசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூர விபாட ணனே. 21

காளைக் குமரேச னெனக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல் வள்ளி பதம்பணியும்
வேளைச் சுரபூபதி மேருவையே. 22

அடியைக் குறியா தறியா மையினால்
முடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமவேல் மகிபா குறமின்
கொடியைப் புணருங் குணபூ தரனே. 23

கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வே னருள் சேரவு மெண்ணுமதோ
சூர்வே ரொடுகுன்று தொளைத்தநெடும்
போர்வேல புரந்தர பூபதியே. 24

மெய்யே யெனவெவ் வினைவாழ் வையுகந்
தையோ அடியே னலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுதுஞ்
செய்யோய் மயிலேறிய சேவகனே. 25

ஆதாரமிலே னருளைப் பெறவே
நீதா னொரு சற்று நினைந்திலையே
வேதாகம ஞான விநோதமனோ
தீதா சுரலோக சிகாமணியே. 26

மின்னே நிகர்வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயனிங் கிதுவோ

பொன்னே மணியே பொருளே யருளே
மன்னே மயிலேறிய வானவனே. 27

ஆனா அமுதே அயில்வே லரசே
ஞானா கரனே நவிலத் தகுமோ
யானாகிய வென்னை விழுங்கி வெறுந்
தானாய் நிலைநின் றதுதற் பரமே. 28

இல்லே யெனுமாயையி லிட்டனை நீ
பொல்லே னறியாமை பொறுத்திலையே
மல்லேபுரி பன்னிரு வாகுவிலென்
சொல்லே புனையுஞ் சுடர்வேலவனே 29

செவ்வா னுருவிற் றிகழ்வே லவனன்
றொவ்வ ததென வுணர்வித் ததுதான்
அவ்வா றறிவா ரறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே. 30

பாழ்வாழ் வெனுமிப் படுமா யையிலே
வீழ்வா யென என்னை விதித்தனையே
தாழ்வா னவைசெய் தனதா முளவோ
வாழ்வா யினிநீ மயில்வா கனனே 31

கலையே பதறிக் கதறித் தலையூ
டலையே படுமா றதுவாய் விடவோ
கொலையே புரிவேடர் குலப் பிடிதோய்
மலையே மலைகூறிடு வாகையனே 32

சிந்தா குலவில் லொடுசெல் வமெனும்
விந்தா டவியென்று விடப் பெறுவேன்
மந்தா கினிதந்த வரோ தயனே
கந்தா முருகா கருணா கரனே 33

சிங்கார மடந்தையர் தீநெறிபோய்
மங்காம லெனக் குவரந் தருவாய்
சங்க்ராம சிகாவல சண்முகனே
கங்கா நதி பால க்ருபாகரனே. 34

விதிகாணு முடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க்கழ லென் றருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியையல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே. 35

நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே 36

கிரிவாய் விடுவிக் ரம *வேளிமையோர்
பரிவா ரமெனும் பதமே வலையே
புரிவாய் மனனே பொறையா மறிவால்
அரிவா யடியோடு மகந்தையையே 37

ஆதாளியை யொன் றறியே னையறந்
தீதாளியை யாண் டதுசெப் புமதோ
கூதாள கிராத குலிக் கிறைவா
வேதாள கணம் புகழ்வே லவனே 38

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடணை யென்று முடிந்திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங்கர தேசிகனே 39

வினையோட விடுங் கதிர்வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ
சுனையோ டருவித் துறையோ டுபசுந்
தினையோ டிதணோடு திரிந்தவனே. 40

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதேசிகனே 41

---

* 'வேலிறையோன்' என்றும் பாடம்

குறியைக் குறியாது குறித்தறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த் திடலுஞ்
செறிவற் றுலகோ டுரைசிந் தையுமற்
றறிவற் றறியாமையு மற்றதுவே 42

தூசா மணியுந் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளந் துகளா யினபின்
பேசா அநுபூதி பிறந்ததுவே. 43

சாடுந் தனிவேல் முருகன் சரணஞ்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடுஞ் சுரர்மா முடிவே தமும் வெங்
காடும் புனமுங் கமழும் கழலே

கரவா கியகல்வி யுளார் கடைசென்
றிரவா வகைமெய்ப்பொருளீ குவையோ
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோக தயாபரனே. 45

எந்தாயுமெனக் கருள்தந் தையுநீ
சிந்தா குலமா னவைதீர்த்தெனையாள்
கந்தா கதிர்வே லவனே யுமையாள்
மைந்தர் குமரா மறைநா யகனே. 46

ஆறா றையுநீத் ததன்மேல் நிலையைப்
பேறா வடியேன் பெறுமா றுளதோ
சீறா வருசூர் சிதைவித் திமையோர்
கூறா வுலகங் குளிர்வித் தவனே. 47

அறிவொன் றறநின் றறிவா ரறிவிற்
பிறிவொன் றறநின் றபிரா னலையோ
செறிவொன் றறவந் திருளே சிதைய
வெறிவொன்றவ ரோடுறும் வேலவனே. 48

தன்னந் தனிநின் றதுதா னறிய
இன்னம் மொருவர்க் கிசைவிப் பதுவோ

மின்னுங் கதிர்வேல் விகிர்தா நினைவார்
கின்னங் களையும் க்ருபைசூழ் சுடரே 49

மதிகெட் டறவா டிமயங்கியறக்
கதிகெட்டவமே கெடவோ கடவேன்
நதிபுத் திரஞான சுகா திபவத்
திதிபுத் திரர்வீ றடுசே வகனே 50

உருவா யருவா யுளதா யிலதாய்
மருவாய் மலராய் மணியா யொளியாய்க்
கருவா யுயிராய் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவா யருள்வாய் குகனே. 51

வேல் விருத்தம்

மகரமள றிடைபுரள உரககண பணமவுலி
மதியுமிர வியுமலையவே
வளரெழிலி குடருழல இமையவர்கள் துயரகல
மகிழ்வுபெறு மறுசிறையவாஞ்

சிகரவரை மனைமறுகு தொறுநுளைய மகளிர் செழு
செநெல்களொடு தரளமிடவே
செகசிரப கிரதிமுத னதிகள்கதி பெறவுததி
திடரடைய நுகரும் வடிவேல்

தகரமிரு கமதமென மணமருவு கடகலுழி
தருகவுளு முறுவலெயிறுந்
தழைசெவியு நுதல்விழியு முடையவொரு கடவுள்
தருதுணைவ னமரர் குயிலும் (மகிழ்

குகரமலை யெயினர்குல மடமயிலு மெனவிருவர்
குயமொடமர் புரியுமுருகன்
குமரனறு முகனெதிரும் விருதுநிசி சரரணிகள்
குலையவிடு கொடிய வேலே. 1

மயில் விருத்தம்

காப்பு

சந்தன பாளித குங்கும புளகித சண்பக கடகபுயச்
சமர சிகாவல குமர சடானன சரவண குரவணியுங்
கொந்தள பாரகி ராதபு ராதநி கொண்க வெனப்பரவுங்
கூதள சீதள பாத மெனக்கருள் குஞ்சரி மஞ்சரிதோய்
கந்தக்ரு பாகர கோமள கும்பக ராதிப மோகரத
கரமுக சாமர கர்ண விசால கபோல விதானமதத்
தெந்த மகோதர மூஷிக வாகன சிந்துர பத்மமுகச்
சிவசுத கணபதி விக்ந விநாயக தெய்வ சகோதரனே.

நூல்

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீமுகச்
சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ரசே கரமூஷி காரூட வெகுமோக
சத்யப்ரி யாலிங்கனச்

சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வருமளவி லுலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாப மயிலாம்

மந்தா கிநிப்பிரப வதரங்க விதரங்க
வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
வராசலன் குலிசாயுதத்

திந்த்ராணி மங்கல்ய தந்துரட் சாபரண
இகல்வேல் விநோத னருள்கூ
ரிமையகிரி குமரிமக னேறுநீ லக்ரீவ
ரத்நக் கலாப மயிலே.

நக்கீரர் அருளிய
திருமுருகாற்றுப்படை
1. திருப்பரங்குன்றம்

உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிரொளி
உறுநர்த் தாங்கிய மதன்உடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை

மறுவில் கற்பின் வாள்நுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்நறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து

உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோள்
கோபத்தன்ன தோயாப் பூந்துகில்

பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்
கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை அவிரிழைச்
சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்

செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாட் குவளைத் தூஇதழ் கிள்ளித்
தெய்வ உத்தியொடு வலம்புரிவயின் வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்துத்

துவர முடித்த துகள்அறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீஇக் கருந்தகட்டு

உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக்கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக

வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகம் திளைப்பத் திண்காழ்
நறுங்குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்

வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென்று ஏத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்

சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தள்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்கஉள் புக்குச்

சூர்முதல் தடிந்த சுடர் இலைநெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல்விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும்காதிற் பிணர்மோட்டு

உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதி ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்டகழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித் தோள் பெயரா

நிணம்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை

அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ்இணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து

எய்யா நல்இசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப

இன்னே பெறுதிநீ முன்னிய வினையே
செருப்புகன்று எடுத்த சேண்உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து

மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற்று அகல்வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள்கமழ் நெய்தல் ஊதி எற்படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அம்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந்துஉறைதலும் உரியன்; அதா அன்று

2. திருச்சீரலைவாய்

வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கிற் கடுநடைக்

கூற்றத்து அன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந்து அன்ன வேழமேல் கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின் உறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப

நகைதாழ்பு துயவ்வரூஉம் வகைஅமை பொலங்குழை
சேண்விளங்கு இயற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தம்தொழில் முடிமார்
மனன்நேர்பு எழுதரு வாள்நிற முகனே

மாஇருள் ஞாலம் மறுஇன்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம் ஒருமுகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்தினிது ஒழுகிக்
காதலின் உவந்து வரம்கொடுத் தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்விஓர்க் கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏம்உற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே, ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொள் நெஞ்சமொடு களம்வேட் டன்றே
(ஒருமுகம்

குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை அமர்ந்தன்றே ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின்று ஒழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு

வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒரு கை
உக்கம் சேர்த்தியது ஒரு கை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை
அசைஇயது ஒரு கை
அங்குசம் கடாவ ஒருகை, இருகை

ஐயிரு வட்டமொடு எஃகுவலம் திரிப்ப
மார்பொடு விளங்க, ஒருகை
தாரொடு பொலிய, ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப, ஒருகை
பாடின் படுமணி இரட்ட, ஒருகை

நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய, ஒருகை
வான்அர மகளிர்க்கு வதுவை சூட்ட, ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி
அந்தரப் பல்லியம் கறங்கத் திண்காழ்
வயிர் எழுந்து இசைப்ப வால்வளை ஞரல

உரம்தலைக் கொண்ட உரும்இடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும்பா றாக விரைசெலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதா அன்று

3. திருவாவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடு மார்பின்
என்பெழுந்து இயங்கும் யாக்கையர் நண்பகல்

பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம்வரம்பு ஆகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை

யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனிஇல் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந்து அன்ன மாசில் தூஉடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்

நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவலர் இன்நரம்பு உளர
நோய்இன்று இயன்ற யாக்கையர் மாவின்

அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்உரை கடுக்கும் திதலையர் இன்நகைப்

பருமம் தாங்கிய பணிந்தேந்து அல்குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவோடு ஒடுங்கிய தூம்புடை வால்எயிற்று
அழல்என உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

புள்அணி நீள்கொடிச் செல்வனும் வெள்ஏறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல்

வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில்நடைத்
தாழ்பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற்பெருந் தெய்வத்து நல்நகர் நிலைஇய

உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவரும் தலைவர் ஆக
ஏமுறு ஞாலம் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான்முக ஒருவற் சுட்டிக் காண்வரப்

பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீஇயர்
மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்

தீஎழுந் தன்ன திறலினர் தீப்பட
உரும்இடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கின் தம் பெறுமுறை கொண்மார்

அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்; அதா அன்று

4. திருவேரகம்

இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன்நவில் கொள்கை

மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து

ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாஇயல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத்து உறைதலும் உரியன்: அதா அன்று.

5. குன்று தோறாடல்

பைங்கொடி நறைக்காய் இடைஇடுபு வேலன்

அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் மார்பின்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கள் தேறல்

குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல் உளர்ப்பு அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டுசுனை பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்

முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மரா அத்த வாலிணர் இடைஇடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு

செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல்வரும் காதினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலம்

கொடியன் நெடியன் தொடிஅணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரல் தொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன்நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி

மென்தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து
குன்று தோறாடலும் நின்றதன் பண்பே;அதா அன்று·

6. பழமுதிர்சோலை

சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்

ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தைஇய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்

மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யொடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்

குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்

செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்

பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
துணையற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்இயம் கறங்க

உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியனகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்

கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண்டு உறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண்டு ஆயினும் ஆகக் காண்தக

முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி
நெடும்பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ

ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ

இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ

மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெரும் செல்வ

குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அறம்பெறல் மரபிற் பெரும் பெயர் முருக
நசையுநர்க்கு ஆர்த்தும் இசைபே ராள

அலந்தோர்க்கு அளிக்கும் பொலம்பூண் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றாடு அகலத்துப்
பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள்
சூர்மருங்கு அறுத்த மொய்ம்பின் மதவலி

போர்மிகு பொருந குரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின்அளந்து அறிதல் மன்உயிர்க்கு அருமையின்
நின்அடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையுநர் இல்லாப் புலமை யோய் எனக்

குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் உருவிற் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென

இனியவும் நல்லவும் நனிபல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல்விளங்கு உருவின்
வான்தோய் நிவப்பின் தான்வந்து எய்தி

அணங்குசால் உயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத்து இளநலம் காட்டி

அஞ்சல் ஓம்புமதி அறிவல்நின் வரவென
அன்புடை நன்மொழி அளை இ விளிவின்று
இருள்நிற முந்நீர் வளை இய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறல் அரும் பரிசில் நல்குமதி பலவுடன்

வேறுபல் துகிலின் நுடங்கி அகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர்இறால் சிதைய நன்பல

ஆசினி முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர யூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று

நன்பொன் மணிநிறம் கிளரப் பொன்கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்

கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி உளியம்
பெருங்கல் விடர்அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல் ஏறு சிலைப்பச் சேண்நின்று

இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

□□□

குன்ற மெறிந்தாய் குரைகடலில் சூர்தடிந்தாய்
புன்றலைய பூதப் பொருபடையாய்—என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் னுள்ளத் துறை. 1

குன்ற மெறிந்ததுவுங் குன்றப்போர் செய்ததுவும்
அன்றங் கமரரிடர் தீர்த்ததுவும்—இன்றென்னைக்
கைவிடா நின்றதுவுங் கற்பொதும்பிற் காத்ததுவு
மெய்விடா வீரன்கை வேல்.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்—வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்புங் குன்றுந்
தொளைத்தவே லுண்டே துணை. 3

இன்னம் ஒருகால் எனதிடும்பைக் குன்றுக்குங்
கொன்னவில்வேற் சூர்தடிந்த கொற்றவா—முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

உன்னை யொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை யொருவரையான் பின்செல்லேன்—
பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தி வாழ்வே. 5

அஞ்சு முகந்தோன்றில் ஆறு முகந்தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும்—நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன். 6

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே—யொருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான். 7

காக்கக் கடவியநீ காவாதிருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா—பூக்குங்

கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்கா யினி. 8

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதங்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே யணிமுருகாற் றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல். 9

நக்கீரர் தாமுரைத்த நன்முருகாற் றுப்படையைத்
தற்கோல நாடோறுஞ் சாற்றினால்—முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தானினைத்த வெல்லாந் தரும். 10

இராமலிங்கர் அருளிய
திருவருட்பா

ஆறுமுகப் பெருங்கருணைக் கடலே தெய்வ
யானைமகிழ் மணிக்குன்றே யரசே முக்கட்
பேறுமுகப் பெருஞ்சுடர்க்குட் சுடரே செவ்வேல்
பிடித்தருளும் பெருந்தகையே பிரம ஞானம்
வீறுமுகப் பெருங்குணத்தோ ரியத்தோங்கும்
விளக்கமே யானந்த வெள்ள மேமுன்
றேறுமுகப் பெரியவருட் குருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவதேவே.

கங்கையஞ் சடைசேர் முக்கட்
கரும்பருண் மணியே போற்றி
அங்கையங் கனியே போற்றி
அருட்பெருங் கடலே போற்றி
பங்கையன் முதலோர் போற்றும்
பரம்பரஞ் சுடரே போற்றி
சங்கைதீர்த் தருளுந் தெய்வச்
சரவண பவனே போற்றி

ஒருமையிரிடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்

உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவுகலவாமை வேண்டும்
பெருமைபெறும் நினது புகழ் பேசவேண்டும்பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறிபிடித் தொழுகவேண்டும் மதமானபேய்
பிடியாதிருக்க வேண்டும்
மருவுபெண்ணாசையை மறக்கவே வேண்டும்உனை
மறவாதிருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும்
நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையில் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்குகந்த வேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வ மணியே.

பண்ணேறு மொழியடியார் பரவி வாழ்த்தும்
பாதமல ரழகினையிப் பாவி பார்க்கில்
கண்ணேறு படுமென்றோ கனவிலேனுங்
காட்டென்றால் காட்டுகிலாய் கருணையீதோ
விண்ணேறும் அரிமுதலோர்க் கரியஞான
விளக்கேயென் கண்ணேமெய் வீட்டின்வித்தே
தண்ணேறு பொழிற்றணிகை மணியே ஜீவ
சாக்ஷியாய் நிறைந்தருளுஞ் சகசவாழ்வே.

அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும்நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேற் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்ஜோதிசெலுத்தியிடல் வேண்டும்
தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும்வேண் டுவனே.

பாடற் கினிய வாக்களிக்கும்
பாலுஞ் சோறும் பரிந்தளிக்கும்
கூடற் கினிய அடியவர்தங்
கூட்டமளிக்கும் குணமளிக்கும்
ஆடற் கினிய நெஞ்சே நீ
யஞ்ச லென்மே லாணைகண்டாய்
தேடற்கினிய சீரளிக்குஞ்
சிவாய நமவென் றிடுநீறே.

திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ்

உருகா மனமும் சிவஞானம் உணரா அறிவும் உனதுபுகழ்
ஓதா நாவும் ஓதக்கேட் டுவந்தே இனிய நதிபோலப்
பெருகா விழியும் உடையேனைப் பிறவிக் கடலில் வீழாமல்
பேணி எடுத்திங் கெனதுள்ளம் பிரியா விரிஞ்சைப் பதிவாழும்
முருகா வருக சதுர்வேத முதல்வா வருக வினைதீர்க்கும்
முனைவா வருக மலராறு முகவா வருக திருமாலின்
மருகா வருக மயிலேறு மன்னா வருக அடியார்கள்
வாழ்கவே வருக தெய்வசிகா மணியே வருக வருகவே.

கண்ணால் உனது திருவடியைக்
கண்டா தரவு பெருகிஇரு
கையால் தொழுதுன் திருக்கோயில்
காலால் வலஞ்செய் துனதுபுகழ்
பண்ணால் உருகிப் புகழ்ந்துகண்ணீர்
பாயா எனையும் தாயாகப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணைப்
படைத்து விரிஞ்சைப் பதிவாழும்
அண்ணால் வருக உலகம்முழு
தாண்டாய் வருக கதிதரும்எம்
ஐயா வருக ஆறுமுக
அப்பா வருக விளங்குகதிர்

வண்ணா வருக மயிலேறும்
மன்னா வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே.

திருமலை முருகன் பிள்ளைத் தமிழ்

பண்டைக் கொடிய தீவினையும்
பழிக்கும் குலமும் நானெனும்ஓர்
பகையும் தீர்ந்திட் டிம்மையிலே
பரிந்து மனது குழைந்துருகும்
தொண்டத் தொகையின் உடன்கூடித்
தொனிக்க இனிக்கும் திருப்புகழைச்
சொல்லித் துதிக்க நல்இயலாம்
தொலையா வாழ்வு கொடுத்தருளி
அண்டத் திறைவன் பொன்முடிக்கும்
அமலக் கமலன் மணிமுடிக்கும்
அமரர் முனிவர் தலைகளுக்கும்
அணியப் பணியக் கிடையாத
தண்டைப் பதத்தை எனக்களித்த
தலைவா தாலோ தாலேலோ
தாமக் குவளைத் திருமலைவித்
தகனே தாலோ தாலேலோ,

கந்தமிகு முண்டகக் கண்ணனும் கருணைஎண்
கண்ணனும் உடற்கண்ணனும்
கதிதனை வழங்கும்உன் திருமுன்பு வந்துசெங்
கதிர்வேல் புகழ்ந்திரந்து
சுந்தரக் குங்குமக் கொங்கைஒரு மங்கைநம்
சுதையைவேட் டருளுகெனவே
சுடர்முடி துளக்கிவெகு மகிழ்வுடன் நகைத்தருள்
சுரந்துளம் இசைந்துமறுநாள்
அந்தரத் தமரர்முசு குந்தன்முதல் இம்பர்கள்
அருந்தவர் பெருந்திசையினோர்

அணிமணக் கோலத்தின் அதிசயம் கண்டுய்ய
அப்பரங் குன்றின்மிசையே
தந்தியை மணந்தகுவ ளைத்திரு மலைக்குமர
சப்பாணி கொட்டியருளே
தடக்கிரி பொடிப்பட அயிற்படை விதிர்த்தகுக
சப்பாணி கொட்டியருளே.

தந்தா வளமுன் அழைப்ப மனம்
சற்றும் தரியா தெழுந்துகுல்லைத்
தாமம் சரிய உடை சரியச்
சக்ரா யுதத்தை முன்நடத்திச்

செந்தா மரைப்பெண் புவிமடந்தை
திகைப்போடெழுந்து பின்தொடரச்
சேடன் முதுகும் அவன்மனமும்
திருப்பாற் கடலும் வெளிறிவெஃகப்

பைந்தார் கருடன் கடைக்கண்அருள்
பார்த்து நேரே பறந்துவரப்
பாரக் கொடிய முதலைவதைப்
படவும் பாதம் தரைப்படவும்

வந்தான் மருகா முருகாசெம்
மலையே வருக வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

எதிரும் புலவன் வில்லிதொழ
எந்தை உனக்கந் தாதிசொல்லி
ஏழைப் புலவர் செவிக்குருத்தோ
டெறியும் கருவி பறித்தெறிந்தே

அதிரும் கடல்சூழ் பெரும்புவியில்
அறிந்தார் அறியார் இரண்டும் இல்லார்
ஆரும் எனைப்போல் உனைத்துதிக்க
அளித்த அருணகிரிநாதன்

உதிருங் கனியை நறும்பாகில்
உடைத்துக் கலந்து தேனைவடித்
தூற்றி அமுதின் உடன்கூட்டி
ஒக்கக் குழைத்த ருசிபிறந்து

மதுரங் கனிந்த திருப்புகழ்ப்பா
மாலை புனைந்தான் வருகவே
வரதச் சரதத் திருமலையின்
மழலைக் குழவி வருகவே.

முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

உலகு குளிர எமது மதியில் ஒழுகும் அமுத கிரணமே
உருகும்அடியர் இதயம்நெகிழ உணர்வில் எழுநல்
உதயமே
கலையு நிறையும் அறிவு முதிர முதிரு மதுர நறவமே
கழுவு துகளர் முழுக நெடிய கருணை பெருகு சலதியே
அலகில் புவனமுடியும் வெளியில் அளியும்ஒளியின்
நிலையமே·
அறிவு ளறிவை யறியுமவரு மறியஅரிய பிரமமே
மலையின் மகள்கண் மணியைஅனைய மதலைவருக
வருகவே.
வளமை தழுவு பருதி புரியின் மருவு குமரன்
வருகவே

திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ்

பேரா தரிக்கும் அடியவர் தம்
பிறப்பை ஒழித்துப் பெருவாழ்வும்
பேறும் கொடுக்க வரும் பிள்ளைப்
பெருமான் என்னும் பேராளா

சேரா நிருதர் குலகல்கா
சேவற் கொடியாய் திருச்செந்தூர்த்

தேவா தேவர் சிறைமீட்ட
செல்வா என்றுன் திருமுகத்தைப்
பாரா மகிழ்ந்து முலைத்தாயார்
பரவிப் புகழ்ந்து விருப்புடன் அப்
பாவா வாவென் றுனைப் போற்றிப்
பரிந்து மகிழ்ந்து வரவழைத்தால்
வாராதிருக்க வழக்குண்டோ
வடிவேல் முருகா வருகவே
வளரும் களபக் குரும்பை முலை
வள்ளி கணவா வருகவே.

திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழ்

கருத்தே புகுந்து கதி காட்டும்
கண்ணே வருக மெய்ஞ்ஞானக்
கரும்பே வரும் கருணை பொழி
காரே வருக ஆனந்தப்
பெருக்கே வருக யாங்கள் பெறும்
பேறே வருக மறைசொல்கிளிப்
பிள்ளாய் வருக பிறங்கு தெய்வப்
பெருமான் வருக குறமடந்தை
தருக்கே வருக மிடியகற்றும்
தருவே வருக மன்பதைக்கோர்
தஞ்சே வருக எமையளிக்கும்
தாயே வருக பவப்பிணிக்கு
மருத்தே வருக சமரபுரி
வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான
வள்ளல் வருக வருகவே.

கந்தபுராணப் பாடல்கள்

அருவமும் உருவும் ஆகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்றசோதிப் பிழம்பதோர் மேனியாகக்

கருணைகூர் முகங்க ளாறும் கரங்கள் பன்னிரண்டுங்
கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங் குதித்தனன் உலகம் உய்ய.

அல்லல் பிறவி அலமலம் விண்ணா டுறைந்து
தொல்லைத் திருநுகரும் துன்பும் அலமலமால்
தில்லைத் திருநடஞ்செய்தேவே இனித்தமியேற்
கொல்லைத் துயர்தீர்த் துனதுபதந் தந்தருளே.

கோலநீடிய நிதிபதி வாழ்க்கையுங் குறியேன்
மேலையிந்திரன் அரசினைக் கனவினும் வெஃகேன்
மாலயன்பெறு பதத்தையும் பொருளென் மதியேன்
சால நின்பதத் தன்மையே வேண்டுவன் தமியேன்.

நாரணன் என்னுந் தேவும் நான்முகத்தவனும் முக்கட்
பூரணன் தானு மாகிப் புவிபடைத் தளித்து மாற்றி
ஆரண முடிவுந்தேறா அநாதியாய் உயிர்கட்கெல்லாம்
காரணனாய மேலோன் கழலினை கருத்துள் வைப்பாம்.

மூவிரு முகங்கள் போற்றி முகம்மொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற இராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலு மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

துய்யதோர் மறைகளாலும் துதித்திடற் கரிய செவ்வேள்
செய்யபே ரடிகள் வாழ்க சேவலும் மயிலும் வாழ்க
வெய்யசூர் மார்பு கீண்ட வேற்படை வாழ்க அன்னான்
பொய்யில்சீர் அடியார் வாழ்க வாழ்கஇப் புவனம் எல்லாம்.

பாம்பன் ஸ்ரீமத்-குமரகுருதாச சுவாமிகள் துதி

பாம்பனெனும் பதிமுளைத்த பவளக் குன்றே
பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே பண்பா ரில்லத்
தீம்பயிரே அன்புகொழி திரையே தெய்வத்
திறங்கண்ட அறநிலையே செகத்தி லுற்ற

கூம்பலற எழுகதிரே குழந்தை வேலன்
குகநெறியே நெறியென்ற குருவே நீதி
ஓம்புகவென் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
உயர்குமர குருதாச ஒளியே போற்றி.

சண்முக கவசம்

அண்டமாய் அவனி யாகி அறியொணாப் பொருள தாகித்
தொண்டர்கள் குருவு மாகித் துகள்அறு தெய்வ மாகி
எண்திசை போற்ற நின்ற என்னருள் ஈசனான
திண்திறல் சரவ ணத்தான் தினமுமென் சிரசைக் காக்க. 1

ஆதியாங் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக் காக்க
தாதவிழ் கடப்பந் தாரான் தானிரு நுதலைக் காக்க
சோதியாந் தணிகை யீசன் துரிசிலா விழியைக் காக்க
நாதனாங் கார்த்தி கேயன் நாசியை நயந்து காக்க. 2

இருசெவி களையுஞ் செவ்வேள் இயல்புடன் காக்க வாயை
முருகவேள் காக்க நாப்பல் முழுதுநற் குமரன் காக்க
துரிசறு கதுப்பை யானைத் துண்டனார் துணைவன் காக்க.
திருவுடன் பிடரி தன்னைச் சிவசுப்ர மணியன் காக்க. 3

ஈசனாம் வாகு வேயன் எனதுகந் தரத்தைக் காக்க
தேசுறு தோள்வி லாவுந் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீரா றாயுதன் காக்க என்றன்
ஏசிலா முழங்கை தன்னை யெழிற்குறிஞ் சிக்கோன் காக்க. 4

உறுதியாய் முன்கை தன்னை உமையிள மதலை காக்க
தறுகணே றிடவே யென்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை அயிலோன்காக்க பொறிக்கர விரல்கள்பத்தும்
பிறங்குமான் மருகன் காக்க பின்முது கைச்சேய் காக்க. 5

ஊண்நிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோள்நிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்க குய்ய
நாணினை அங்கி கௌரி நந்தனன் காக்க குய்ய
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க. 6

எஞ்சிடா திடுப்பை வேலுக் கிறைவனார் காக்க காக்க
அஞ்சக னம்ஓர் இரண்டும் அரன்மகன் காக்க காக்க
விஞ்சிடு பொருட்காங் கேயன் விளரடித் தொடையைக்
காக்க
செஞ்சர ணேச ஆசான் திமிருமுன் தொடையைக் காக்க. 7

ஏரகத் தேவன் என்தாள் இருமுழங் காலுங் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே
காக்க
நேருடைப் பரடி ரண்டும் நிகழ்பரங் கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை மலையன்
காக்க, 8

ஐயுறு மலையன் பாதத் தமர்பத்து விரலுங் காக்க
பையுறு பழநி நாத பரன்அகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுதும் ஆதி விமலசன் முகவன் காக்க
தெய்வநா யகவி சாகன் தினமுமென் னெஞ்சை காக்க. 9

ஒலியெழ வுரத்த சத்தத் தொடுவரு பூதப் ரேதம்
பலிகொள் இராக்க தப்பேய் பலகணத் தேவையா னாலுங்
கிலிகொள எனைவேல் காக்க கெடுபார் செய்யுஞ் சூன்யம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடா தயில்வேல் காக்க. 10

ஓங்கிய சீற்ற மேகொண் டுவணிவில் வேல்சூ லங்கள்
தாங்கிய தண்டம் எஃகந் தடிபர சீட்டியாதி
பாங்குடை ஆயு தங்கள் பகைவர் என் மேலே யோச்சின்
தீங்குசெய் யாமல் என்னைத் திருக்கைவேல்
காக்க காக்க, 11

ஔவிய முளர் ஊனுண்போர் அசடர்பேய் அரக்கர்
புல்லர்
தெவ்வர்கள் எவரா னாலுந் திடமுடன் எனைமற் கட்டத்
தவ்வியே வருவா ராயிற் சராசர மெலாம்பு ரக்குங்
கவ்வுடைச் சூர சண்டன் கைஅயில் காக்க காக்க. 12

கடுவிடப் பாந்தள் சிங்கங் கரடிநாய் புலிமா யானை
கொடியகோள் நாய்கு ரங்கு கோலமார்ச் சாலஞ் சம்பு
நடையுடை யெதனா லேனும் நான்இடர்ப் பட்டி டாமல்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முளைவேல் காக்க. 13

ஙகரமே போல்த ழீஇ ஞானவேல் காக்க வன்புள்
சிகரிதேள் நண்டுக் காலி செய்யனே றாலப் பல்லி
நகமுடை யோந்தி பூரான் நளிவண்டு புலியின் பூச்சி
உகமிசை யிவையால் எற்கோர் ஊறிலா தைவேல் காக்க.

சலத்திலும் வன்மீ னேறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலுஞ் சலத்தி லுந்தான் நெடுந்துயர் தரற்கே யுள்ள
குலத்தினால் நான்வ ருத்தங் கொண்டிடா தவ்வ வேளை
பலத்துடன் இருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க. 15

ஞமலியம் பரியன் கைவேல் நவக்கிர கக்கோள் காக்க
சுமவிழி நோய்கள் தந்த சூலையாக் கிராண ரோகம்
திமிர்கழல் வாதஞ் சோகை சிரமடி கர்ண ரோகம்
எமையணு காம லேபன் னிருபுயன் சயவேல் காக்க. 16

டமருகத் தடிபோல் நைக்கும் தலையிடி கண்ட மாலை
குமுறுவிப் புருதி குன்மங் குடல்வலி யீழை காசம்
நிமிரொணா திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேகம் எல்லாம்
எமையடையாமலேகுன் றெறிந்தவன் கைவேல் காக்க. 17

இணக்கமில் லாத பித்த எரிப்புமா சுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்குங் குஷ்டம் மூலவெண் முளைதீ மந்தம்
சணத்திலே கொல்லுஞ் சன்னி சாலமென் றறையு மிந்தப்

பிணிக்குலம் எனையா ளாமல் பெருஞ்சத்தி வடிவேல்
காக்க
தவனமா ரோகம் வாதம் சயித்தியம் அரோச கம்மெய்
சுவறவே செய்யும் மூலச் சூடிளைப் புடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோய் அண்டவா தங்கள் சூலை
எவையுமென் னிடத்தெய் தாமல் எம்பிரான் திணிவேல்
காக்க
நமைப்புறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோபம்
அமர்த்திடு கருமை வெண்மை ஆகுபல்
தொழுநோய்கக்கல்
இமைக்குமுன் உறுவலிப்போ டெழுபுடைப் பகந்த ராதி
இமைப்பொழு தேனுமென்னை யெய்தாம லருள்வேல்
காக்க.

பல்லது கடித்து மீசை படபடென் றேது டிக்கக்
கல்லினும் வலியநெஞ்சம் காட்டியே உருட்டி நோக்கி
எல்லினுங் கரிய மேனி யெமபடர் வரினும் என்னை
ஒல்லையில் தார காரிய ஓம்ஐம் ரீம்வேல் காக்க. 21

மண்ணிலும் மரத்தின் மீதும் மலையிலும் நெருப்பின்
மீதும்
தண்நிறை ஜலத்தின் மீதும் சாரிசெய் ஊர்தி மீதும்
விண்ணிலும் பிலத்தி னுள்ளும் வேறெந்த இடத்தும்
என்னை
நண்ணிவந் தருளார் சஷ்டி நாதன்வேல் காக்க காக்க. 22

யகரமே போற்சூ லேந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகன் வேல்பின் காக்க
சகரமோ டாறு மானோன் தன்கைவேல் நடுவில் காக்க
சிகரமின் தேவ மோலி திகழைவேல் கீழ்மேல் காக்க. 23

ரஞ்சித மொழிதே வானை நாயகன் வள்ளி பங்கன்
செஞ்சய வேல்கி ழக்கில் திறமுடன் காக்க அங்கி
விஞ்சிடு திசையில் ஞான வீரன்வேல் காக்க தெற்கில்

எஞ்சிடாக் கதிர்கா மத்தோன் இகலுடைக் கரவேல்
காக்க,
லகரமே போல்கா ளிங்கன் நல்லுடல் நெளிய நின்று
தகரமர்த் தனமே செய்த சங்கரி மருகன் கைவேல்
நிகழெனை நிருதி திக்கில் நிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயு வினில் குகன் கதிர்வேல் தாக்க. 25

வடதிசை தன்னில் ஈசன் மகன்அருள் திருவேல் காக்க
விடையுடை யீசன் திக்கில் வேதபோ தகன்வேல் காக்க
நடக்கையில் இருக்கு ஞான்று நவில்கையில்
நிமிர்கையில் கீழ்க்
கிடக்கையில் தூங்கு ஞான்று கிரிதுளைத் துளவேல்
காக்க. 26

இழந்துபோ காத வாழ்வை ஈயுமுத் தையனார் கைவேல்
வழங்குநல் ஊண் உண் போதும் மால்விளையாட்டின்
போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்துநெஞ்சடக்கும்
போதும்
செழுங்குணத் தோடே காக்க திடமுடன்மயிலும்
காக்க 27

இளமையில் வாலி பத்தில் ஏறிடு வயோதி கத்தில்
வளர் அறு முகச்சிவன் தான் வந்தெனைக் காக்க காக்க
ஒளியெழு காலை முன்எல் ஓம்சிவ சாமி காக்க
தெளிநடு பிற்ப கல்கால் சிவகுரு நாதன் காக்க. 28

இறகுடைக் கோழித் தோகைக் கிறைமுன்இ ராவில்
காக்க.
திறல்உடைச் சூர்ப்ப கைத்தே திகழ்பின்இ ராவில் காக்க
நறவுசேர் தாள்சி லம்பன் நடுநிசி தன்னில் காக்க
மறைதொழு குழகன் எங்கோன் மாறாது காக்க
காக்க, 29

இனமெனத் தொண்ட ரோடும் இணக்கிடும் செட்டி
காக்க
தனிமையில் கூட்டந் தன்னில் சரவண பவனார் காக்க
நனிஅநுபூதி சொன்ன நாதர்கோன் காக்க இத்தைக்
கனிவொடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்க
வந்தே. 30

சண்முக கவசம் முற்றிற்று.

தேவராய அடிகள் அருளிய
கந்தர் சட்டிக் கவசம்
(திருச்செந்தூர்)

காப்பு

அமரரிடம் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

நூற்பயன்

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக்—கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடும்; நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசந் தனை.

நூல்

சட்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்.

கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து,
வர வேலா யுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக,
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக;

நேசக் குறமகள் நினைவோன் வருக,
வாசகன் மருகா! வருக வருக;
ஆறுமுகம் படைத்த ஐயா! வருக,
நீறிடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,

சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவ, வீரா! நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர ஹணப வருக வருக,
அசுரர் குடிகெடுத்த ஐயா! வருக,
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிர் ஐயும் கிலியும்,
கிலியுஞ் சௌவும் கிளரொளி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக,
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈறாறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந் தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க,
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு,
விந்து விந்து மயிலோன் விந்து,

முந்து முந்து முருகவேள் முந்து,
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்,
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலாவிநோ தனென்று

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க,
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க,
பன்னிரு விழியால் பாலனைக் காக்க,
அடியேன் வதனம் அழகுவேல் காக்க,

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க,
கதிர்வேல் இரண்டு கண்ணினைக் காக்க,
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க,
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க,
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க,

முப்பத் திருபல் முனைவேல் காக்க,
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க,
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க,
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க,
மார்பை இரத்ன வடிவேல் காக்க,

சேரிள முலைமார் திருவேல் காக்க,
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க,
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க,
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க,
பழுபதி னாறும் பருவேல் காக்க,

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க,
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க,
நாண்ஆம் கயிற்றை நல்வேல் காக்க,
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க,
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க,

வட்டக் குதத்தை வல்வேல் காக்க,
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க,
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க,
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க,
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க,

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க,
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க,
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக:
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க,

எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க,
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க,
வரும்பகல் தன்னில் வச்ரவேல் காக்க,
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க,

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க,
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க,
காக்க, காக்க கனகவேல் காக்க,
நோக்க நோக்க நொடியில் நோக்க,
தாக்க, தாக்க தடையறத் தாக்க,

பார்க்க, பார்க்க பாவம் பொடிபட,
பில்லி சூனியம் பெரும்பகை அகல,
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்;
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்,
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்;

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்:
பெண்களைத் தொடரும் பிரமராஷ்டி தரும்:
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட:
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்,

கனகபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும், மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும், சண்டா ளர்களும்:
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட,
ஆனை அடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்,
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்,
ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்,

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும்அஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட;
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட,

அஞ்சி நடுங்கிட, அரண்டு புரண்டிட,
வாய்விட் டலறி மதிகெட் டோட,
படியினில் முட்ட, பாசக் கயிற்றால்
கட்டுடல் அங்கம் கதறிடக் கட்டு,
கட்டி உருட்டு கால்கை முறிய,

கட்டு கட்டு கதறிடக் கட்டு,
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட,
செக்கு செக்கு செதில்செதி லாக,
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்,

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக;
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடா தோட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்;
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க;
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க, உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொலி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே
அரிதிரு மருகா! அமரா வதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்,
கந்தா! குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழனிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க, யானுனைப் பாட,
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக.
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி,
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரக்ஷி, அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க! வாழ்க! மயிலோன் வாழ்க!
வாழ்க! வாழ்க! வடிவேல் வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குரு வாழ்க!
வாழ்க! வாழ்க! மலைக்குற மகளுடன்

வாழ்க! வாழ்க! வாரணத் துவசம்!
வாழ்க! வாழ்க! என் வறுமைகள் நீங்க,
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு! பொறுப்ப துன்கடன்,

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே;
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தெனென் மீது மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்,
கந்தர் சட்டிக் கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி,
கந்தர் சட்டிக் கவசம் இதனைச்

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்து நீறணிய,
அட்டதிக் குளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்பர் செயலத ருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்,
நவதம னெனவும் நல்லெழில் பெறுவர்,
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்,
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்,
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்,
நல்லோர் நினைவில் நயனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத்மாவை துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி!
எனைத் தடுத்தாட்கொள் என்றென துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி!
தேவர்கள் சேனா பதியே போற்றி!
குறமகள் மனமகிழ் கோவே போற்றி!

திறமிகு திவ்விய தேகா போற்றி!
இடும்பா யுதனே இடும்பா போற்றி!
கடம்பா போற்றி! கந்தா போற்றி!
வெட்கிப் புனையும் வேளே போற்றி!
உயர்கிரி கனகச் சபைக்கோ ரரசே,

மயில்நட மிடுவாய் மலரடி சரணம்!
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

அவனாசிப் பத்து

வற்றாத பொய்கை வளநாடு கண்டு
மலைமேலி ருந்த குமரா
உற்றார் எனக்கு ஒருபேரும் இல்லை
உமையாள் தனக்கு மகனே
முத்தாடை தந்து அடியேனை யாளும்
முருகேச னென்ற னரசே!
வித்தார மாக மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே. 1

ஆலால முண்டோன் மகனாகி வந்து
அடியார் தமக்கும் உதவிப்

பாலூரல் உண்டு கனிவாய் திறந்து
பயனஞ் செழுத்தை மறவேன்
மாலான வள்ளி தனைநாடி வந்து
வடிவாகி நின்ற குமரா
மேலான வெற்றி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே. 2

திருவாசல் தோறும் அருள்வேத மோத
சிவனஞ் செழுத்தை மறவேன்
முருகேச ரென்று அறியார் தமக்கு
முதலாகி நின்ற குமரா
குருநாத சுவாமி குறமாது நாதர்
குமரேச ரென்ற பொருளே
மறவாமல் வெற்றி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே. 3

உதிரந்தி ரண்டு பனியீர லுண்டு
உருவாசல் தேடி வருமுன்
ததிபோலெ முந்த திருமேனி நாதர்
கடைவீடு தந்து மருள் வாய்
முதிரஞ்சி றந்த வயல்வீறு செங்கை
வடிவேல் எடுத்த குமரா
யதிராய் நடந்து மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே. 4

மண்ணாடு மீசன் மகனாரை யுந்தன்
மலைவீடு தந்து மருள்வாய்
மண்டூரல் பாயும் வயலூரில் செங்கை
வடிவேல் எடுத்த குமரா
நன்றாக வந்தே அடியேனை யாண்டு
நல்வீடு தந்த குகனே
கொண்டாடி வெற்றி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே. 5

நீலஞ்சி றந்த குறமாது வள்ளி
நின்பாகம் வைத்த குமரா
காலன்ள முந்து வெகுபூசை பெய்து
கயிறுமெ டுத்து வருமுன்
வேலும் பிடித்து அடியார் தமக்கு
வீராதி வீர ருடனே
சாலப்ப ரிந்து மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே 6

தலைகட்ட நூலின் நிழல் போல நின்று
தடுமாறி நொந்து அடியேன்
நிலைகெட்டு யானும் புவிமீதில் நின்று
நெடுமூச் செறிய விதியோ
அலைதொட்ட செங்கை வடிவேற் கடம்பர்
அடியேனை ஆளு முருகா
மலையேறி மேயு மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே. 7

வண்டுண்டு பூவில் மதுவூரில் பாயும்
வயலூரில் செங்கை வடிவேல்
கண்டொன்று சொல்லித் திரிவார்கள் வாசல்
கடனென்று கேட்க விதியோ
வண்டூரு பூவில் இகழ்மேவு வள்ளி
தெய்வானைக் குகந்த வேலா
நன்றென்று சொல்லி மயில்மீதிலேறி
வரவேணும் என்றன் அருகே. 8

விடதூத ரோடி வரும்போது வும்மை
வெகுவாக நம்பி னேனே
குறமாது வள்ளி யிடாக வைத்து
மயிலேறி வந்த குமரா
திடமாகச் சோலை மலைமீதில் வாழும்
திருமால் தமக்கு மருகா
வடமான பழநி வடிவேல் நாதா
வரவேணும் என்றன் அருகே. 9

ஓங்கார சக்தி உமைபால் குடித்து
உபதேச முரைத்த பரனே
பூங்காவ னத்தில் இதழ்மேவு வள்ளி
புஜமீதிருந்த குகனே
ஆங்கார சூரர் படைவீடு சோர
வடிவேல் விடுத்த பூபா
பாங்கான வெற்றி மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே. 10

ஆறாறு மாறு வயதான போது
அடிபேன் நினைத்த படியால்
வேறேது சிந்தை நினையாமல் உந்தன்
ஆசார சங்க மருள்வாய்
அசுரேசர் போ யமதூதர் என்னைத்
தொட்டோடக் கட்ட வருமுன்
மாறாது தோகை மயில்மீதி லேறி
வரவேணும் என்றன் அருகே. 11

ஆறுமுகசாமி விருத்தம்

ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் வேலும்
அலங்கார ஆபரணம் அணிந்த மார்பும்
திருமுகமும் வெண்ணீறும் புனைந்த மெய்யும்
ஜெகமெலாம் புகழ்படைத்தாய் சுப்ர மண்யா
முருகாச ரவணபவ னேகார்த் திகேயா
முக்கணணார் புத்திரனே உக்ர வேலா
இருவருமே உனைப் பணிந்தோம் பழநி வேலா
இதுசமயம் அடியாரை ரட்சிப் பாயே.

மயிலேறி விளையாடும் சுப்ர மண்யா
வடிவேலா உன்பாதம் நம்பினேனே
உயிரிழந்து அபகீர்த்தியாகும் வேளை
உன் செயலால் இதுசமயம் உயிரைக் காத்தாய்
தயவாக இனிமேலும் உயிரைக் காத்து

சண்முகனே அடியார்தம் துயரந்தீர்ப்பாய்
வைபோகமானமலை பழநி வேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப் பாயே!

வருந்துமடி யார்உயிரைக் காக்கும் தெய்வம்
வையகத்தில் வேறொருவர் இல்லை என்று
அறிந்துநான் உனைப் பணிந்தேன் சுப்ரமண்யா
ஆதரித்துப் பிராணபயம் தீரும் ஐயா
திரிந்தலைந்து அறுமூன்று திங்களாகச்
சிறையிருந்து தளைப்பூண்டு சின்ன மானேன்
பறந்து வரும் மயிலேறும் பழநி வேலா
பண்பாக உயிர்காத்து ரட்சிப் பாயே.

பெருவேங்கைப் புலிபிடித்த பசுவைப்போலப்
பிதுர் கலங்கி மனந்தளர்ந்து புலம்பி னோமே
இருவருமே உனைக்கூவச் செவிகே ளாதோ
இதுசமயம் தாமதமா யிருக்க லாமோ
குருவாகித் தந்தையாய் நீயே யாகில்
குமரேசாபிராணபயந் தீருமையா
முருகேசா இது சமயம் பழநி வேலா
முன்வந்து உயிர்காத்து ரட்சிப் பாயே.

பாம்பின்வாய் சிக்கியதோர் தேரை போலப்
பதைபதைத்து வாடுகிறோம் பாலர் நாங்கள்
தேம்பியே புலம்புகிறோம் துயர மாகித்
தென்னவனே உன்செவிக்குக் கேளா தோதான்
நான்புவியில் உனைநம்பி மகிழ்ந்தி ருந்தேன்
நாயேனுக் கபயம் வரநியாய மோதான்
சாம்பசிவன் புத்திரனே பழநி வேலா
சமயமிது உயிர்காத்து ரட்சிப் பாயே.

வலையிலகப்பட்ட உயிரதுபோல் மயங்கு கிறோமே
வடிவேலா இதுசமயம் துயரந் தீர்ப்பாய்
கொலைகளவு பாதகங்கள் பொய்யிருந்த தெல்லாம்
கொடும்பழிகள் வஞ்சனை பில்லிசூனிய மெல்லாம்

தொலையாத சிறுபிணிநோய் வல்வினை களெல்லாம்
துறத்துமையா மயிலேறும் சுப்ர மண்யா
மலையிலுறை வாசனே பழநி வேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப் பாயே!

நாகமது கருடனைக் கண்டலைந்தாற் போல
நான்பயந்து அலைதுரும்பாய் அலைகின் றேனே
தாகமது தீருமையா தவிக்கும் வேளை
சண்முகனே இதுசமயம் அடியே னுக்கு
மேகமது பயிர்க்குதவி செய்தாற் போல
வேலவனே பிராணபயம் தீரு மையா
வேகமுடன் வரவேணும் பழநி வேலா
வினைதீர்த்து உயிர்காத்து ரட்சிப் பாயே

பூனைகையிற் சிக்கியதோர் கிளியைப் போலே
புலம்புகிறோம் பிராணபயம் மிகவு மாகி
நானடிமை உனைநம்பி இருக்கும் வேளை
நாயகனே பாராமுகமாய் இருக்க லாமோ
மானீன்ற வள்ளியம்மை தெய்வ யானை
மணவாளர் சரவணனே கருணை செய்வாய்
கானமயில் வாகனனே பழநி வேலா
கடவுளே உயிர்காத்து ரட்சிப் பாயே.

தூண்டி லகப்பட்ட உயிரதுபோல் துடிக்கிறேனே
சுப்ரமண்யா இது சமயம் அடியேனுக்கு
வேண்டுவரம் கொடுப்பதற்குப் பார்த்து நீயே
வேறொருவர் இல்லையென்று நம்பி னேனே
மீண்டுவரும் வினைதீர்த்துத் துயரந் தீர்ப்பாய்
வேலவனே சூரசங் கார வேலா
ஆண்டவனே உனைப்பணிந்தேன் பழநி வேலா
அடியார்கள் உயிர்காத்து ரட்சிப் பாயே.

நஞ்சுபட்டு விஷமேறி மயங்கு மாப்போல்
நடுநடுங்கிக் கிடுகிடென்று பயந்து நாங்கள்

தஞ்சமென்றே உனைப்பணிந்தேன் திருத்தணிகை
வாசா
சற்குருவே பிராணபயம் தீருமையா
பஞ்சகனைச் சிறைவிடுத்துத் தலையை வாங்கிப்
பரிகரித்து உன்னிருதாள் பதமே தந்து
வஞ்சனைகள் செய்யாமல் பழநி வேலா
வரமளித்து உயிர்காத்து ரட்சிப் பாயே.

அத்திமுகனே முக்கண்ணனுக்கு இளைய வேலா
அறுமுகனே தணிகையிலே அமர்ந்த வாசா
வித்திறத்திற் பேசாத மூடன் நானும்
வேலவனே நின்னருளாற் கவியைப் போலப்
பத்துமே பதிகமாய்ப் பாடிச் சொன்னேன்
என்மீதில் பிழைகள்மனம் பொறுத்தே யாள்வாய்
சத்தியமாய் உனைப்பணிந்தோம் எங்கள் அய்யா
சண்முகனே அடியாரை ரட்சிப் பாயே.

பாடுவார் முத்தப்ப செட்டியார் அருளிய சமய மாலை

சீருலவுந் தென்பழநித் தெண்டா யுதபாணி
பேருலவும் மாலைதனைப் பிரபஞ்சத் திற்பாடப்
பாருலவும் மேருதனிற் பாரதத்தை நேர்வரைந்து
காருலவுந் தொந்திக் கணபதிதாள் காப்பாமே.

வையாபுரி நாட்டில் வளர்ந்திடுமென் ஐயனுக்கு
ஐயாயிரஞ் சரணம் அடிபணிந்து தெண்டனிட்டேன்
மெய்யான தேசிகனே வேலாயுதம் படைத்த
வையாபுரிக் கரசே வருவாய் இதுசமயம்.

ஆறாறு நூறாறு அஷ்டமங்க லஞ்சூழ்ந்த
வீரா சிவகிரியின் வேலாயு தச்சாமி
சூராதி படைவென்ற சுப்பையா இப்போது
வாரா திருப்பதென்ன வருவாய் இதுசமயம்.

தஞ்மென்றே நின்பதத்திற் சரணம் புகுந்தஎந்தன்
நெஞ்சிற் கவலையெல்லாம் நீ தீர்க்க வேணுமையா
அஞ்சலென்று வந்தவர்க்கும் ஆதரவு சொல்லுமிப்போ
மஞ்சரி மணவாளா வருவாய் இதுசமயம்.

மங்கை நகரந்தனில் மறையோதும் வேதியராய்
அங்கசனைக் காய்ந்த அரனார் திருமகனே
சங்கர நாராயணர் சொல் சண்முகனே கந்தையா
மங்கை வள்ளி பங்காள வருவாய் இது சமயம்.

ஏன்தான் முருகா இரக்கமில்லையோ உனக்கு
நான்தான் உரைப்பதுவும் நற்செவியிற் கேட்கிலையோ
சார்ந்தோடும் வாவித் தடாகமும் வையாபுரியின்
மாந்தோப்பும் விட்டு வருவாய் இதுசமயம்.

ஜெகமே அளந்தஅருள் திருமால் மருகோனே
அகமே உருகுதையா ஆற்றுதற்கு நீயிரங்காய்
குகனே முருகையா குழந்தையைத் தேடியிப்போ
மகனே எனஓடி வருவாய் இது சமயம்.

சின்னவய தெந்தனது சிந்தை மெலிவதற்கு
என்னவிதிப் பயனோ ஏதறிய மாட்டேன் கேள்
உன்னையே யான்துதித்து உன்பாதமே பணிய
வண்ண மயிலேறியே வருவாய் இது சமயம்.

தீராத நோய்களையும் தீர்த்துமே ஆளாக்கி
மாறாத செல்வமுறும் வரமெனக்கு நீயருளி
ஓராறு முகங்குளிர உத்திரவு நீகொடுக்க
வாராயோ கந்தா வருவாய் இது சமயம்

மார்க்கண்டனுக்காக வளர்ந்த சொக்கலிங்கர்முன்னே
பார்க்குள் திருப்பணியைப் பான்மையாய்ச் செய்வதற்கு
ஆர்க்கு விரைந்தோமெனவே அஞ்சலிட்டுச் சொல்லி வைத்த
மார்க்கமென்ன கந்தா வருவாய் இது சமயம்.

கனத்தவுன் திருப்பணியைக் கட்டிவைத்த பேர்தமக்கு
நினைத்த படியேதான் நிறைவேற்ற வேணுமையா
இனத்தார் நகைத்தென்னை ஏளனங்கள் செய்யாமல்
மனத்துயரந் தீர்க்க வருவாய் இதுசமயம்.

உகந்த திருப்பணியை உண்டாக்கி எந்நாளுஞ்
செகந்தனில் வசமாய்ச் செப்புதற்கு நீயிரங்காய்
தகுந்த வசுராதிகளைத் தட்டழியக் கைவேலால்
வகுத்து விட்ட கந்தா வருவாய் இது சமயம்.

நாடு நகரிழந்த ராஜாக்கள் போலவேநான்
வாடுவது னக்கழகோ மனதும் இரங்கலையோ
பேடைமயில் வள்ளியுடன் பேரழகு மயிலேறி
வாடையது துலங்க வருவாய் இதுசமயம்.

சாதியுஞ் சமயமென்று தானினைத்துப் பாராமல்
நீதிபெற நெஞ்சினிலே நீயிருந்து கொண்டாட
ஏதுமறி யேனெனக்கு இவ்வேளை யேயருள
வாதுசெய்ய வேண்டாம் வருவாய் இது சமயம்.

பருவகாலத் திலெண்ணிப் பாராமல் யான்செய்த
கரும வினையகலக் கனத்த திருக்கோயில் செய்தேன்
தருமங்கள் தானோங்கச் சாமிநீ கிருபைசெய்ய
அருள்சிவ கிரிமுருகா வருவாய் இதுசமயம்.

கல்லா திருக்குங் கசடனெனக் கண்டாலும்
நல்லா தரவுசொல்லி ரட்சிக்க வேணுமையா
எல்லாரும் கொண்டாட என்னிடத்தில் அன்புவைத்து
வல்லாளா இப்போது வருவாய் இதுசமயம்.

அடியார் வினையகற்றும் ஆறுமுகத் தெய்வமேகேள்
அடியனும் உமக்கடிமை ஆகினேன் கிருபைசெய்வாய்
துடியாய் மயிலேறிச் சூரர்களைச் சம்கரித்த
வடிவேற் கரகுமரா வருவாய் இதுசமயம்.

உச்சிதமாய் யானும் உமக்கே அபயமென்றே
இச்சணமே என்னிடத்தில் இப்போது மேயெதிராய்

பச்சைமயில் ஏறிவந்து பக்தனெனை ரட்சித்தால்
வச்சிரவே லாயுதனே வருவாய் இதுசமயம்.

சிங்கமுக சுரன் சிரம்வீழ முன்னாளில்
செங்கயலில் வேல்விட்ட சேவற் கொடியோனே
மங்கையரும் மோகிக்க மயில்வீரா உந்தனது
மங்கள தெய்வானையுடன் வருவாய் இதுசமயம்.

பாலசமுத் திசூரஞ்சூழ் வயலுஞ் சிவகிரியாய்
பாலனுனைத் தெரிசிக்கப் பரகதியைத் தாருமையா
மூலமென யானைசொல்ல முதலையைச் சங்கரித்த
மாலவர் மருகோனே வருவாய் இதுசமயம்.

அண்டர் தொழுஞ் சொக்கருக்கு மைந்தராய் வந்துதித்த
கொண்டால் முருகா எனது குலமுழுதும் உன்னடிமை
செண்டு முலைவள்ளி தெய்வானைக் குகந்தகந்தா
மண்டலங்கள் மெச்ச வருவாய் இதுசமயம்.

ஞாலமதில் எந்நாளும் நம்பினே னுன்பாதம்
ஓலமென்றேன் என்முன்னே ஓடிவந்தா லாகாதோ
பாலனெனக் குங்கிருபை பாலித்தால் வையகத்தில்
வாலையருள் கந்தா வருவாய் இதுசமயம்.

சொக்கலிங்கர் மீனாட்சி சுந்தரர்க்கு முன்பாக
மிக்க திருப்பணியை விதவிதமாய் யான்நடத்த
பக்கத் துணையிருந்து பாலனென்னை யேகாக்க
மைக்கண் வள்ளிபங்காளா வருவாய் இதுசமயம்.

குறுமுனிக்கு நீகுருவாய் குவலயத்தில் எந்நாளும்
தருமநெறி தவறாய் சண்முகனே இப்போதுஞ்
சிறுமை செய்யும் பிணியைச் சிதறடித்து வேல்விடுத்தாய்
வறுமை யெல்லாந் தீர்க்க வருவாய் இதுசமயம்.

காப்புடனே ஐயைந்தெனும் கண்யநிறை பாடல்களும்
ஏற்படுத்தி நின்றாளிற் சமயமாலை தமிழ்
நேர்புனைந் தேனென்பிழையை நீபொறுத்து மிப்போது
மாப்பு செய்ய வேணுமினி வருவாய் இதுசமயம்.

உ

திருச்சிற்றம்பலம்

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமைப் பங்கன் திரு ஆலவாயான் திருநீறே!

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான் கினு மெய்ப்பொருள் அல்லது
நாதன் நாமம் நமச்சி வாயவே

—திருஞானசம்பந்தர்

மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில்நல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை இருந்ததே!

விறகில் தீயினன் பாலிற் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுக் கோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே

குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல்மேனியிற்
பால்வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே

—திருநாவுக்கரசர்

அழலாடி அங்கை சிவந்ததோ! அங்கை
அழகால் அழல் சிவந்தவாறோ—கழலாடப்
பேயாடு கானில் பிறங்க அனலேந்தித்
தீயாடு வாய் இதனைச் செப்பு

—காரைக்கால் அம்மையார்

கையொன்று செய்ய விழியொன்று
நாடக் கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்சக நா ஒன்று
பேசப் புலால் கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று
கேட்க விரும்பும் யான்
செய்கின்ற பூசை எவ்வாறு கொள்
வாய், வினை தீர்த்தவனே!

கல்லாப் பிழையும் கருதாப் பிழையும் கசிந்துருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும் நின்
அஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையும் துதியாப் பிழையும் தொழாப்
பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத் தருள்வாய் கச்சி ஏகம்பனே!

—பட்டினத்தார்

மாணிக்கவாசகர் அருளிய
திருவாசகம்
சிவபுராணம்

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே—எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எம்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!

புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!

ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி!
சிவன், அவன்என் சிந்தையுள் நின்றஅதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய் உரைப்பன்யான்!

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி,
விண்ணிறைந்து, மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளி
[யாய்
எண்ணிறந்து எல்லையிலாதானே! நின்பெருஞ்சீர்,
பொல்லா வினையேன், புகழுமாறு ஒன்றறியேன்,

புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாகிப்
பல்விருகம் ஆகி, பறவையாய், பாம்பாகி,
கல்லாய், மனிதராய், பேயாய், கணங்களாய்,
வல்அசுரர் ஆகி, முனிவராய்த் தேவராய்,
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்!
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்.
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்
''ஐயா'' எனவோங்கி, ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!

வெய்யாய்! தணியாய்! இயமானன் ஆம்விமலா!
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே!

ஆக்கம், அளவு. இறுதி இல்லாய்! அனைத்துஉலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்,
நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே!

கறந்தபால் கன்னலொடு, நெய்கலந்தாற் போலச்
சிறந்து, அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று,
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள்ஓர் ஐந்துஉடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்துஇருந்தாய் யெம்பெருமான்! வல்வினையேன்
தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம், பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி,
புறம்தோல் போர்த்து, எங்கும் புழுஅழுக்கு மூடி,
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகி, கசிந்துஉள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலம்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாஆன தத்துவனே!
மாசுஅற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே!
தேசனே! தேன்ஆர் அமுதே! சிவபுரனே!
பாசம்ஆம் பற்றுஅறுத்து, பாரிக்கும் ஆரியனே!
நேச அருள்புரிந்து, நெஞ்சில்வஞ் சம்கெட,

பேராது நின்ற பெரும்கருணைப் பேர்ஆறே!
ஆரா அமுதே! அளவுஇலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கிஎன் ஆர்உயிராய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே; உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையும்ஆய், அல்லையும்ஆம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடுஆகி, அல்லானே!
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தைப் பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுஉணர்வார்
[தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே! நுணுக்குஅரிய நுண்உணர்வே!
போக்கும், வரவும், புணர்வும் இலாப் புண்ணியனே!
காக்கும்என் காவலனே! காண்பரிய பேர்ஒளியே!
ஆற்றுஇன்ப வெள்ளமே! அத்தா! மிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளிஆய், சொல்லாத நுண்உணர்வுஆய்

மாற்றம்ஆம் வையகத்தின் வெவ்வேறே வந்து, அறிவுஆம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என்சிந்தையுள்
ஊற்றுஆன உண்ஆர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்குஉடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்: "எம் ஐயா," அரனே! "ஓ" என்றுஎன்று

போற்றிப் புகழ்ந்திருந்து, பொய்கெட்டு. மெய்ஆனார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே,
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே! "ஓ"! என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லி, திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன்அடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருஞானசம்பந்தர் அருளிய
கோளறு திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்த மாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொ டேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்கள் அவைதாம்
அன்பொடும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (2)

உருவளர் பவள மேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலைய தூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மானபலவும்
அருநெதி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (3)

மதிநுதல் மங்கை யோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்

நதியொடு கொன்றை மாலை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (4)

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள்த னோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (5)

வாள்வரி அதள தாடை வரிகோவ ணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னி கொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (6)

செப்பிள முலைநன் மங்கை ஒருபாக மாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (7)

வேள்பட விழிசெய் தன்று விடைமே லிருந்து
மடவாள் த னோடும் உடனாய்
வாள்மதி வன்னி கொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழி லங்கை அரையன் த னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (8)

பலபல வேட மாகும் பரன்நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெ ருக்கு முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும் மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேரு நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (9)

கொத்தலர் குழலி யோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியு நாக முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. (10)

தேனமர் பொழில்கொள் ஆலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கு நிகழ
நான்முகன் ஆதி ஆய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
நானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்

ஆனசொன் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே. (11)
திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசகர் அருளிய

திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும்புரண்டுஇங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னேஎன்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதுஇப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ விளையாடி
ஏசு மிடம்ஈதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்நகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவுங்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்
தெண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினை நாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னும் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருவாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

அன்னே யிவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்குங்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோர் எம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ்ச் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய் 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யாவெண் நீறாடி செல்வா சிறுமருங்குல்

மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய் 11

ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன் நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன இவ்வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர்
எம்பாவாய் 13

காதார் குழைஆடப் பைம்பூண் கலன்ஆடக்
கோதை குழல்ஆட வண்டின் குழாம்ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதித் திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதித் திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தம் களிகூர

நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத்
தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆம்ஆறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும்
வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேலோர்
எம்பாவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பின் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கும்
முன்னி அவள்நமக்கும் முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 11

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்தம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர் எம்பாவாய்17

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்சுரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்

கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப் பூம்புனல் பாய்ந்து ஆடேலோர்
எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலமென்று
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எம்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு எமக்கேலோர்
எம்பாவாய். 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழி நீர்ஆடேலோர் எம்பாவாய்! 20

பிரதோஷப் பாராயணம்

திருச்சிற்றம்பலம்

நாகந்தான் கயிறாக நளிர்வரையதற்கு மத்தாகப்
பாகந்தேவ ரொடசுடரர் படுகடலில் யெழக்கடைய
வேதநஞ் செழவாங்கே வெருவொடு மிரிந்தெங்குமோட
ஆகந்தன்னில் வைத்தமிர்தமாக்கு வித்தான்
மறைக்காடே.

—திருஞானசம்பந்தர்

பருவரை ஒன்று சுற்றி அரவங்கை விட்ட
இமையோ ரிருந்து பயமாய்த்
திருநெடுமால் நிறத்தை அடுவான் விசும்பு
சுடுவா னெழுந்து விசை போய்ப்
பெருகிட மற்றிதற்கோர் பிதிகார மொன்றை
அருளாய் பிரானே எனலும்
அருள் கொடு மாவிடத்தை எரியாமலுண்ட
அவனண்ட ரண்டர் அரசே

—திருநாவுக்கரசர்

''கோல் வரை மத்தென நாட்டிக்
கோளரவு சுற்றிக் கடைந்தெழுந்த
ஆல நஞ்சு கண்டவர் மிக விரிய
அமரர்கட்கருள் புரிவது கருதி
நீலமார் கடல் விடந்தனை யுண்டு
கண்டத்தே வைத்த பித்த நீ செய்த
சிலங் கண்டு நின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில் திருப்புன் கூருளானே''

— சுந்தரர்

''கோலால மாகிக் குரைகடல் வாயன் றெழுந்த
ஆலால முண்டா வைன் சதுர்தா னென்னேடி
ஆலால முண்டிலனேல் அயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவகாண் சாழலோ''

—மாணிக்கவாசகர்

இனியோ நாமுய்ந்தோம் இறைவன் தாள்சேர்ந்தோம்
இனியோ ரிடரில்லோம் நெஞ்சே—இனியோர்
வினைக்கடலை யாக்குவிக்கு மீளாப்பிறவிக்
கனைக் கடலை நீந்தினோம் காண்

—காரைக்கால் அம்மையார்

அடியவராம் இமையவர்தம் கூட்டமுய்ய
அலைகடல் வாய் நஞ்சுண்ட அமுதே! செங்கண்

நெடியானும் நான்முகனும் காணாக் கோல
நீலவிட அரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயிர் இரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர்வாசக்
கடியாரும் மலர் சோலை மருங்கு சூழும்
கவின் மருகற் பெருமானே! காவாய் என்றும்.

—பெரிய புராணம்

திருச்சிற்றம்பலம்

புதுவிரி பொன்செய் ஓலை ஒருகாது ஓர் காது
கரிசங்கம் நின்று புரள
விதிவிதி வேதகீதம் ஒருபாடும் ஓத
ஒருபாடு மெல்ல நகமால்
மதுவிரி கொன்றைதுன்று சடைபாகம் மாதா
குழல்பாக மாக வருவார்
இதுஇவர் வண்ண வண்ணம் இவன்வண்ண வண்ணம்
எழில் வண்ண வண்ண இயல்பே!

—திருநாவுக்கரசர்

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ!

—மாணிக்கவாசகர்

சுரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி!
சுரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி!
இரும்பு மனம் குழைத்துஎன்னை எடுத்தாண்ட
அங்கையற்கண் எம்பி ராட்டி
அரும்பும்இள நகைபோற்றி! ஆரண நூ
புரஞ்சிலம்பும் அடிகள் போற்றி!

—பரஞ்சோதி முனிவர்

கடலமுதே!செங் கரும்பே அருட்கற்ப கக்கனியே
உடலுயிரே!உயிர்க் குள்ளுணர் வேஉணர்
உள்ளொளியே!
அடல்விடை யார் எற்றி யார் இடங்கொண்ட அருமருந்தே!
மடலவிழ் ஞான மலரே! வடிவுடை மாணிக்கமே!

—இராமலிங்க அடிகள்

அபிராம பட்டர் அருளிய
அபிராமி அந்தாதி

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்க மாதுளம்போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே 1

ததியுறு மத்திற் சுழலும்என் ஆவி தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்கம லாலயனும்
மதியுறு வேணி மகிழ்நனும் மாலும் வணங்கி என்றும்
துதியுறு சேவடி யாய்சிந்து ரானன சுந்தரியே. 2

வந்திப் பவருன்னை வானவர் தானவ ரானவர்கள்
சிந்திப் பவர்நற் றிசைமுகர் நாரணர் சிந்தையுள்ளே
பந்திப் பவரழி யாப்பர மானந்தர் பாரிலுன்னைச்
சந்திப் பவர்க்கெளி தாமெம்பி ராட்டிநின் தண்ணளியே 3

வவ்விய பாகத் திறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியந் தீர்த்தென்னை ஆண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே. 4

பின்னே திரிந்துன் அடியாரைப் பேணிப் பிறப்பறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன் முதல்மூவருக்கும்
அன்னே உலகுக் கபிராமி என்னும் அருமருந்தே
என்னே இனிஉன்னை யான்மற வாமல்நின் றேத்துவனே 5

சொல்லும் பொருளும்என நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யேநின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேஅழி யாஅரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சிந்திக்குமே. 6

நாயகி நான்முகி நாரா யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி சூலினி மாதங்கி என்(று)
ஆயகி யாதி யுடையாள் சரணம் அரணமக்கே 7

தஞ்சம் பிறிதில்லை ஈதல்ல தென்றுன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைக்கின்றி லேனொற்றை நீள்சிலையும்
அஞ்சம்பு மிக்கல ராகிநின் றாயறி யாரெனினும்
பஞ்சஞ்சு மெல்லடி யார்அடி யார்பெற்ற பாலரையே 8

ஆசைக் கடலில் அகப்பட்டருளற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற் படஇருந் தேனைநின் பாதம்என்னும்
வாசக் கமலத் தலைமேல் வலியவைத் தாண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லு வேனீசர் பாகத்து நேரிழையே

தனந்தரும் கல்விதரும் ஒருநாளுந் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாந் தரும்அன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாளபி ராமி கடைக்கண்களே 9

ஆத்தாளை யெங்கள் அபிராமி வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை அங்குசம் பாசம் குசுமம் கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு
தீங்கில்லையே; 10

அபிராமியம்மை பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவாராத நட்பும்
கன்றாத வளமையுங் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்

சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கொலுமொரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரோடு கூட்டுகண்டாய்;
அலையாழி அறிதுயிலுமாயனது தங்கையே
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே.

மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே.

—குமரகுருபர சுவாமிகள்

உ

திருச்சிற்றம்பலம்

திருவிளக்கு வழிபாடு அர்ச்சனை

ஓம் சிவாய போற்றி
,, சிவசக்தியே போற்றி
,, இச்சா சக்தியே போற்றி
,, கிரியா சக்தியே போற்றி
,, சொர்ண சொரூபியே போற்றி 5
,, ஜோதி லக்ஷ்மியே போற்றி
,, தீப லட்சுமியே போற்றி
,, மகா லட்சுமியே போற்றி
,, தனலட்சுமியே போற்றி
,, தான்ய லட்சுமியே போற்றி 10
,, தைர்ய லட்சுமியே போற்றி
,, வீரலட்சுமியே போற்றி
,, விஜய லட்சுமியே போற்றி
,, வித்யா லட்சுமியே போற்றி
,, ஜெய லட்சுமியே போற்றி 15
,, வரலட்சுமியே போற்றி
,, கஜலட்சுமியே போற்றி
,, காம வல்லியே போற்றி
,, காமாட்சி சுந்தரியே போற்றி
,, சுபலட்சுமியே போற்றி 20
,, இராஜ லட்சுமியே போற்றி
,, கிருஹ லட்சுமியே போற்றி
,, சித்த லட்சுமியே போற்றி
,, சீதாலட்சுமியே போற்றி
,, திரிபுர லட்சுமியே போற்றி 25
,, சர்வமங்கள காரணியே போற்றி
,, சர்வ துக்க நிவாரணியே போற்றி
,, சர்வாங்க சுந்தரியே போற்றி
,, சௌபாக்ய லட்சுமியே போற்றி 30

ஓம் நவக்கிரஹ தாயியே போற்றி
,, அண்டர் நாயகியே போற்றி
,, அலங்கார நாயகியே போற்றி
,, ஆனந்த சொரூபியே போற்றி
,, அகிலாண்ட நாயகியே போற்றி
,, பிரம்மாண்ட நாயகியே. போற்றி

பொன்னும் மெய்ப்பொருளும் தருவாய் போற்றி
போகமும் திருவும் புணர்ப்பாய் போற்றி
முற்றறிவு ஒளியாய் மிளிர்ந்தாய் போற்றி
மூவுலகும் நிறைந்திருந்தாய் போற்றி
வரம்பில் இன்பமாய் வளர்ந்திருந்தாய் போற்றி

இயற்கையாய் அறிவொளி ஆனாய் போற்றி
ஈரேழுலகம் ஈன்றாய் போற்றி
பிறர் வயமாகா பெரியோய் போற்றி
பேரின்பப் பெருக்காய் பொலிந்தாய் போற்றி
பேரருட்கடலாம் பேரருளே போற்றி

முடிவில் ஆற்றல் உடையாய் போற்றி
மூவுலகுந் தொழ மூத்தோய் போற்றி
அளவிலாச் செல்வம் தருவாய் போற்றி
ஆனந்த அறிவொளி விளக்கே போற்றி
ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
இருள் கெடுத்து இன்பருள் எந்தாய் போற்றி
மங்கள நாயகி மாமணி போற்றி
வளமை நல்கும் வல்லியே போற்றி
அறம் வளர் நாயகி அம்மே போற்றி
மின் ஒளியம்மையாம் விளக்கே போற்றி

மன்ஒளிப் பிழம்பாய் வளர்ந்தாய் போற்றி
தையல் நாயகித் தாயே போற்றி
தொண்டர் அகத்தமர் தூமணி போற்றி
முக்கட் சுடரின் முதல்வி போற்றி
ஒளிக்குள் ஒளியாய் உயர்வாய் போற்றி

சூளாமணியே சுடரொளி போற்றி
இருள் ஒளித்து இன்பும் ஈவோய் போற்றி
அருள் பொழிந்து எம்மை ஆள்வோய் போற்றி
அறிவினுக்கு அறிவாய் ஆனாய், போற்றி

இல்லக விளக்காம் இறைவி போற்றி
சுடரே விளக்காம் தூயாய் போற்றி
இடரைக் களையும் இயல்பினாய் போற்றி
எரிசுடராய் நின்ற இறைவி போற்றி
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் போற்றி
அருமறைப் பொருளாம் ஆதி போற்றி

தூண்டு சுடரனைய சோதி போற்றி
ஓதும் உள் ஒளி விளக்கே போற்றி
இருள் கெடுக்கும் இல்லக விளக்கே போற்றி
சொல்லக விளக்காம் சோதி போற்றி

பலர்காண் பல்லக விளக்கே போற்றி
நல்லக நமசிவாய விளக்கே போற்றி
உலப்பிலா ஒளிவளர் விளக்கே போற்றி
உணர்வுசூழ் கடந்ததோர் விளக்கே போற்றி
உடம்பெனும் மனையக விளக்கே போற்றி

உள்ளத் தகழி விளக்கே போற்றி
மடம்படும் உணர்நெய் விளக்கே போற்றி
உயிரெனும் திரிமயக்கு விளக்கே போற்றி
இடம்படும் ஞானத்தீ விளக்கே போற்றி
நோக்குவார்க்கு எரிகொள் விளக்கே போற்றி

ஆதியாய் நடுவுமாகும் விளக்கே போற்றி
அளவிலா அளவுமாகும் விளக்கே போற்றி
சோதியாய் உணர்வுமாகும் விளக்கே போற்றி
தில்லைப் பொதுநட விளக்கே போற்றி
கற்பனை கடந்த சோதீ போற்றி

கருணையே உருவாம் விளக்கே போற்றி
அற்புதக் கோல விளக்கே போற்றி
அருமறைச் சிரத்து விளக்கே போற்றி
சிற்பர வியோம விளக்கே போற்றி
பொற்புடன் நடஞ்செய் விளக்கே போற்றி 60

உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி
கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
உருகுவோர் உள்ளத்து ஒளியே போற்றி
பெருகு அருள் சுரக்கும் பெரும போற்றி
இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி 66

அருவே உருவே அருவுரு போற்றி
நந்தா விளக்கே நாயகியே போற்றி
செந்தாமரைத் தாள் தந்தாய் போற்றி
தீபமங்கள ஜோதி போற்றி
மதிப்பவர் மனமணி விளக்கே போற்றி 70

பாகம் பிரியா பராபரை போற்றி
ஆகம முடிமேல் அமர்ந்தாய் போற்றி
ஏகமும் நடஞ்செய் எம்மான் போற்றி
ஊழி ஊழி உள்ளோய் போற்றி
ஆழியான் காணா அடியோய் போற்றி 75

ஆதியும் அந்தமும் அற்றாய் போற்றி
அந்தமில் இன்பம் அருள்வோய் போற்றி
முந்தைய வினையை முடிப்போய் போற்றி
பொங்கும் கீர்த்தி பூரண போற்றி
தண்ணருள் சுரக்கும் தாயே போற்றி 80

அருளே உருவாய் அமைந்தோய் போற்றி
இருநில மக்கள் இறைவி போற்றி
குருவென ஞானம் கொடுப்போய் போற்றி
ஆறுதல் எமக்கிங் களிப்போய் போற்றி
தீதெல்லாம் தீர்க்கும் திருவே போற்றி 85

பத்தியில் ஆழ்ந்த பரமே போற்றி
எத்திக்குந் துதி எந்தாய் போற்றி
அஞ்சலென் றருளும் அன்பே போற்றி
தஞ்சமென் றவரைச் சார்வோய் போற்றி
ஓதுவார் அகத்துறை ஒளியே போற்றி

ஓங்காரத் துள்ளொளி விளக்கே போற்றி
எல்லா உலகமும் ஆனாய் போற்றி
பொல்லா வினைகள் அறுப்பாய் போற்றி
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் போற்றி
செலவாய செல்வம் தருவாய் போற்றி

பூங்கழல் விளக்கே போற்றி போற்றி
உலகம் உவப்புற வாழ்வருள் போற்றி
உயிர்களின் பசிப்பிணி ஒழிப்பாய் போற்றி
செல்வம் கல்வி சிறப்பருள் போற்றி
நல்லன்பு ஒழுக்கம் நல்குவாய் போற்றி

விளக்கிட்டார்க்கு மெய்நெறி விளக்குவாய் போற்றி
நலம் எல்லாம் உயிர்க்கு நல்குக போற்றி
தாயே நின்னருள் தந்தாள் போற்றி
தூயநின் திருவடி தொழுதனம் போற்றி
போற்றி என்பார் அமரர் விளக்கே போற்றி

போற்றி என்பார் மனிதர் விளக்கே போற்றி
போற்றி என் அன்புபொலி விளக்கே போற்றி
போற்றி போற்றி திருவிளக்கே போற்றி
திருச்சிற்றம்பலம்

வயிரவர்

விரித்தபல் கதிர்கொள் சூலம் வெடிபடு தமரு கங்கை
தரித்த தோர் கோலகால பயிரவனாகி வேழம்
உரித்து உமை அஞ்சக் கண்டு ஒண்திரு மணியாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே!

—திருநாவுக்கரசர்

பண்பட்ட தில்லைப் பதிக்கரசைப் பரவாதே
எண்பட்ட தக்கன் அருக்கண் எச்சன் இந்து அனல்
விண்பட்ட பூதப் படைவீர பத்திர ராற்
புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ!

—மாணிக்கவாசகர்

தென்முகக் கடவுள்—தட்சிணாமூர்த்தி

கல்லால் இன்புடை யமர்ந்து நான்மறையாறு
அங்கமுதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக் கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்ன வரை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம்

அறுபத்து மூவர்

தத்து மூதெயின் மூன்றும் தழல்எழ
முத்து மூரன் முகிழ்த்த நிராமய
சித்து மூர்த்திதன் தாளிணை சேரறு
பத்து மூவர் பாதமலர் போற்றுவாம்

கலைமகள்

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனும் என்பால்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்தீம் பாலமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப் பேடே சகல கலாவல்லியே!

—குமரகுருபரர்

நாடிப் புலங்கள் உழுவார் கரமும் நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவுஞ் செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும் உவந்து நடம்
ஆடிக் களிக்கும் மயிலே உன்பாதம் அடைக்கலமே!

— தேசிக விநாயகம் பிள்ளை

திருமகள்

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள் வணிகர் —வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு.

திரண்டு முனிவர் இருபாலும் சிறந்த தினமும் சேவிப்ப
வரம் தந்தரும் பெண்கொடியே வடிவேல்குமரன்
மணக்கோலம்
புரிந்த அழகை இருவிழிக்கு விருந்தாய் அருந்தும்
புத்தமுதை
பரங்குன் றமர்ந்த செழுந்திருவைப் பணிந்து திருவைப்
பொருந்துவாம்

நீங்காது நின் மகனும் நெடிய திருமாலும்
பாங்காக அன்று வந்த பாற்கடல்போல்— தேங்காமல்
நன்றாக நீ இருந்து நாளும் வளம் பெருக்கி .
என்றைக்கும் நீங்கா திரு

—பாடுவார் முத்தப்ப செட்டியார்

கமலம் மேவு திருவே நின்மேல் காதலாகி நின்றேன்
குமரி நின்னை இங்கே பெற்றோர் கோடி இன்பம் உற்றார்
அமரர் போல வாழ்வேன என்மேல் அன்பு
கொள்வையாயின்
இமப் வெற்பின் மோத நின்மேல் இசைகள் பாடிவாழ்வேன்

—சி. சுப்பிரமணிய பாரதியார்

திருமால்

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே வேங்கடவா நின்கோயிலின் வாசல்

அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே!

—குலசேகர ஆழ்வார்

பச்சை மா மலைபோல் மேனி பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா! அமரர் ஏறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திரலோகம் ஆளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்க மாநகருளானே

—தொண்டரடிப் பொடி ஆழ்வார்

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரம் செய்யும் நீள்விசும்பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலம்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம்

—திருமங்கை ஆழ்வார்

ஆண்டாள் அருளிய திருப்பாவை

அன்ன வயற்புதுவை ஆண்டா ளரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் - இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே நமக்கே பறைதருவான்
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ பாற்கடலுள்
பையத் துயின்ற பரம னடிபாடி
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோ தோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றிநீராடினால்
தீங்கின்றி நாடெலாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்றுநீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி
ஊழிமுதல்வ னுருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சாரங்க முதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்
மார்கழிநீ ராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் மணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ
பிள்ளாய்! எழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ! பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ
நாயகப் பெண்பிள்ளாய்! நாரா யணமூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துஉன்னைக்
கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய்ப் பிளந்தானை மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரியத்
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை யெழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாரா யணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற ஆனந்த லுடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்
சுற்றத்துத் தோழிமா ரெல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி! நீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்
இனித்தா னெழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12

புள்ளின்வாய்க் கீண்டானைப் பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்
பிள்ளைக ளெல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்றுப்
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய். 13

உங்கள் புறக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின
[காண்
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய்! நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே இளங்கிளியே! இன்னும் உறங்குதியோ!
சில்லென் றழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்
[றேன்
வல்லைஉன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும்
வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக
ஒல்லைநீ போதாய் உனக்கென்ன வேறுடையை
எல்லாரும் போந்தாரோ போந்தார்போந் தெண்ணிக்
[கொள்
வல்லானைக் கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய் 15

நாயகனாய் நின்ற நந்தகோ பனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள் திறவாய்
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால்முன் னம்முன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய் அறிவுறாய்

அம்பர மூடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியம் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலிஉன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்
தத்துவ மன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்ப முடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
முப்பக்கமும் தட்டொளியும் தந்துன் மணாளனை
இப்போதே எம்மைநீ ராட்டேலோ ரெம்பாவாய். 20

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்

ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்ற முடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாயிற்கண்
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம்
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ
திங்களும் ஆதித் தியனும் எழுந்தாற்போல்
அங்க ணிரண்டும்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
பேரிதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்கா சனத்துஇருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

அன்றுஇவ் வுலகம் அளந்தாய்! அடி போற்றி
சென்றங்கு தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி
கன்று குணிலா எறிந்தாய்! கழல் போற்றி
குன்று குடையாய் எடுத்தாய்! குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய் 24

ஒருத்தி மகனாய்ப் பிறந்துஓ ரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்த்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள் பொய்யப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே பல்லாண் டிசைப்பாரே
கோல விளக்கே! கொடியே! விதானமே!
ஆலி னிலையாய்! அருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாகச்
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன் தன்னோடு
உறவேல் நமக்குஇங்கு ஒழிக்க ஒழியாது
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபே ரழைத்தனவும் சீறிய ருளாதே
இறைவா!நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

சிற்றஞ் சிறுகாலே வந்துஉன்னைச் சேவித்துஉன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம்மேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைசிஞ்
அங்கப் பறைகொண்ட வாற்றை அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே [சொன்ன
இங்கிப் பரிசுரைப்பா ரீரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய். 30

ஆஞ்சநேயர்

அஞ்சிலே ஒன்று பெற்றான் அஞ்சிலே ஒன்றைத் தாவி
அஞ்சிலே ஒன்றாறாக ஆரியர்க்காக ஏகி
அஞ்சிலே ஒன்று பெற்ற அணங்கைக் கண்டு அயலார் ஊரில்
அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவனெம்மை அளித்துக் காப்பான்

—கம்பர்

அஞ்சனை மைந்தா! போற்றி! அஞ்சினை வென்றாய் போற்றி!
வெஞ்சினக் கதிர்பின் சென்று விழுமறை உணர்ந்தாய் போற்றி!
மஞ்சன மேனிராமன் மலர்ப்பதம் மறவாய் போற்றி!
எஞ்சலில் ஊழியெல்லாம் இன்றென இருப்பாய் போற்றி!

□

பனசைச்

சோணைக்கருப்பண்ணசுவாமி பதிகம்

காப்பு

பனசைச்சோ ணைக்கறுப் பணசுவாமி மேற்பதிகம்
தனவணிகன் யான்பாடச் சரஸ்வதிநீ முன்னடவாய்
மனக்கவலை மாற்றும் வல்லபை விநாயகனும்
கனமாநற் கரிமுகத்துக் கணபதியும் காப்பாமே.

ஒருபெரிய சிகைதாடி இருக்குமொரு
கொண்டையும் ஒளிவிடும் சந்திரகாவி

உருமாலின் விடுசுங்கு தொங்கலின்மோடி
யுடன் உத்தண்ட மூர்க்கங்களும்

முருகுமேல் முருகுசொரி முத்துக்கடுக்கனும்
முருக்கிவிடு மேல்மீசை அழகும்

முத்துமாலிகைப் பதக்கமும் சரப்பளிமுன்கை
வளைச்சரமுடன்

மருவுகை, அருவாளும் மைச்சல்லடத்தின்
மிசைவாங்கு சமுதாடும் சேர்த்து

வைத்திருக்கும் கருங்கச்சையும் சோமனுட
வல்ல வேட்டுல்லாயுதமும்

பெருமையுள வீரதண்டையுமாக வந்துனது
பேரழகு காக்ஷி தருவாய்

பெருகுமலர்ப்புனல்வாவி திகழ்பனசைப்பதி
மேவும் வேழமுகத்தய்யனோடும்

வில்வமும் துளசியும் நிறைந்த பனசைப்பதிக்
காடனிக் கோவில் மேவும்

கடப்பரியவாணை கெடிப்பரவு சோணைக்கறுப்
பண்ணசுவாமி நீயே!

கரும்பூனை, கருநரி, கருங்கிடாய் கரும்பன்றி
கருநாய் கருங்கரடி போல்

கன தொளிலிடும்பிலே தனி வழி இருட்டிலே
கண்ணிலே விஷம் தீண்டவே
வரும்போது முத்துக்கறுப்பே கறுப்பையா
வாவென்று சொல்ல அரியாய்
மானிடப் பதர்களைச் சரிவிப் பிடித்து
வெகுவாதைப் படுத்திவிட்டு
தரும்பூசை என்னடாதம்பி என்றாடுமொரு
சண்டிப் பிசாசுகளையே நீ
சாட்டை அடிவலுவினால் மூட்டுமூட்
டெலும்பு தவிடுபொடியாய் நொறுக்கி
பெரும்பூதம் தொட்டதொரு பேயுமொரு
பேயைப் பிணைக்கொடித்தோட்டி விடுமுன்
பெருகு மவர்ப்புனல்வாவி திகழ் பனசைப்பதி
மேவும் ஆறுமுகத்தய்யனோடும்
இருவாச்சி, செண்பகம் நிறைந்த பனசைப்பதிக்
காடனிக் கோவில் மேவும்
கடப்பரியவாணை கெடிப்பரவு சோணைக்
கறுப்பண்ண சுவாமி நீயே.

குடியாதரித்துப் பலன் பாக்கியம் தரும்குல
தெய்வம் நீ ஆகையால்
கும்பிட்டு வாழ்த்தியுனை நம்பிக்கையாகக்
குறித்து நித்தமும் துதித்தால்
துடியான பூதப்பிசாசுகளருட்டாது சோர
பயமும் வராது
துன்பவினை வன்பிணிகளண்டாது, விபரிதச்
சொப்பனங்கள் காண்பியாது
கடியாது பேய்பில்லிதையாது, படையம்புகாட்
டாது காலபாசம்
கரடி பிலிநலியாது கடுவாயொடு வெறும்கிலி
யெனும் பிலி தொடாது.

பிடியாது பேய் பில்லிசூனியமும் அணுகாது பெல
முனது சலுகை அய்யா
பெருகுமலர்ப்புனல் வாவி திகழ் பனசைப்பதிமேவும்
கருமுகில் ஐய்யனோடும்
குயில்களும், மயில்களும் நிறைந்த பனசைப்பதிக்
காடனிக் கோவில் மேவும்
கடப்பரியவாணை. கெடிப்பரவு சோணைக்
கறுப்பண்ண சுவாமி நீயே.

கக்ஷி நகரென்று முயற் காஞ்சிபுறமாதேவி
காமாக்ஷி வர புத்திரன்
கம்பையாற்றங் கரைகளுவேரியே நின்று
காத்தவன் காத்தமுத்தன்
இட்சை தருமாரியை, பூமாலையைச் சிறை
யெடுக்கவடி வெங்கள் காத்தான்
யிந்துமுலை மங்கையர்கள் பந்துமுலை மஞ்சள்
மனமேரு விரகங்கள் காத்தான்
மெச்சுமொரு கம்பளத்தொட்டியச் சின்னானை
வென்றடிமை கொண்ட காத்தான்
வெகு குங்குமகளப கஸ்தூரி கமகமென
வேருடன் மருக்கொளுந்து
பிட்சிமல்லிகை மாலை அணிபுயக்காத்தான்
பிரதான மைத்துனராயனே
பெருகு மலர்ப்புனல்வாவி திகழ் பனசைப்பதி
மேவும் சிரஞ்சீவி மாருதியோடும்
செம்மலும், செருக்கும் நிறைந்த பனசைப்பதிக்
காடனிக் கோவில் மேவும்
கடப்பரியவாணை, கெடிப்பரவு சோணைக்
கறுப்பண்ண சுவாமி நீயே.

கட்டழகு உன்னுடைய காயாம்பு மேனியும்
கார்மேக வர்ண நிறமும்

காலிட்ட தண்டையொடு கிண்கிணிச் சலங்
கையும் கல கவிலென மணி ஓசையும்
இட்ட சல்லடமீது கட்டிவரும் கச்சையும்
இருக்கிவிடு தொங்கழகும்
இடையிலொரு சமுதாடு கட்டாணி நேருசம்
எனவழகு சிங்காரமும்
சட்டமுடனே அணிந்திட்ட வல்ல வேட்டுல்லா
சமும் சரிகையுட சோமனழகும்
தளதளெனவேமாரி வருஷமொரு பூணூல் சரம்
பளிபதக்கமுடனே
பொட்டிட்ட கஸ்தூரி, சந்திரகாவியுடன்
வந்து பேரழகு காக்ஷிதருவாய்
பெருகு மலர்புனல்வாவி திகழ்பனசைப்பதி
மேவும் வீரபத்திர சாமியோடும்
மாவும் பலாவும் நிறைந்த பனசைப் பதிக்
காடனிக் கோவில் மேவும்
கடப்பரியவாணை, கெடிப்பரவு சோணைக்
கறுப்பண்ண சுவாமி நீயே.

நிறையாயுள பவுஷித நற்புத்திரரும் பெற
வேண்டும் நின் பெயர் தரிக்க வேண்டும்
நீயெங்கள் குலதெய்வம், நாங்கள் உன் குடி
யென்று நேசித்து வந்த பேர்க்கு
குறை தவிரவே தெய்வ வல்லியடையும், மற்றுள்ள
குடிலமும் தீர்த்து நானே
குஞ்சு தந்தேனென்று தீருநீறு நீ தரக் கும்பிட்டு
வாங்கும் அடியார்
முறை முறைமிகுந்து நல்ல ஆண் பெண்களைப்
பெற முழுக் குடிகளாக்கி வைத்து
முத்துக்கறுப்பன், கறுப்பாயி யெனவே முப்பேரு
நீ கொள்ளுவாய்.

பிறைநுதற் கனியிதழ் பெண்களிரு பெண்
களில் பெருகிடுங் கயல்வந்துதிக்க
பெருகு மலர்ப்புனல்வாவி திகழ்பனசைப் பதி
மேவும் பெரிய கறுப்பண்ண சுவாமியோடும்
வாழையும், சோலையும் நிறைந்த பனசைப்
பதிக் காடனிக் கோவில் மேவும்
கடப்பரியவாணை, கெடிப்பரவு சோணைக்
கறுப்பண்ண சுவாமி நீயே.

வெள்ளை கண்டிடமெலாம் அதுவும் வலிட்
டதிலே வெறும் பிலிக்கிப் பிலிக்கி
வெண்முட்டை, கருவாடு, செங்குட்டி, சா
ராயம். வேண்டுமென்றெண்ணி வாங்கி
கொள்ளைகொண்டுண்டு திரியும் பேய்களின் வாயில்
முக்குறுணிமண் போட்டறைந்து
கோடங்கி சொன்னவன் உடுக்கையும்
நொறுக்கி அவனைக் குரடாவினாலடித்து
கள்ளவன் பேய்களை மிதித்தேறுவாயுனக்குக்
காணிக்கை நேர்ந்து வைத்தாலும்
கருமலடன், மலடியும் மறு வருடம் வரும்
போது கைப்பிள்ளை யுடன் மூவராய்
பிள்ளையும் தாயும் பிதாவும் முன் சாலையில்
பேரிட வரப் பண்ணுவாய்
பெருகுமலர்ப்புனல்வாவி, திகழ்பனசைப்பதி
மேவும் சங்கிலிக் கறுப்பண்ணனோடும்
சிம்மமும், கடுவாயும் நிறைந்த பனசைப்
பதிக்காடனிக் கோவில் மேவும்
கடப்பரியவாணை, கெடிப்பரவு சோணைக்
கறுப்பண்ண சுவாமி நீயே.

வீறுசிங்கள மீனம், மலையாளம், யாழ்ப்பாணம்
மிகுகலிங்கம், கன்னடம்

மிக்கமகதங், குருகு, டில்லி, வங்காளம்,
விதர்ப்பம், பிரம்மாசலமராடம்
கூறுஐம்பத்தாறு தேசமும் திசைக்காவல்
கொண்டகாவல்காரநீ யே
கொல்லிமலை லமுதலானமலைகளெல்லாமுனது
கோட்டைத் தலங்களய்யா
நூறுபொன் செலவிடுந்தீராத பிணிகளை
நொடிக்குளே தீர்த்துவைத்து
நூதனக்குடியான சீதனக்குடியென்று
நூறாயிரம் கோடியாம்
பேருதந்தாட்கொண்டு குடிவந்துனது
பேர்கொண்ட கோலாகலா
பெருகுமலர்புனல் வாவி, திகழ்பனசைப்பதி
மேவும்பத்திரகாளி அம்மனோடும்
பசுக்களும், மான்களும், நிறைந்த பனசைப்
பதிக்காடனிக்கோவில் மேவும்
கடப்பரியவாணை, கெடிப்பரவுசோணைக்
கறுப்பண்ண சுவாமிநீயே.
சன்னதம்கொண்டுதலைசுற்றிச் சுழன்றாடும்
சண்டிப்பிசாசையெல்லாம்
சுடுதியில்பேர்சொல்லச் சொல்லிச்சடையெடுத்துத்
தந்துதமக்குரிய காவுகேட்டு
சொன்னதங்கெடுவுதவறாமல் காவுதொடு
தூவுசாம்பிராணிவாடை
சுருக்கிலேகல்தூ க்கியோடுயூர் தாண்டிவெகு
தொலைவிலொரு பெருமரத்தில்
தன்னிலை பொருந்திமுன் தொடுகன்னியர்க்கு
விடுதலைதந்து வாய்பொத்தியே
கைகட்டிதுயேபணிஉ னைவணங்கும் நினது
சந்நிதிவிசேட மகிமை

கண்ணேறு, நாவேறு, ஏவல், பில்லிசூனியத்
தைமுறியடித்திடும் கறுப்பா
பெருகுமலர்புனல்வாவி, திகழ்பனசைப்பதிமேவும்
ஆதிசிவன் திருமாலோடும்
பார்வதியும்லெட்சுமியும் நிறைந்திருக்கும்
காரைநகர்க்கோவில் ஸ்தானம்மேவும்
கடப்பரியவாணை, கெடிப்பரவுசோணைக்
கறுப்பண்ண சுவாமி நீயே.

தீவட்டியுடன் மிக்கபகவர்த்தி நிலைபட்ட
சிங்காரமொருபாரிசம்
தீபதூ பப்புகைசாம்பிராணி வாசமொடு
தெய்வங்களொருபாரிசம்
வாய்விட்டதட்டியே திருட்டுப்பிசாசுகளை
வகைகேட்பதொருபாரிசம்
வகைகேட்டுருக்கியே, சவுக்கடியினால் நீ
மாறுமாறென்பதொருபாரிசம்
நீவிட்டுவிடுசாமி நான் போரேன் போரேன்
என்று நின்றழுவதொருபாரிசம்
நெற்றிமயிர்சுற்றியே நிறையாணியால் அறைந்து
திருநீறணிகுவது ஒரு பாரிசம்
பேய்வெட்டிகாளை மேற்காளை மேற்சன்ன
தம்பிரதானி கேளுமப்பா
பெருகுமலர்ப்புனல் வாவி, திகழ்பனசைப்பதி
மேவும் ஆற்காடு நேமம்பழநியப்பன் முத்துக்
கறுப்பனோடும்

பூமகளும் நாமகளும் நிறைந்திருக்கும் காரை
நகர்க்கோவில்ஸ்தானம் மேவும்
கடப்பரியவாணை கெடுப்பரவுசோ ணைக்
கறுப்பண்ணசுவாமி நீயே.

□□□

உ

ஆதிசங்கரர் அருளிச் செய்த
சௌந்தர்ய லஹரி—அம்பிகை அழகின் அலைகள்
தமிழ் மொழிபெயர்ப்பு

தமிழாக்கம் : பண்டித மு. முத்து வேங்கடாசலம்

சிவமாம் பொருளுடன் சத்தியும் சேரில் செயல்வலிதே;
இவள்தான் பிரிவில் இயங்கற் கரிதென்(று) இருக்கியம்பும்;
நவமாம் புவனத்து மூவர் பரவிடு நாயகி தாள்
அவனியில் செய்தவம் இல்லார் பணிதல் அரியதொன்றே.

பஞ்சார் அடித்தா மரைநுண் துகள் சேர்த்துப் பாரடங்க
அஞ்சம் உயர்த்தோன் படைப்பன்; அரவாம் அரியுமதை
விஞ்சும் தலை ஆயிரத்தால் தரிப்பன்; விடையவனும்
வஞ்சி! பொடி செய்து நீறணிவான்; நின் மகிமையிதே.

உள்ளிருள் ஓட்டும் கதிர்சூழ் அருக்கன் உதய நகர்;
எள்ளும் சடர்க்கது சைதன்யக் கொத்தின் இழி நறவே;
உள்ளும் வறிஞர்க்குச் சிந்தாமணியின் ஒளித்திரளே;
அள்ளற் பவக்கடற் கேழல் மருப்பாம் அடித்துகளே.

மன்னிய மூவர் கரத்தால் அபயம் வரந்தருவர்;
அன்னை! நீ கையால் அளித்திலை; ஈதோர் அதிசயம்நின்
பொன்னார் திருவடியே முத்தி போகம் புகழ் அளிக்கும்
மின்னாயிரம் ஒரு மெய் வடிவாகி மிளிர் கொடியே!

மண்ணில் வணங்கச் சுபந்தரு நின்னைஅம் மாலவனார்
எண்ணி வழிபட மோகனப் பெண்ணாகி ஈசன் உளத்து)
எண்ணில் மயல் விளைத்தார்; மாரன் வந்தித் தெழில் உருப்பெற்(று)
உண்மை முனிவர் உளத்தில் பெரு மோக மூட்டுவனே.

காமன் தனுமலர், நாண் தும்பி அம்பைந்து காமர்மலர்
சேம அமைச்சன் வசந்தன் இரதம் திரி வளியே
நாமம் அனங்கன் நின் கட்கடை நோக்கில் நனைந்தமையால்
பூமி அடங்கலும் வெற்றி கொண் டன்னை! பொலிகுவனே.

மேகலையாள் கரிக் கும்பம் நிகர்க்கும் மிளிர் நகிலாள்
யூகத் துணர் சிற்றிடையாள் நிறைமதி ஒண் முகத்தாள்
ஆகுங் கழைவில் மலர்க்கணை பாசமொ டங்குசஞ்சேர்
வாகைக் கரத்தாள் திரிபுரை! என்முனர் வந்தருளே!

சேரமு தக்கடற் கற்ப தருமணித் தீவில்வடி
வாருங் கதம்ப வனநிறை சிந்தா மணிமனையில்
ஆருஞ் சிவமெனு மஞ்சம் பரசிவன் அங்க மொளிர்
சீரார் சிதானந்த வெள்ளம்! நினைச்சிலர் சிந்திப்பரே.

மூலம் மணிபூ ரகம் லிங்கம் மார்பு முதுகளமே
நீலப் புருவநடு, புவி நீர் அனல் கால் வெளியே
ஆலு மனமாஞ் சுழுனை வழிபிளந் தாயிரந் தோ (டு)
ஏலுங் கமலத்தில் அன்பரொ டானந்தம் எய்துவையே.

தாளிணை தம்மிற் பெருகும் அமுதம் தனுமுழுக
மீளப் பதங்கள் கடந்துபின் மூலம் விரைந்தடைந்து
வாளாவென்ன வளைந்து மரைநூல் வடிவமுடன்
நாளும் அறிதுயில் செய்குவை சச்திதானந்த மின்னே!

சத்தி சிவகோணம் ஐந்து நான்கென்று தனித்தியம்பும்
நத்தும் அவ்வொன்பது கோணத்துள் நாற்பத்து
நான்கிலகும்
சித்தி வலயம் தளம் இரு நான்குடன் சேர்பதினா(று)
ஒத்தெழும் வட்டம் சதுரம் உமைபாதம் உற்றனவே,

ஆதி!உன் மேனி எழில்காண் அவாவில் அமரர்திரு
மாதர், தவத்தும் பெற இயலாச்சிவன் வண்ணமதில்
பேதமில் ஐக்கியம் தான் வேண்டிடுவர்; பிரமனும்இங்(கு)
ஏது தெரிந்துநின் மேனி யழகை இசைப்பதுவே?

நரைசேர் கிழவன் உருவிலி இன்பநலம் அறியான்
உரைநின் மலர்க்கண் கொழிக்குங் கருணையின்
ஊடணுகின்
கரையி லரிவையர், காமன் என எணிக் கார் குழலும்
சரிய உடையும் நழுவ நாண் போயவற் சார்குவரே.

சேர்க்கும் அறுபதெனும் எண்ணில் நான்கு, திகழுமெட்டு
நீக்கி இரண்டுபின் கூட்டி இருமூன்று நீக்கி நிரல்
பூக்கும் ஈராறுடன் கூட்டி நான் கேற்றி ஐம் பூத மனத்(து)
ஆக்கம் பெறுகதிர் மேற்பொலி யும்தாய் அடிமலரே.

அன்பாய்ச் சரற்காலத் தண்மதி மேனியும் அம்பிறைசேர்
பண்பார் முடியும் வராபயம் நூல்நற் பளிங்குவடம்
இன்பார் கரம்நான் கினைஉள நினைப்பார் இனித்திடுதேன்
நன்பால் அமுதாய் மதுரக் கவிதை நவிலுவரோ,

இன்சொற் கவிஞர் மன நளி னத்தின் இதழ் மலர்த்தும்
இன்ப இளவெயில் காந்தி அருணம் இலங்கு நினை
உன்னி உணர்பவர் வெண்ணிற வாணி உவகையலை
மன்னுங் கலை நலத்தால் இவ்வுலகை மகிழ்விப்பரே.

இந்து நிறங்கொளும் வாக்கினர் எண்மர் எழில்வசினி
முந்து வனிதையர் சூழும்பரை! நினை முன்னுபவர்
சுந்தர வாணி முகத்துப் பரிமளம் தோய் கவியால்
சிந்தை திறைகொளுந் தேன் மொழிக் காப்பியம் செய்குவரே

உன்றன் நிறமாம் இளங்கதிர்ப்பானு ஒளிர் சிவப்பில்
நின்றிவ் வுலக முழுகு நலம் உள் நினைபவரை
வென்றிப் பிணைவிழி ஊர்வசி யானோர் விழைகுவரால்;
ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்த ஒளிப் பொருளே!

அளியார் கமலத்தில் அம்பிகை! விந்துநல் லானனமே
ஒளி சேர் அதன்கீழ், இணை நகில், கீழாக யோனி அதில்
தெளிவுடன் சிந்தித்துக் காம கலையைச் செபித்திடுவோர்
வளிசேர் சுடர்முலைப் பூமி மகளை மயல் செய்வரே.

பொங்கு கிரணம் பரவி அமுதம் பொழிபவளாய்த்
தங்கெழில் சந்திர காந்தச் சிலையுருச் சார்ந்த நினைக்
கங்குல் பகல் நினைப்பார் விடந்தீர்ப்பர் கலுழனைப்போல்
மங்கை! அமுதம் பொழிவிழியால் சுரம் மாய்ந்திடுமே.

மின்னற் கொடி போல் விளங்கிக் கதிரோன் விதுவொடங்கி
மன்னும் உருவுடன் முண்டகம் ஆறின் வழிகடந்தே

உன்னும் இதழாயிரத் தாமரையுள் ஒளிர் கலையைப்
பன்னு மெய்ஞ் ஞானியர் தூய மனத்தால் பருகுவரே.

அன்னை! ''பவானி நீ என்பால் அருள் நோக்கருள்க'' எனப்
பன்ன விரும்பிப் 'பவானிநீ' என்று பகர்ந்தளவில்
அன்றப் பொழுதே மகவான் அயன் மால் அணி முடிகள்
மன்னு மணிவிளக் கேற்றும் அடிப்பூ வழங்குவையே

செங்கதிர் மேனி சொரியும்; விழிமூன்று சேர்ந்தொளிரும்
கொங்கை இரண்டால் உடல் கூனும்; நீள்முடிக் கொண்டைதனில்
தங்கும் இளம்பிறை; பாதி உடலை நீ தான் கவர்ந்தும்
கொங்கலர் பூங்குழலாய்! வலப்பாகமுங் கொண்டனையே,

ஆதி! பிரமன் உலகினை யாக்குவன்; அச்சுதனோ
மேதினி காத்திடுவான்; சிவன் நீக்கும் வினைபுரிவான்;
மாதே! மகேசன் மறைத்திடுவான் அச் சதாசிவனோ
ஆதியனைத்தும் அருள்வான் நின்பூருவின் ஆணைபெற்றே.

மூவர் குணமூன் றுதித்தவர் சென்னி முகிழ்த்திடுகை
தாவில் மணி முடி தாங்கி நின் சேவடி தாழ்ந்து நிற்பர்;
தேவி! நின் பாதாம் புயத்துச் சொரிந்திடு தேன்மலர் அத்
தேவர் மணிமுடி தம்முளுஞ் சேர்ந்து திகழ்வுறுமே.

கஞ்சன் முகுந்தன் தருமன் தனதன் கருதும் எண்மர்
எஞ்சலில் ஈரேழ் மனுவந் தரத்துவாழ் இந்திரரும்
துஞ்சும் அப்பேரூழிக் காலத்தும் நின்றன் துணைவர், அருள்
விஞ்சும் சதி! உனைக் கூடிக் களிப்பர்; நின்மேன்மையிதே.

அகத்தொளியே! என் மொழிகள் சபமாயமைந்திடுக!
இகத்தே அனைத்துக் கரத் தொழில் முத்திரை என்றுறுக;
சகத்தே நடப்பன நின்னை வலம் வரல்; சாரும் உணா
மகத்தாகுதியாய்க் கிடத்தல் வணக்கமாய் மன்னுகவே 27

காண்டகும் ஒன்பான் உடல் கொளுஞ் சம்பு, கதிர் மதியம்
ஆண்ட நகில் கொளும் நின்வடிவே; நீ அவன்வடிவே;

பூண்ட ஆனந்தம் சமமாம் பரன் பரை போலு நுமக்
காண்டான் அடிமைத் திறன் பொதுவாகி அமைந்திடுமே.

மனநீ வெளிநீ வளிநீ கனல்நீ மறி புனல்நீ
நினையும் புவிநீ நினக்குவேறாயொன் றும் நின்றதிலை;
தனது சிதானந்தப் பேருரு வத்தைச் சகவுடலாய்
அனை! எணி வேறுபடுத்தச் சிவகாந்தை ஆயினையே.

ஆதித்தன் அம்புலி அங்கி ஒளிசெயு மாற்றலிலாச்
சோதிப் புவன மடைந்துபே ரின்பச்சுவை நுகர்வான்,
ஓதுநின் ஆணைத் திகிரிக்குள் ஆலோன் ஒளிவடிவாம்
ஆதிப் பரசின் மயன் சம்பு பாதம் அடைந்தனனே.

உள்ளத் தடத்து மலர் ஞான சாரசத் துண்டுறைந்தே
விள்ளு மொலியால் அறு மூன்று விஞ்சை விரிந்திடச் செய்;
தெள்ளுறுகுற்ற நீர் தன்னிற் குணப்பால் இனிதெடுக்கும்
புள்ளிணை யன்னம் தமை இதயத்தினிற் பூசிப்பனே.

நிலையாம் இலிங்கத் தலத்திற் சிவ அனல் நீ கலந்தே
இலகிய தன்மை உளத்தால் இறைஞ்சுதும்; ஈசர்விழி
நிலவுறும் அங்கி, உலகைப் பொடி செய நின்கருணை
அலையெறி கண்நோக் கதனைப் புழைப்பித்தருள் செயுமே.

தினியு மிருளை விழுங்கி நிலைத்த மின்தே சுடனும்,
மணிபன்னிறப்பணி இந்திர வில்லொடும் மா சிவனாய்ப்
புணர்கதி ரால்தழல் பார், குளிர் மாரி பொழிந்தருளும்
மணிபூரகத்தமர் நீல முகிலை வணங்குவனே.

வித்தை விரும்பு மடியேன் அலத்தகமேவடி நீர்
உத்தமி! என்று பருகுவன்? சொல்! இயல்பூமையர்க்கும்
பத்திச் சுவைச் சொற்கவிதை அளித்திடும் பாரதியின்
வத்திரத் தம்பலச் சாறோ என அது மாண்புறுமே?

சொல்விற்பனங்கொண்டு நின்னன்பர் வேதாவைத்
[துன்புறுத்திச்
செல்வ வளங்கொழித் துத்திருநாரணன் சீர்சிதைத்தே
தொல்லைப் பசுபாசம் நீங்கிப் பல்லூழி துலங்கினராய்
வல்லி! 'பரானந்தம்' என்னுஞ் சுவையினை மாந்துவரே.

□